வாழ்க்கை வரலாற்று வரிசை - நூல் 1.

Biographical Series No. 1.

இராமலிங்க அடிகள் வரலாறுந் : : : : திருவருட்பா ஆராய்ச்சியும்

(The Life of St. Ramalingam & a Critical Study of Thiruvarutpa)

Printed at the SADHU PRESS,
Royapettah, Madras.

இராமலிங்க அடிகள்

மறைமலையடிகள் கல்விக் கழக வெளியீடு. 1.

இராமலிங்க அடிகள் வரலாறுந் திருவருட்பா ஆராய்ச்சியும்

ADIGAL
...ARY

ஆசிரியர் மறைமலையடிகள் மாணாக்கரும்,
கழக ஆசிரியரும்,
முன்னே 'செந்தமிழ்ச் செல்வி'யின்
இதழாசிரியரா யிருந்தவருமான
T. S. பாலசுந்தரம் பிள்ளையவர்கள்
எழுதியது.

மறைமலையடிகள் கல்விக் கழகம்,
பரங்கிமலை.

விலை அணா 9. செப்டம்பர், 1930.

Copy Right

PANDIT. T. S. BALASUNDARAM PILLAI

பொருளடக்கம்

I முகவுரை

II இராமலிங்க அடிகள் வரலாறு

1. திருத்தணிகைக் காட்சி
2. திருவொற்றியூர்ச் சேவை
3. தில்லைக் காதல்
4. விரிவுரைத் தொண்டு
5. வடலூர்ப் பெருவெளி

III திருவருட்பா ஆராய்ச்சி

முதல் ஆயிரம்

முகவுரை

இராமலிங்க அடிகளின் வரலாறும் அவர் உலகுக்குச் செய்தருளிய தண்டமிழ்ச் சிவத் தொண்டும் முன்னாசிரியர் ஒழுகலாறுகளோடு முரணாதனவாய் அவற்றிற்கு ஆக்கந் தேடுவனவாய் விளங்குதலின், அவ் வருமைப் பெரியார் பண்டைப் பெரியார் பண்டெழுந்த ஆசிரியர் தொல்காப்பியர், திருவள்ளுவர், மாணிக்கவாசகர், திருமூலர், திருஞானசம்பந்தர், சேக்கிழார் முதலான தென்னாட்டுத் தண்டமிழ்ச் சீர்திருத்தப் பேராசிரியர்களோ டொருவராய் யாஞ்செய் தவத்தால் எம்மிடையே எழுந்தருளிய வள்ளலாவரென்று எம் உணர்வுக்குணர்வாய்த் தெளியப் பெறுகின்றேம். அவ்வியல்பை நந்தமிழுலகத்துக்கு விளக்கிக் காட்டுதல் இன்றியமையாததாகலின் இந்நூல் எழுவதாயிற்று.

இதன்கண் அடிகள் செய்தருளிய சீர்திருத்தத் தொண்டுகள் சிறந்த ஆராய்ச்சி முறையிற் செவ்வையாய் விளக்கப்பட்டிருக்கின்றன. இவரொப்பக் கோட்பாடு வழுவாமற் சீர்திருத்தஞ் செய்தலே நாட்டின் முன்னேற்றத்துக்கான உண்மைச் சீர்திருத்தமாகும். இந்நூல் எழுதப்பட்டு நான்காண்டுகள் ஆயினவேனும், பண்டைச் செந்தமிழ் நெறியினைக் கோட்பாடு வழுவாமற் பேணுங் கடப்பாடு உடைய உயர்ந்த 'கல்விக் கழகம்' ஒன்று இத் தமிழகத்தில் தோற்றி நிலைப்பித்தல் வேண்டுமென்னும் உட்கருத்தும் அந்நாள்

தொட்டு எமக்கு இருந்தமையின் இஃது இதுகாறும் அச்சிடப்படாமல் இருந்தது. அங்ஙனமொரு 'கல்விக் கழகம்' திருவருளால் இப்போது தோற்றப்பட்டமையின், இந்நூல் உடனே வெளிவருவதாயிற்று.

ஈயிற் சிறியேமான ஏழையேமும் நினைக்கின்றபடியெல்லாம் ஒழுங்குபட நிறைவேற்றி வைக்கும் எம் இன்னுயிர்ச் செல்வமான சிவபெருமானையும், ஆசிரியரடிகளையும், அன்பர்களையும் யாம் மறக்கும் கொடுதானும் உளதுகொலோ? அவரனைவர்க்கும் எமது வணக்கமும் அன்பும் உரியவாகுக!

மறைமலையடிகள் கல்விக் கழகம்,
பிரமோதூத, புரட்டாசி, கஙு. } இளவழகனார்.

ஓம் சிவம்

இராமலிங்க அடிகள் வரலாறு

க. திருத்தணிகைக் காட்சி

காவிரி வளம்பெருக்குஞ் சோழநாட்டில், தில்லைக்கு அடுத்த மருதூரில், கணக்கர் பெருங் குலத்தில், தவத்திருவுடைய இராமைய பிள்ளை சின்னம்மை என்பார்பால், சுபானு ஆண்டுப் புரட்டாசித் திங்களில், அருளொழுக்கங் கொழுந்துவிட்டுத் தழையுமாறு இராமலிங்க அடிகள் தோன்றியருளினர். இராமலிங்கம் என்பது அவருக்குப் பிள்ளைப் பெயர். அவர் அவ் வருமைத் திருப்பெயர் அணிந்து இளந்திங்களின் வளர் நிலவெனத் திகழ்ந்து, பெற்றோரும் மற்றோரும் ஆவலாய்க் கண்டும் மெய்தொட்டும் இன்புறும்படி வளர்ந்து வந்தார். பிறந்த ஐந்தாந் திங்களில், தாய் தந்தையர் இருவருந் திருவருளைத் தொழ நினைந்து குழந்தையைக் கையிலேந்தித் தில்லையம்பதிக்கு வந்து பொன்னம்பல மணைந்து அம்மையப்பரின் அருளொழுகுந் திருநடத்தைச் சேவித்தெழுந்து தம் இரண்டு கண்களுங் களிப்பெய்தி அன்புத்துளி சிந்த அகமுருகித் திருமுன் நின்றார். அப்போது அடிகள் தம் அருமைத் தாயாரின் கையிலிருந்தபடியே ஆண்டு விளங்கிய தெய்வத் திருநடனத்தைக் காணப்பெற்றுக் கண்

னுங் கருத்தும் மகிழ்தூங்குங் குறிப்பயலாய்க் குறு நகை கொண்டு தமது வினை நலம் விளக்கியருளி னார். ஏனையோர்க்கெல்லாம் எளிதில் விளங்கமாட்டாத திருச்சிற்றம்பலக் காட்சிகளெல்லாம் அப்போது பிள்ளையார்க்கு விளக்கமாய் வெளிப்பட்டன. இவ் வருமைப்பாட்டை ஆண்டு நின்ற அருட்செல்வர்களெல்லாருங் கண்டு இறும்பூதுற்று இவ் வருமைக் குழந்தை பொன்னம்பலத்துத் தெய்வக் குழந்தையேயாகும் என மொழிந்து ஏத்தெடுத்து, அவர் தாய் தந்தையரின் பெறலருந் திருவருட்பேற்றை நினைந்து புகழ்ந்து கூறினார். இவ் வருஞ்செய லுண்மையை அடிகள்,

"தாய்முதலா ரொடுசிறிய பருவத்தில் தில்லைத்
தலத்திடையே திரைதூக்கத் தரிசித்த போது
வேய்வகைமேற் காட்டாதே என்றனக்கே எல்லாம்
வெளியாகக் காட்டியவென் மெய்யுறவாம் பொருளே"
—(ஈ, அருள்விளக்கமாலை, ௪௪)

எனப் பின்னொருகால் நினைந்து பாடுதலும் இங்கு நினைவுகூரற்பாலது.

ஆறுந் திங்களில் தம் தந்தையார் மண்ணுலகு நீத்தலும், பின்னர்ச் சில திங்கள் கழித்துத் தம் தமையனாரோடு சென்னைப்பட்டினஞ் சேர்ந்து பிள்ளையார் ஐந்தாண்டு நிரம்பினர். எண்ணெழுத்துக் கல்விகள் சிறிது தேர்ந்தபின் தமையனார் சபாபதி பிள்ளையென்பார் தம்பி இராமலிங்கத்தை இலக்கண விலக்கியப் பொருட் கல்விகள் பயிற்ற வெண்ணிச் செந்தமிழ்ப் புலமை மிக்க அறிஞரொருவர்பால் விட்டபொழுது,

அவ்வறிஞர் பிள்ளைப் பெருமானுக்கு இயற்கையேயுள்ள தீவிர மெய்யறிவை உணர்ந்து அவர்க்குக் கற்பிக்குந் தொழிலை மெல்ல நெகிழவிடுவாராயினர். அக்காலத்தில் நம் பெருமானுக்கு ஒன்பதாம் ஆண்டு நடைபெற்றது. அத்தகைய சிறு பருவத்திலேயே அடிகள் அருகிருந்த கந்தப்பெருமான் திருக்கோயிலுக்கு நாடோறுஞ் சென்று, பெருமானை வலம் வந்து திருமுன் நின்று மிக்க வணக்கத்துடன் பொருளுணர்ந்து சில வணக்கப் பாட்டுகள் கூறி அப் பெருமான்பால் அகங் குழைவது வழக்கம். இவற்றையெல்லாந் தமையனார் சபாபதி பிள்ளை சிறிதும் அறிய மாட்டாராயினர். அதனால், அவர் 'நம் அருமைக் குழந்தை ஆசிரியர்பாற் கல்வி பயிலாமல் வீணாய்க் காலங் கழிக்கின்றது' எனக் கவன்று எங்கும் புறங் கூறி வந்தார். பிள்ளையார் அஃதுணர்ந்து தம் தமையனாது உள்ளத்துக்கு ஓர் அமைதி தர விரும்பி அது முதல் தாம் ஒழுங்காகப் படித்துக் கொள்வதாய் அவர்க்கு உறுதி கூறினார்.

முருகப்பெருமான் திருவுருவக் காட்சியில் அழுந்திய நினைவுடையராய் அவ்வண்ணம் விளங்கிய அடிகள் ஒரு நாள் மாலைப்பொழுதில் தமது வீட்டின் தனியறையொன்றிற் சென்று, ஆங்குச் சுவரில் தொங்கிய ஒரு நிலைக்கண்ணாடியின் முன் திருவிளக்கும் பூ பழம் தேங்காய் முதலியனவும் வைத்துக் கருப்பூரம் ஏற்றித் தமது அறிவை ஒருமுகப்படுத்தித் திருவருளில் தோய்ந்து நின்றார். முன்னைத் தவத்தால் ஒரு நெறிய மனம் வைத்த பெருமானுக்கு அப்பொழுது தணிகை

முருகன் அருளுருவம் அதன்கண் தோன்றிற்று. பிள்ளையார் அவ் வரும்பெருந் திருவருட் காட்சியைக் கண்குளிரக் கண்டார். வியந்து நெக்கு நெக்குருகினார். அவருக்கு மெய்ம்மயிர் பொடித்து வியர்வை அரும்பிற்று. கண்மழை விண்மழையெனப் பொழிந்தது. உலக உணர்ச்சிகள் ஏதும் அவருக்குத் தோன்றவில்லை. தம்மையும் மறந்து அவர் அத் திருவருளின்பத்திலேயே தேக்கினார். அப்போது பிள்ளைப் பெருமானுக்கு அத் தணிகை முருகன் திருவருளால் துறைசேர்ந்த கல்வியறிவும், அளவுபடாத மெய்யுணர்வும், சைவச் செந்தமிழ்த் தீஞ்சுவை ததும்ப ஊறிப் பாடும் உண்மைத் திறனும் மேன்மேலுங் கிளர்ந்தெழுவவாயின. பிள்ளையார் சென்னையிற் கந்தப்பெருமானை வழிபட்டு வந்த பொழுது திருத்தணிகை மலையின் அருமை பெருமைகளை அடிக்கடி கேட்டு அதனை இடைவிடாமல் அவாவி நின்றமையால், தணிகை முருகன் திருவுருவம் அக் கண்ணாடியில் தோன்றி அவரை ஆட்கொள்வதாயிற்றென்று உணரல்வேண்டும். உடனே அக் கண்ணாடியில் விளங்கிய அண்ணல் அறுமுக முருகனை நம் அருமைத் திருவருட் பிள்ளையார்,

“சீர்கொண்ட தெய்வ வதனங்கள் ஆறும் திகழ்கடப்பந்
தார்கொண்ட பன்னிரு தோள்களும் தாமரைத் தாள்களும்ஓர்
கூர்கொண்ட வேலும் மயிலும்நல் கோழிக் கொடியும்அருள்
கார்கொண்ட வண்மைத் தணிகா சலமும்என் கண்ணுற்றதே*”

என்பதை முதற்பாட்டாகத் தொடங்கி அதுமுதல் முப்பது பாட்டுக்களால் தாம் கண்ணுற்ற வியல்பை

* ‘கண்ணுற்ற’தென்பது ஒருமைப் பன்மை மயக்கம்.

உண்மை வழுவாமற் கூறி நாவார வழுத்தினர். திருஞானசம்பந்தப் பெருமான் பால்மணம் மாறு மூன்றாண்டுச் சிறுமதலையாயிருந்து இறைவன் அழுகை தீர்க்க அம்மையின் சிவஞானப்பால் உண்டு திருவருள் பெற்ற ஞான்று அப் பெருமான்பால் "தோடுடைய செவியன்" என்னுந் திருப்பாட்டு முதன்முதல் எழுந்தாற்போல், இராமலிங்க அடிகள்பாலும் "சீர் கொண்ட தெய்வ வதனங்கள் ஆறும்" என்னும் இத் திருவருட்பாட்டே முதன் முதல் எழுவதாயிற்றென்க.

அன்றுமுதல் நம் அருண்ஞான வள்ளல் தணிகை முருகன் தண்ணாருளால் இழுக்கப்பட்டுக் குழைந்த நெஞ்சுடையராய் அடிக்கடி அப் பெருமானை வாய் குளிரப் பாடிப் பரசி வந்தனர். அங்ஙனம் பாடிய அருட் பாட்டுகளெல்லாம் இப்பொழுது திருவருட்பாவில் ஐந்தாந் திருமுறையின் திருத்தணிகைப் பதிகங்களாகத் திகழுகின்றன. இப் பதிகங்களில் இப்போது ஐந்நூற்று ஐம்பத்தொன்பது அருட்பாட்டுகள் அடங்கியிருக்கின்றன. தணிகைப்பெருமானை இவ் வைந்நூற்று ஐம்பத்தொன்பது அருட்பாடல்களாற் பாடி வழுத்துங் கால அளவை வரையில் தணிகை மலையைச் சார்தற்கு அளாவுபடாப் பேராவல் வள்ளற்பெருமானுக்குப் பல தடவைகளிற் பெருகியெழுந்தது.

ஆனால் அக்காலத்தில் அவர் மிகவும் இளம்பருவமுடையராய்த் தந் தமையனாது கட்டுத்திட்டத்துக்கு அடங்கியிருந்தமையால், ஒரு தடவைகூட அவர் தணிகை மலையை எய்தப் பெற்றிலர். வள்ளலார் அஞ்ஞான்று திருத்தணிகையை எய்திற்றிலர் என்ப

தற்கு அவ் வைந்தாந் திருமுறைப் பாடல்கள் முழுவதும்,

"நணியே தணிகைக்கு வாவென ஓர்மொழி நல்குவையே"

"நண்ணேனே மகிழ்வினொடுந் திருத்தணிகை மலையதனை"

"தணிகை மலையைச் சாரேனே"

"தன்நாயகனார் தணிகா சலனார்
தனிவந்து இவண் மாறந்தாரே"*

என்னுந் திருமொழிகளும், "எண்ணப் பத்து" "நாளெண்ணி வருந்தல்" முதலான தலைப்புப் பெயர்களுங் காணப்படுகின்றமையும், தணிகையை அடைந்ததாகக் காட்டுஞ் சிறு குறிப்பும் அதன்கண் எங்குங் காணப்படாமையுமே உரிய சான்றுகளாகும். தணிகைத் திருப்பதியைச் சாராமையால் ஐயகோ அடிகள் மேன்மேலுங் காதல்நிலை கைம்மிகப் பெறுவாராய்ப் பிரிவாற்றாது வருந்தி அவ்வப்பொழுதும் நெக்குருகுவர்.

பிள்ளைப் பெருமான் தமது சிற்றிளம் பருவமான இக்காலத்திலுந் திருவருள் நெறியுணர்ந்த சிறந்த பேரருட் சான்றோராய் விளங்கினமை,

"அன்றோர் வடிவ மேருவிற்கொண்டு
அருளுந் தூய அற்புதமே"

(ரு, செல்வச் சீர்த்திமாலை, அ)

"நீயும் நானும் ஓர் பாலும் நீருமாய் நிற்க வேண்டினேன்"

(ரு, ஆற்றாமை, அ)

என்னும் அவர்தந் தணிகைப் பிரான் பாட்டுக்களா

* 'மாறந்தார்' என்பது நீட்டல் விகாரத்தால் முதல் நீண்டது.

லேயே நன்கு தெளியப்படும். தணிகை முருகனது திருவருட்பேறு தமக்குத் தமது ஒன்பதாம் ஆண்டிற் கிடைத்ததாக அடிகள்,

"தூண்டா விளக்கே திருப்பொதுவிற்
சோதிமணியே ஆறொருமூன்று
ஆண்டா வதிலே முன்என்னை
ஆண்டாய் கருணை அளித்தருளே"
(௬, வாதனைக்கழிவு, எ)

எனவும், அப்பொழுதே தமக்குச் செந்தமிழ்ப் பாட்டுகள் பாடுந் திறனும் உடன் எய்தியதாக,

"உருவத்திலே சிறியேனாகி யூகத்தில் ஒன்றும்இன்றித்
தெருவத்திலே சிறுகால்வீசி ஆடிடச் சென்றஅந்தப்
பருவத்திலே நல்லறிவு அளித்தேஉனைப் பாடச்செய்தாய்
அருவத்திலே உருவானோய்நின் தண்ணளி யார்க்குளதே"
(௧, திருவருண் முறையீடு, ௪௮)

எனவுந் தாமே குறித்துரைத்தலுங் கருத்திருத்தற்பாலது.

இங்ஙனந் தமது ஒன்பதாம் ஆண்டிலேயே திருவருட் பொலிவுபெற்று இன்னிசை நிறைந்து பொருள் பொதிந்த இனிய செந்தமிழ்ப் பாட்டுகளைத் தெள்ளிப் பாடிவரும் நம் இராமலிங்க அடிகளின் அருளொழுக்கம் யாவர்க்குந் தெரியாத நிலைமையில் இருந்தது. இவ்வாறு இரண்டாண்டுகள் கழிந்தன. சென்னைக் கந்தகோட்டத்துத் 'தெய்வமணி மாலை'யும், 'கந்தர் சரணப்பத்து', 'சண்முகர் கும்மி', 'சண்முகர் காலைப்பாட்டு' முதலியனவும் அடிகள் அருளிச் செய்தது இக்காலந்தான். ஒருநாள் தம் தமையனார்

ஓர் அவையின்கண் செய்யவேண்டிய திருஞானசம்பந்தர் வரலாற்று விரிவுரையை அடிகள் நிகழ்த்தும்படி நேர்ந்தது. திரளான அன்பர்கள் அவை நிரம்பக் குழுமி யிருந்தனர். அஞ்ஞான்று அடிகள் அவ் வரிய வரலாற்றுப் பெரும் பொருளை யெடுத்துச் சொல்லழகும் பொருள்வளமும் வரலாற்று நுட்பங்களுந் துறுமச் செவியின்பம் மிகுத்துக் "கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்பத்" தக்காங்கு விரித்துரைத்துத் திருஞானசம்பந்தரின் திருவடி மலர்களை வணங்கி நின்றார். வள்ளற் பெருமானது வளவிய தீஞ்சுவை விரிவுரையை, அது முற்றும் வரையிற் சிதறு நினைவுடன் அமைதியாய்க் கேட்டுக் கொண்டிருந்த அவையினரனைவரும் பெரிதும் இறும்பூதுற்று அப்படியே அவ் விரிவுரைத் தேன்பெருக்கிற் படிந்து மெய்ம்மறந்து போயினர். இவ் வருள் நிகழ்ச்சியிலிருந்துதான் சென்னையிலுள்ள அன்பர்கட்குந் தம் தமையனார் அண்ணியார் முதலான உறவினர்கட்கும் பிள்ளைப்பெருமானது தெய்வத் திறம் விளங்கிற்று. விளங்கவே, அவர் தமையனாரும் அண்ணியாரும் அவரைத் தம் உறவினராய் எண்ணுமல் தெய்வக் குழந்தையே இவண் வந்ததெனவெண்ணிப் பேரன்பும் பெரு மகிழ்ச்சியுங் கொண்டு அன்றுமுதல் அவர் உள்ளம் வியந்திடுமாறு திருப்பணிகள் செய்து வந்தனர். அறிஞர்கள் பலரும் அவருக்குத் தொண்டு பூண்டொழுகும் நீராய் அன்புடன் அவரைச் சூழ்ந்திருப்பர். இதிலிருந்து வள்ளற் பெருமான் காலையிலெழுகின்ற இளஞ் செஞ்ஞாயிறுபோல் எல்லார்க்குந்

தெரிவாராயினர். ஞாயிறொளிபோல் இவரொளியும் எங்கும் பரவிப் பயன் தந்தது. வள்ளலார் இதற்குப் பின் பாடிய திருவருட் செழும் பாடல்களெல்லாம் யாவர்க்குந் தெரியலாயின. இதனாற்றான் திருவருட்பா நான்கு திருமுறைகளாக முதலில் அச்சாய் வெளிப்பட்ட பொழுது இத் தெரிந்த பாடல்களே முதலிலிருந்து நான்கு திருமுறைகளாக வகுக்கப்பட, மற்று இதற்குமுன் இரண்டாண்டுகளாக மறைவிற் பாடி வைக்கப்பட்ட திருத்தணிகைப் பாடல்கள் முதல் திருமுறையாய் அமைதற்கு இடமில்லாமற் போயிற்று. அதன்பின் மறைவிற் கிடந்த தணிகைப் பாடல்கள் வெளிப்பட்டு ஐந்தாந் திருமுறையாய்ச் சேர்க்கப்படுதலுந் திருவருட்பா ஐந்து திருமுறையாகவும், பின்னொன்றுஞ் சேர்க்கப்பட ஆறு திருமுறையாகவும் வெளிப்பட்டு உலவுவதாயிற்று.

இவ்வாறாகப் பிள்ளைப் பெருமான் எல்லார்க்குந் தெரிந்தவராய்த் தம் குடும்பத்தவரால் அளவுக்கடங்காப் பணி செய்யப் பெற்று விளங்கியபொழுது, தம்மினும் மூத்தார் செய்யும் அப் பணியைப் பெற அவருக்கு நெஞ்சம் ஒருப்படவில்லை. ஆதலால் அவர் அக் குடும்பத்தினின்றும் உடனே விலகிக்கொள்ள விரும்பினார். அப்பொழுது அவருக்குப் பன்னிரண்டாம் ஆண்டு நடைபெற்றது. அவ் வாண்டு முதல் தமக்கு மேல் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையெல்லாம் அடிகள்

"பன்னிரண் டாண்டு தொடங்கி இற்றைப் பகலின் வரையுமே
படியிற்பட்ட பாட்டை நினைக்கின் மலையுங் கரையுமே"

எனவும்,

" ஈரா றுண்டு தொடங்கி இற்றைப் பகலின் வரையுமே
எளியேன் பட்ட பாட்டை நினைக்கில் இரும்புங் கரையுமே"
(௬, மெய்யருள் வியப்புமாலை, எஅ, எக)

எனவும் நெஞ்சங் கரைந்து மேலொருகால் அருளிச் செய்திருக்கின்றார். பிள்ளைப் பெருமான் வடலூருக்குச் சென்ற பின் தாம் திருவாய்மலர்ந்தருளிய 'பிள்ளைப் பெரு விண்ணப்பத்'தின் முதலிலிருந்து தமக்கு இப் பன்னிரண்டாண்டுக்குமேல் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் எடுத்துக் கூறிப் பின் அதன் இறுதியில் (கஉஉ),

" பன்னிரண் டாண்டு தொடங்கிநான் இற்றைப்
பகல்வரை நடந்தவை யெல்லாம்
உன்னிநின் றுரைத்தால் உலப்புறா தாதலால்
ஒருசில உரைத்தனன் எந்தாய்"

எனக் குறையிரந்து விண்ணப்பித்தலுங் காண்க. பின்பு தமது பதின்மூன்றும் ஆண்டிலிருந்து அடிகள் அக் குடும்பத்திற் கலப்பதை முற்றிலும் விட்டு நீங்கித் திருவருள் நினைவில் தோய்ந்து நின்றார்.

இத்துணை இளம்பருவத்திலேயே அடிகள் தமது அழகிய அருளுடம்பு பிறர்க்குத் தெரியாதபடி தூய வெண்துகில் கொண்டு முழங்கால் அளவில் நிற்குமாறு இடையில் உடுத்தும், முக்காடு இட்டு மேற்போர்த்தும் மறைத்து வருவார். கால்மேற் கால் போடுதல், உயர்ந்த இடத்தில் உட்காருதல், பிறருடன் வீண் பேசிக் காலங் கழித்தல் முதலான வன் செயல்கள் பிள்ளையார்பாற் சிறிதுங் காணப்படா. மக்களுடைய செயற்கை முயற்சிகள் மிக்கு விளங்கும் இடங்கள்

அடிகட்குச் சிறிதும் அமைதி தருவதில்லை. ஆதலால், முழுதுந் தெய்வ நினைவையே எழுப்பும் காடு மலை வெளி முதலான இயற்கைத் தனியிடங்களையே எந் நாளும் விரும்பிச்சென்று அங்கங்குந் திருவருள் நலத் திற் படிந்து மகிழ்ந்திருப்பார். இவையெல்லாம் ஆன் றடங்கிய வள்ளற் பெருமானது மல அடக்கத்தைத் தெளிவிக்கும் அரிய அடையாளங்களாகும். இவ் வியல்புகள்,

"மெய்யுறக் காட்ட வெருவி வெண்துகிலால்
மெய்யெலாம் ஐயகோ மறைத்தேன்"
(௬, பிள்ளைப் பெரு விண்ணப்பம், ௪அ)

"காலின்மேல் கால்வைக்கப் பயந்தேன்" ,, ௬௩

"காட்டுஉயர் அணைமேல் இருக்கவும் பயந்தேன்" ,,

"நீட்டிப் பேசுதலை நினைக்கவும் பயந்தேன்" ,,

"தேட்டிலே மிகுந்த சென்னையி லிருந்தால்
சிலுகுறும் என்றுஉளம் பயந்தே
நாட்டிலே சிறிய ஊர்ப்புறங் களிலே
நண்ணினேன் ஊர்ப்புறம் அடுத்த
காட்டிலே பருக்கைக் கல்லிலே புன்செய்க்
களத்திலே திரிந்துஉற்ற இளைப்பை
ஏட்டிலே எழுத முடியுமோ இவைகள்
எந்தைநீ அறிந்தது தானே" ,, ௫௪

என்னுந் திருவருட்பாத் திருமொழிகளாலேயே நன்கு விளங்குதல் காண்க.

உ. திருவொற்றியூர்ச் சேவை

அருள்வழிப்பட்ட பேரறிவுக்கதிர் நாற்புறமும் வீசப் பிள்ளைப் பெருமான் சென்னையில் விளங்கிய பொழுது செந்தமிழறிஞர், சைவநூற் புலவர், பிற மத வல்லுநர், வடமொழியாளர், மெய்யுரை கொள்வோர் முதலிய பல்வகையறிவின் பலதிறப்பட்டோர் பலருந் தமக்கு எழுந்த ஐயப்பசியை அவரது அருளுணர்ச்சியின் அறிவு உணவால் தணிவு செய்துகொள்ளுங் கருத்துடையராய் அவர்பால் அடிக்கடி நெருங்கிக் கூட்டமாய்ப் பெருகிவிடுவார்கள். வாய்மதங் கொண்டோரும் அணுகி வாதிட்டு அடங்கி யொழிவர். அவை யெல்லாந் தமது அருள்நினைவின் ஒருமைப்பாட்டுக்குப் பேரிடையூறாய் நிற்பது கண்ட வள்ளலார் சென்னை நகரைவிட்டு வேறிடஞ் செல்ல விரும்பினார். சென்னைக்கு அருகிற் சிவபிரான் திருக்கோயில்கள் அமைந்த சிறப்பான இரண்டு திருப்பதிகளில் திருவொற்றியூர் ஒன்று; மற்றொன்றாகிய மயிலாப்பூர் பெரும்பாலுஞ் சென்னையை யொத்து அதற்கு மிக அருகில் அமைந்திருத்தலால், சென்னைக்கு வேறாய்த் தனித்து இயற்கையழகுகள் மிக்கு விளங்குந் திருவொற்றியூரே அடிகட்குப் பெரிதும் விருப்பந் தருவதாயிருந்தது. ஆகையாற் குடும்பத்தினின்றும் விலகத் தலைப்பட்ட தமது பன்னிரண்டாம் ஆண்டு முதல் அடிகள் திருவொற்றியூர்க்குச் சென்று திருக்கோயில் வழிபாடு ஆற்றி ஆண்டுத் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்குஞ் சிவபிரானையும் உமையம்மையையும் உளங்குளிர

வழுத்திப் பல அருட்பாடல்கள் பாடத் தொடங்கினர்.

பிள்ளையார் இச் சிறு பருவத்திற்குள் தமிழ்மறை முதலிய மெய்யறிவு நூல்களெல்லாம் ஒருங்கு கற்றுத் தெளிந்த மெய்யுணர்வினராய் விளங்கினமை,

> " ஓதல் அறிவித்து உணர்வு அறிவித்து
> ஒற்றியூர்ச் சென்று உனைப்பாடக்
> காதல் அறிவித்து " (உ, ஆனந்தப்பதிகம், உஉ)

என்றமையால் இனிது தெளியப்படும்.

> " பலர்பால் பகல் இரவும் படித்த சமயச் சாத்திரமும் "
> (௬, அமையங் கூறல், அ)

என்று அருளிச் செய்தமையுங் காண்க. திருமுல்லைவாயில், திருவலிதாயம் முதலிய திருப்பதிகளுக்குச் சென்று திருப்பதிகங்கள் அருளிச் செய்ததும் இக் காலமேயாகும். திருவருட்பாவில் ' விண்ணப்பக் கலிவெண்பா ' முதல் ' இங்கிதமாலை ' ஈறாக உள்ள முதல் திருமுறைப்பாடல்கள் முழுவதும், இரண்டாந் திருமுறையிற் ' புண்ணிய விளக்கம் ' முதல் ' விண்ணப்பப் பதிகம் ' வரையிலும் உள்ள எண்பது திருப்பதிகங்களும் வள்ளலார் சென்னையிலிருந்து திருவொற்றியூர்க்குச் சென்று மீளும் இக்காலத்திலேயே எழுந்தன. மேல் ' தரிசனப் பதிகத் ' திலிருந்து இரண்டாந் திருமுறையின் முடிவுகாறும் உள்ளவை அடிகள் தில்லை நகரைச் சேர்ந்த பின்பு அருளிச்செய்யப்பட்டன வென்க. ' விண்ணப்பக் கலிவெண்பா ' ' நெஞ்சறிவுறுத்தல் ' ' சிவநேச வெண்பா ' ' மகாதேவ மாலை '

'திருவருண் முறையீடு' 'வடிவுடை மாணிக்கமாலை' 'இங்கிதமாலை' என்னும் ஏழும் அஞ்ஞான்று பாடப் பட்டவற்றில் நூறு பாட்டுச் சிறுமையும் எழுநூற்று மூன்று பாட்டுப் பெருமையும் உடைய நூல் வடி வினவாயிருத்தலால், அந் நூல்களை மட்டும் ஒருங்கு தொகுத்து ஒரு திருமுறையாக்கி மற்றவையெல்லாம் பெரும்பாலும் பதிகங்களாக நிற்றல் கொண்டு வள்ள லார் தில்லைநகர் எய்தி அங்குப் பாடிய அருட்பாடல்கள் வரையில் எழுந்த எல்லாவற்றையுந் தொகுத்து மற் றும் ஒரு திருமுறையாய் வகுத்துத் திருவருட்பா அச் சிடப்பட்டதென்று உணர்ந்துகொள்க. நம் அருமைப் பெருமான் பாடிய இப் பாடல்களெல்லாம் பலாச்சுளை போல்வன. "நவில்தொறும் நூல் நயம் போலும்" என்னுந் தேய்வத் திருவள்ளுவரின் திருவாய் மொழிக் குப் பேரிலக்கியமாவன. இங்ஙனம் இவ் வருட் பெருந் தீஞ்சுவைச் செந்தமிழ்ப் பாமாலைகளை அருளிச்செய்த அருட்பிள்ளையார் இப் பாமாலைகள் மட்டில் அமையா மற் பலப்பல தனிப்பாட்டுகளும் அருளிச் செய்தார். அதுவுமன்றி 'மனுமுறை கண்ட வாசகம்' 'தொண்ட மண்டல சதக இலக்கணம்' 'ஒழுவிலொடுக்கப் பாயிர விருத்தி' முதலான பொருட் செறிவு வாய்ந்த வளவிய உரைநடை நூல்களையும் அடிகள் அவ்வப்பொழுதும் அருளிச்செய்து வந்தனர். பெருமான் திருவொற்றி யூரிலிருந்தபொழுதே இவை அருளிச் செய்யப்பட் டன வென்க.

இக்காலங்களி லெல்லாம் அடிகள் பேய்களை வெருட்டுவது, இறைவனே ஓர் உருக்கொண்டு வந்து

சோறு தரப் பெறுவது, அதனைப் பிறர்க்கும் பெறுவிப்பது, பொருளிற் பற்றில்லாமல் அவ்வப்பொழுதுங் கையிற் கிடைக்கும் பொருள்களையும் வெளியில் எறிந்துவிடுவது, உலகத்துப் பொருள்களைச் சிவலிங்க வுருவங்களாகக் காண்பது, பாம்பு முதலான நச்சுயிர்களைச் சொல்லளவில் விலக்குவது, திருவருளால் அருள் நூலும் அந் நூற்பொருளும் எய்துவது, சான்றோர்கள் ‘மனிதரில் மனிதர்’ என்று பாராட்டுமாறு ஒழுகுவது, சிறப்பப் பாடித் திருக்கோயில்களைச் செல்வத்திலும் ஒழுங்கிலும் மேம்படுத்துவது, உயிர்க்கொலை நிறுத்துவது, திருநீறளித்துப் பலவகை நோய்களையும் ஒழிப்பது, தகுதியுள்ள மாணுக்கர்க்கு அறிவுநூற் பெரும் பொருளைச் செவியறிவுறுப்பது முதலான அருட்செயல்களெல்லாஞ் செய்வர். ‘பிள்ளைப் பருவத்திலேயே திருவருளும் அத் திருவருளால் உள்ளத் துறவும் அடைந்த இவரது நிலை ஆ! அரிது அரிது’ என்று எல்லாரும் அன்பும் அச்சமுங் கொண்டு அவரை வியந்து பாராட்டுவர்.

வள்ளலார் வடலூரின்கண் எழுந்தருளியிருந்தபோது அவர்பால் மெய்யன்பராயினுரொருவர் தம்முடைய சொத்துக்கள் முழுவதையும் வள்ளலார் பேருக்கே எழுதிவைக்க விரும்பினுர். விரும்பித் தமது கருத்துக்கு இசையுமாறும் அவரை வேண்டினுர். ஆனுற் பெருமான் அவற்றைச் சிறிதும் விரும்பாமல் ஒரு சிவபிரான் திருக்கோயிலுக்கு அதனை எழுதிவைக்கும்படி கட்டளையிட்டார். இந் நிகழ்ச்சியினுல் அடிகள் சிறிதும் பொருட்பற்றில்லாதவர்களென்

பது நன்கு விளங்கும். இனி அடிகட்கு அவர் உறவினர் திருமணஞ் செய்விக்க விரும்பியபோது அடிகள் அதற்குச் சில ஆண்டுகள் வரையில் மனமிசையாம லிருந்தார். ஆனால் மேன்மேலும் அவர்கள் வற்புறுத்தி வந்தமையாற் பெருமான் அவர்கள் கருத்துக்கு இசைந்து திருமணஞ் செய்துகொண்டனராயினும், பின்னர் அந் நிகழ்ச்சியிற் சிறிதும் பற்று வையாமல் நீங்கியே ஒழுகினர். இதனால் அடிகள் காமங் கடிந்தும் வாழ்வு நடத்தினர் என்பது இனிது வெளிப்படும். இனிப் பிள்ளைப் பெருமானுடைய திருவருட் செயல்களால் விருப்பம் மீதூரப்பெற்ற அன்பர் சிலர் அடிகட்குத் தாமே வலிந்து பொருள் கொடுக்க விரும்புவர். ஆனாற் பிள்ளையார் அவற்றை யெல்லாம் வாங்கி வெளியில் எறிந்துவிடுவார். கல்லும் மண்ணும் பொன்னும் அடிகட்கு அப்போது ஒன்றுதாம். இவ் வரிய இயல்பு,

"பொருளினை வாங்கிப் போனபோ தெல்லாம்
புழுங்கிய புழுக்கம்நீ அறிவாய்
மருளும்அப் பொருளைச் சாலகத் தெறிந்து
மனம்மிக இளைத்ததும் பொருளால்
இருளுறும் எனநான் உளநடுங் கியதும்
எந்தைநின் திருவுளம் அறியும்"

(சு, பிள்ளைப் பெரு விண்ணப்பம், சச)

"ஒருவும்அப் பொருளை நினைத்தபோ தெல்லாம்
உவட்டினேன் இதுவும்நீ அறிவாய்" ,, சஉ

என்று அடிகளே கூறுமாற்றால் இனிது துணியப்படும். ஆதலால் அடிகள் பொன்மே லெழுகின்ற பற்றிலுந்

துறவுடையாரென்பது வெளிப்படை. அடிகள் இங்ஙனம் மண் பெண் பொன் என்னும் முப்பற்றையும் விட்ட முழுத் துறவியாவா ரென்பதற்கு இவையே போதுமான சான்றுகளாகும். இம் முப்பற்றுள்ளும் மண்மேலெழும் பற்றும் பெண்மேலெழும் அவாவும் மக்கட்குப் பெரும்பான்மையுங் காளைப் பருவத்தோடு அடங்கி யொழிய, மற்று அவர்தங் கிழப்பருவத்திலும் விட்டு நீங்காத பொன்மேலெழும் விருப்பத்தையும் அடிகள் தமது இளந்தைப் பருவத்திலேயே விட்டுத் துறந்தமை அவர்தந் திருவருட் பெருநிலையை இனிது விளக்கிக் காட்டுகின்றது. அடிகளே தமது இளந்துறவு நிலையைப்

"பால்மறுத்து விளையாடும் சிறுபருவத் திடையே
பகரும்உல கிச்சையொன்றும் பதியாதுஎன் உளத்தே
மால்மறுத்து விளங்கும்திரு ஐந்தெழுத்தே பதிய
வைத்தபெரு வாழ்வே" (சு, அருள்விளக்கமாலை, எஅ)

என்று மிக அழகாயுந் தெளிவாயும் எடுத்துக் கூறுவர். பிள்ளையார் மேன்மேலும் இத் துறவொழுக்கத்தில் திண்ணியராய் விளங்கினமையால்,

"திண்ணியன்என் றெனைஉலகம் செப்பவைத்த தெய்வம்"
(சு, பரசிவ நிலை, ௫)

என்றும் அவர் கூறத் துணிந்தார்.

இங்ஙன மெல்லாம் இராமலிங்க அடிகள் தமது பிள்ளைமைப் பருவத்திலிருந்தே துறவொழுக்கத்திற் காழ்ப்புப் பெற்று அப் பருவங் கடந்து காளைப் பருவம் எய்தினார். உலகமெல்லாம் புகழ் விளங்கத் திருவருள் பெற்று அவ் வருட்பெரும் வாழ்வில் வைகும்

இராமலிங்க அடிகளைத் தமக்கு உறவினராய்ப் பெறும் பெரும்பேறு பெற்ற அவர் குடும்பத்தார் அவருக்கு மணவினை கண்டு மகிழப் பெரிதும் அவாவுவரன்றோ? ஆதலால் அவ் வுறவினரேயல்லாமல் ஏனை அன்பர்களும் அதற்கு அவாவினர். அவாவி, அடிகட்குந் தமது கருத்தை வெளிப்படுத்தினர். ஆனால் இராமலிங்கமோ அதனை அவாவும்! அவர் சிறிதும் அதற்கு இசைய வில்லை. அதனால் சில ஆண்டுகள் கழிந்தன. ஆயி னும் வள்ளற் பெருமானது துறவுள்ளப் பெருமையை உற்றுக் காணமாட்டாத அவர் உறவினர் அவரை மேன்மேலும் வற்புறுத்துவாராயினர். பெருமானுக்கு உறவினர் தொல்லையோ பொறுக்க முடியவில்லை. என் செய்வார்? பின்னர் ஒருவாறு அவர்கள் கருத்துக்கு இணங்கினர். சுற்றத்தார் அடங்கா மகிழ்ச்சி மீதூர்ந்து அவர்தந் தமக்கையாரின் தவப் புதல்வியாரான தனம் மாள் என்னும் பெண்மணியை அவருக்கு மிக்க களிப் புடன் மணம் பொருத்துவித்தார்கள். அடிகளுந் திரு மணத் தொல்லையினின்று பிழைத்தனர். ஆயினும் என்? சில காலம் வரையில் அடிகள் உலகவர்போல் நடந்து பின் அவ் வம்மையாருடன் பற்றின்றி யிருந்து திருவொற்றியூர்ச் சேவையிலேயே எண்ணம் வைத்து ஒழுகுவாராயினர். சுற்றத்தார் கையற்று நின்றனர். மடைதிறந்த வெள்ளம்போற் சிவக்கடல் வீழும் வள் ளற் பெருமானது திருவுள்ளப் போக்கை ஆ! ஏவர் தாம் பற்ற வல்லுநர்!

௩. தில்லைக் காதல்

பின்பு பெருமான் இங்ஙனந் திருவொற்றியூர்ச் சேவையில் திளைத்திருக்கும்பொழுது, அங்கு நிகழுந் தியாகராயப் பெம்மான் திருநடம் அவருக்கு மிக்க அன்பு விளைப்பதாயிற்று. அடிகள் அவ் வரிய திருநடத்தில் உள்ளம் வீழ்ந்து காதல் கூர்ந்து கூர்ந்து அதனை அல்லும் எல்லும் மறக்கமாட்டாராயினர். 'தியாக நடம்' வள்ளலார் திருவுள்ளத்தை முழுதுங் கவர்ந்து அவர் உள்ளத்துக்கு ஓர் இடையறாத இன்ப ஊற்றைப் பெருக்கி வந்தது. இதனால், நம் அருமைப் பெருமானுக்கு 'இறைவனுடைய அருள் விளக்கங்களே திருநடத்தின் உண்மையாம்' எனவும், எனவே 'திருநடத்தின் வழிபாடே ஏனை வழிபாடுகளிற் சிறந்ததாம்' எனவுந் திருத்தமான கடைப்பிடிகள் உறுதியாய்த் தோன்றலாயின. அது முதல் வள்ளலாரது திருவுள்ளமே எல்லாம் வல்ல முழுமுதலிறைவன் திருநடஞ் செய்யும் அம்பலமாய் மாறிவிட்டது. இங்ஙனம் மாறியதிலிருந்து எல்லாத் திருக்கோயில்களுக்கும் நடுவிடமாகவும், நடனத் திருக்கோயிலாகவுமே இலகுந் தில்லைத் திருக்கோயிலும், அத் திருக்கோயிலின்கண் விளங்கும் பொன்னம்பலமும், அப் பொன்னம்பலத்தின்கண் எழுந்தருளியிராநின்ற நடனத் தேவும், அவர் உமைவல்லி சிவகாமியம்மையுடன் இருந்து இடைவிடாது நிகழ்த்துந் திருநடனமாட்சியு மெல்லாம் அடிகள் நினைவு கூர்ந்து கூர்ந்து அத் தில்லைத் திருநடனத்தில் உள்ளம் அழுந்

துவாராயினர். அதுமுதல் வள்ளற் பெருமானுக்குத் தில்லைத் தேவன் திருநடக் காட்சியில் தடுக்கொணு ஆவல் பெருக்கெடுத் தெழுந்தது. அவர் கண்கள் விதுவிதுப் பெய்தின. பெருமான் இங்ஙனந் திருவொற்றியூர் மாளிகைத் தியாக நடத்தின் வாயிலாகவே தில்லைத் திருநடனத்தின்கண் அழுந்திய பெருங்காதல் ஊற்றெடுக்கப்பெற்ரு ரென்பதற்கு இரண்டாந் திருமுறையின்கண் உள்ள 'தியாகவண்ணப் பதிகத்'தை அடுத்துத் திருவொற்றியூரையுந் திருத்தில்லையையும் இணைத்துப் பாடப்பட்ட 'ஆடலமுதப் பத்து' அமைந் திருப்பதே தக்க சான்ரும்.

அடிகள் அதன்பின் தில்லைக்குச் செல்லும் ஆவல் மிக்குத் திருவொற்றியூரையுந் திருத்தில்லையையும் இணைத்துப் பாடி மனம் அமைவார். ஒரோவொருகால் அக் காதல் மீறிக் கைம்மிகுந்தக்கால் தில்லையையே நினைந்து தனித்தும் பாடி நெஞ்சுருகுவார். திருவொற் றியைத் தனித்துப் பாடிய பாட்டுக்களிலுந் தில்லைப் பெயரும் அங்கு நடிக்குந் தேவின் பெயருங் காணப் படுகின்றன. இன்னுந் திருமுல்லைவாயிலின் திருவிண் ணப்பப் பதிகத்து இரண்டாம் பாட்டிலும் அங்ஙனங் காணப்படுதல் காண்க. 'திருவொற்றியூர்த் தியாக நடங் கண்ட பின்னரே அதன் வழியாய்த் தில்லைத் திருநடத் தின்மேல் அடிகட்கு ஆராக்காதல் பெருகிப் பிறந்த தென்று மேற்காட்டினமையால், தியாக நடங் கண்டு பாடிய தியாக வண்ணப் பதிகத்தின் பின்னரன்ரே திருமுல்லைவாயிலின் திருவிண்ணப்பப் பதிகம் நிற்றல் வேண்டும்? மற்று அங்ஙனமன்றி அஃது அத் தியாக

வண்ணப் பதிகத்தின் முன்னே நிற்றலால் அது பொருந்தா'தெனின், அற்றன்று; திருவருட்பாவின் எல்லாப் பதிக அடைவுகளும் வள்ளற் பெருமான் பாடிய முறையே இப்போது அமைந்துள்ளன வென்று கூறுதற்கில்லை. முதல் திருமுறையாய் அமைதற்குரிய திருத்தணிகையின் பெருந்தொகைப் பதிகங்களே ஐந்தாந் திருமுறையா யெழுந்தனவென்றால், ஒரு திருமுறையினிடையில் ஒன்றிரண்டு பதிகங்கள் முன் பின்னாய் மாறியிருக்குமென்பதில் ஐயமுமுண்டுகொல்! பிள்ளைப் பெருமான் தில்லை நகரைச் சேர்ந்தவுடனே பாடியருளிய 'நடராஜபதி மாலை' 'அம்மை திருப்பதிகம்' என்னும் இரண்டனுள் முன்னது வடலூரிற் போய்ப் பாடிய ஆறாந் திருமுறையின் நடுவுக்குமேல் ஓரிடத்திலும், பின்னது இரண்டாந் திருமுறையிலும் அடக்கப்பட்டிருத்தல் இங்கு நினைவுகூரற்பாலது. இங்ஙனமே திருவொற்றியூர்ப் பதிகங்களுந் தியாக வண்ணப் பதிகமும் பாடியதன் பிற் பாடப்பட்ட 'இங்கித மாலை' முதலாயினவும் முதல் திருமுறையின் ஈற்றில் நிற்றல் காண்க. ஆதலா லன்றோ அவ் 'விங்கித மாலை' முதலானவற்றில் திருவொற்றிப் பெயரோடு தில்லைப்பெயரும் எழுவதாயிற்றென்பது. அடிகள் கருங்குழியை அடைவதற்கு முன் வேளூரிலிருந்து பாடிய ஏதுவால் முறைப்படி இரண்டாந் திருமுறையின் ஈற்றில் நிற்றற் குரிய 'வைத்தியநாதர் பதிகம்' ஒன்றும், தண்ணீரால் விளக்கெரித்தது பற்றிக் கருங்குழியிலிருந்து பாடிய ஒரு தனிப்பாட்டும் ஆறாந் திருமுறையின் இடையிற் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு திருவருட்பாவில் முன்பின்னாய் மாறிக் கிடக்குந் திருப்பதிகங்களெல்லாந் திருவருட்பாவைத் திருமுறை திருமுறையாய்ப் பிரித்துச் சிக்கறுத்து ஆராய்வுழி விளக்கமாய் அடைவுபடுத்திக் காட்டப்படும். திருவருட்பா ஒரு தொடர்பான காலத்தில் ஒரே இடத்திற் பாட்டுத் தலைப்புகளின் முன்பின் இயைபும் நூன் முறையும் அமைய ஓர் ஒழுங்காய்ப் பாடப்பட்டதொரு நூலன்று. ஆனால் அஃது ஒரு காலத்தேயல்லாமல் நாற்பத்திரண்டு ஆண்டுகளாக நினைத்தது நினைத்தபடி இடங்கடோறும் பாடப்பட்ட பல பாட்டுக்களின் தொகுதியே யாகும். அப் பாட்டுக்களும் பற்பல விடங்களிற் பற்பலராற் சேமிக்கப்பட்டுப் பின் வெளிப்படுத்தப்பட்டன. ஆதலால் அவ் வரிய திருவருட்பாவின் தலைப்புகளிற் சில முன்பின்னாய் மாறிப் போதல் இயல்பேயாமன்றோ? \ ஆகையால், 'தியாகவண்ணப் பதிகத்'துக்குப் பின்னாற் பல பதிகங்கள் தள்ளி அப்பால் அமைந்திருக்கற் பாலவான திருமுல்லைவாயிற் பதிகங்கள் இரண்டும் அதனோடு ஒட்டிய திருவலிதாயப் பதிகம் ஒன்றும் ஆக மூன்றும் எங்ஙனமோ தவறி முன்னால் அமைந்துவிட்டனவென்பதே உண்மையாவதாம் என்க.

இன்னும் ஒன்று, பிள்ளைப் பெருமானுக்கு அவர் சென்னைப்பதியி லிருந்தபொழுதே திருமணம் நிறைவேறிற்று. பண்டைக் காலத்தில் திருமணமெல்லாந் திட்டமாய்ப் பதினாறாண்டளவில் நடத்தப்பட்டாற் போல், இக்காலத்தில் நிகழ்தலில்லை. இக்காலத்திற் பதினாறாவது ஆண்டுக்கு மேற் பல ஆண்டுகள் கழிந்த

பின்னரே திருமணங்கள் நடத்தப்படுகின்றன. மேலும் வள்ளற்பெருமான் தமது திருமண வினைக்கு முதலில் இசையாமற் சில ஆண்டுகள் கழித்தமையின், அவரது திருமணம் அவர்தம் இருபஃதாண்டுக்கு மேலேதான் முடிந்ததாகல் வேண்டும். திருமணம் நிகழ்ந்த பின்னும் அடிகள் சில ஆண்டுகள்காறுந் திருவொற்றியூர்ச் சேவையில் திளைத்திருத்தலால், ஆங்கு நின்றும் நீங்கித் தில்லைக்குச் செல்லப் புறப்படும் பொழுது அவருக்கு ஆண்டு இருபத்து நான்குக்குக் குறையாதென்பது திண்ணம். எனவே தமது பன்னிரண்டாம் ஆண்டிலிருந்து திருவொற்றியூருடையாரைப் பாடத் தொடங்கிய அடிகள் பன்னிரண்டாண்டுகளாக அப் பெருமானைப் பாசியிருக்கின்றாரென்பது திட்டமாய்த் தெளியப்படுகின்றது. தெளியவே, சென்னையிலிருந்து தில்லையெய்தப் புறப்படுதற்குச் சில திங்கட்கு முன் அடிகள் திருமுல்லைவாயிற்குந் திருவலிதாயத்துக்குஞ் சென்று திருப்பதிகங்கள் அருளிச் செய்திருத்தலால், அப் பதிகங்கட்கு முன்னிடங்களிற் கடந்த பன்னிரண்டாண்டுகளாகப் பாடப்பட்ட திருவொற்றிப் பதிகங்கள் காணப்படல் வேண்டுமன்றோ? திருமுல்லைவாயில் திருவலிதாயப் பதிகங்கட்கு முன் இப்பொழுது பதினொரு திருப்பதிகங்களே காணப்படுகின்றன. இவ்வளவு குறைவான பதிகங்கள்தாமா அப் பன்னிரண்டாண்டுகளாகப் பாடப்பட்டிருக்கும்?

'அற்றன்று' பிள்ளைப்பெருமான் திருவொற்றிப் பெம்மானை இரண்டாந் திருமுறையின் முதலிலுள்ள 'புண்ணிய விளக்கம்' என்பது தொட்டுப் பல பதி

கங்கள் பாடத் துவங்கியதன் பின்னும், திருமுல்லை வாயில் திருவலிதாயப் பதிகங்கள் பாடுதற்கு முன்னும் அடிகளாற் பாடப் பெற்றனவாகிய முதல் திருமுறைப் பாடல்களெல்லாம் நூல் வடிவினவா யிருத்தல்பற்றி அவைகள் வேறு பிரிக்கப்பட்டு முதல் திருமுறை யாய்ச் சேர்க்கப்படுதலும், அவை கழிய எஞ்சியவை பதினொரு திருப்பதிகங்களாகக் குறைந்து நின்றமை யின் அதனால் ஈண்டைக்கு உறும் இழுக்கென்னை' யெனின், மேற் கூற்று உண்மையேயாதல் பற்றிப் புண்ணிய விளக்கத்துக்கும் வலிதாயப் பதிகத்துக் கும் இடையில் அம் முதல் திருமுறைப் பாடல்களைச் சேர்த்துக் கொண்டாலும், அப்பொழுதும் வலிதாயப் பதிகத்துக்கு முன்னுள்ள பாடல்கள் எவ்வளவோ அவ்வளவே ஏறக்குறைய அதற்குப் பின்னும் இருத்த லால், ஒற்றியை வழுத்திய பன்னிரண்டாண்டுகளின் நடுக்குத்தாகிய ஆறாவது ஏழாவது ஆண்டுகளிலேயே திருமுல்லை வாயிலுக்குச் சென்றார் அடிகள் என்று சொல்ல நேருமாகலின், திருமுல்லை வாயிலுக்கு அப் பன்னீராண்டுகளின் நடுவிலன்றிக் கடைசியிலே சென் றார் பிள்ளையார் என்னும் உண்மை வரலாற்றோடு அது முரண்பட்டுப் பொருந்தாது போதல் ஓர்ந்துகொள்க. அங்ஙனங் கொள்ளவே, திருமுல்லைவாயில் திருவலி தாயப் பதிகங்கள் தியாகவண்ணப் பதிகத்துக்கு அப் பால் தரிசனப் பதிகத்துக்கு முன் அமைவதே பொருத்தமாகின்றதன்றோ? ஆதலும், 'தியாகவண் ணப் பதிகம்' பாடியதற்குப் பின்னர்த்தான் வள்ளலார் தில்லையை நினைத்துக்கொண்டு அங்கங்கும் பாடுவாரா

யினரென்பதும், ஆதலால் தியாகநடக் காட்சியே தில்லைக் காதலைப் பிள்ளையார்க்கு அழுத்தமாய் விளைப்பதாயிற் றென்பதும் பெறப்பட்டு அவை ஐயுறவுக்கிடனில்லாத உண்மைக் கருத்துகளாமாறும் விளங்குதல் காண்க.

இங்ஙனமெல்லாம் பிள்ளையார் தில்லைத் திருநடத்தின்மேல் எழுந்த தீராப் பேராவலுடன் திருவொற்றித் தியாகரொடு குலவி வருகையில், அவர்தம் அருமைத் தாயாரான சின்னம்மையார் சிவபிரான் திருவடி நீழல் எய்தினர். அடிகள் அவ் வினைக்கு வேண்டுந் தென்புலக் கடனெல்லாந் தக்காங்கு ஆற்றி, மீண்டுந் தில்லைப் பேரவாவிலேயே உள்ளம் ஊசலாடியிருந்தார். அக்கால் அவருக்கு இரண்டாந் தமையனாரான பரசுராமப் பிள்ளை யென்பார் மிகக் கொடிய பிணியாற் பெரிதும் பிணிப்பட்டு வருந்துவாராயினர். இதனைப் பிள்ளையார் கேள்வியுற்று அவர் அங்ஙனம் நோயுற்றிருத்தலின் குறிப்புணர்ந்து அவருக்குத் தில்லைத் திருக்காட்சியைக் காட்டுதற்குத் திருவுளங் கொண்டார். நெடு நாட்களாகத் தில்லைக் காட்சியில் அடங்காக் காதலுற்றிருந்த அடிகட்கு இஃதொரு வாய்ப்பு மாயிற்று. உடனே, திருவருட் பெருவேட்கை யுடையரான மெய்யன்பர் சிலருடன் அடிகள் திருவொற்றியூர்த் தியாகரை வணங்கிச் சென்னையை விட்டுத் தில்லைக்குப் புறப்பட்டனர்.

மேல் 'தரிசனப் பதிகத்' திலிருந்து மற்றவையெல்லாந் தில்லைக்குச் சென்றபின் பாடப்பட்டன. ஆதலால் அத் தரிசனப் பதிகத்துக்கு முன் உள்ள புள்ளிருக்

கும் வேளூர்ப் பதிகங்களுந் திருவண்ணாமலை திருவாரூர்ப் பதிகங்களுந் திருவொற்றியூரின்கண் அவ்வவ்வூர்ப் பெருமானை நினைந்து பாடப்பட்டனவா மென்று அறிதல் வேண்டும். திருவொற்றிப் பிரானை வழுத்திக்கொண் டிருந்தபோது தம் அண்ணனார் உடல் நலங் குறைந்து நிற்கின்றாரென்று கேள்வியுற்ற காலத்தில் அடிகள் வைத்திய நாதரை நினைந்து வேளூரைப் பாடினார். இவ்வுண்மை, அடிகள் வேளூரைப்பற்றி இரண்டாவதாகப் பாடிய 'பிரசாதப் பதிகத்'தில் ஒவ்வொரு பாட்டிலுங் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

" வருந்தி நாட வரும்பிணி நின்னருள்
மருந்தி னலன்றி மற்றொன்றில் தீருமோ " ௩

" ஒவ் ருத உடல்பிணி தன்னையே " ௫

" உய்ய நின்னருள் ஒன்றுவ தில்லையேல்
வெய்ய நோய்கள் விலகுவ தில்லையே " ௬

" தொல்லை நோயின் தொடக்கது நீங்கவே " ௭

முதலிய அப் பதிகத்தின் அடிகளைக் காண்க. இதற்குமுன் பாடிய வேளூர் 'சிகாமணி மாலை'யில் மலத்தின் பழந்தொடக்கையும், அதனால் வரும் அளவுபடாத் துன்பங்களையும் பிணியாக உருவகப்படுத்தி அதனைத் தீர்த்தருளுமாறு அப் புள்ளிருக்கும் வேளூர் வைத்திய நாதரை நினைந்து அடிகள் வழுத்துவர். இனித் திருவண்ணாமலையைப் பாடியருளிய 'திருவருட் பதிகத்'தில்,

" அறையும் நற்புகழ்சேர் அருணையை விழைந்தேன்
அங்கு எனை அடைகுவித் தருளே " ௫

"அருணையங் கோயில் சந்நிதிக்கு யான்வர அருளே" ம் என்பனவாக எல்லாப் பாட்டுகளிலுந் தம்மைத் திருவண்ணாமலையிற் சேர்ப்பிக்கும்படி அடிகள் சிவத்தை வழுத்துதலால், அப் பதிகமும் அண்ணாமலைக்குச் சென்று பாடப்பட்ட தன்றென்பது வெளிப்படை. இனி எஞ்சியது திருவாரூர்ப் பதிகம். தில்லைக்குப் புறப்படுமுன் கடைசியாகப் பாடப்பட்டது இப் பதிகந்தான். இதற்கு அடுத்தது தில்லையிற் போய்ப் பாடிய 'தரிசனப்பதிகம்' என்பது. சைவசமய குரவரில் ஒருவரான நம்பியாரூரர் திருவொற்றியூரின்கண் எழுந்தருளிச் சங்கிலியாரை மணந்தபின் "எத்தனை நாள் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே" என எண்ணித் திருவாரூர் இறைவனை நினைத்துக்கொண்டு திருவொற்றி மாளிகையைப் பிரிந்தாராகலின், அங்ஙனம் பிரிந்த அவரது அருஞ்செயல் தில்லையை நினைத்துக்கொண்டு அத் திருவொற்றி நகரைப் பிரியுந் தமது செயலோடு ஒத்து நிற்றலால் அடிகட்கு அஞ்ஞான்று அந்நினைவு தோன்றி, அந்நினைவின் வழியே திருவாரூர் நினைவும் எழுவதாயிற்று. தியாக நடம் அங்கும் உண்மையால் அடிகட்குத் திருவாரூரைப் பாடும் இயையும் ஏற்பட்டது. ஆதலால் தியாக நடத்தில் உள்ளம் இழுப்புண்டிருந்த வள்ளலார் இறுதியில் திருவாரூரைப் பாடிப் பின் திருவொற்றியூரைப் பிரிந்தனரென்க.

பிரிந்து, திருமயிலையின் விடையூர்தி விழாவைச் சேவித்துக்கொண்டு வழியிடையே வேறு சில திருக்கோயிற் சேவையுடன் அச்சிறுபாக்கம் அமர்ந்து

புதுவை தங்கிப் பின் தில்லையை யெய்தி அகமுருகி னர். பன்னெடு நாட்களாகப் பேரவாக் கொண்டிருந்த பிள்ளைப் பெருமானது மெல்லிய அருள் நெஞ்சம் தில் லைக் கூத்தரைக் கண்ட அளவில் என்ன நிலையை அடைந்திருக்கும்?

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடும்ஆ னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார். *

சைவ சமய குரவரில் முதல்வரான திருவாத வூர்ப்பெருமான் ஒருகாற் பரித்திரள் வாங்கும்பொருட் டுப் பூழியர்கோன் ஏவலால் மதுரையினின்றும் புறப் பட்டுத் தம்மையறியாத பேரன்பின் வழியராய்க் கீழ் கடல் நோக்கிச் செல்லுங்கால், ஆங்கு எல்லாம் வல்ல சிவபெருமான் குருவடிவங் கொண்டு ஒரு குருந்த மர நீழலில் அடியார் சூழ எழுந்தருளித் தமது அருட் காட்சியை அவருக்குக் கண்களிப்பக் காட்டினரன்றோ? அஞ்ஞான்று மணிவாசகப் பெருமான் அவ் வருமைக் குருவடிவின் திருக்கோலக் காட்சியைத் தம் கண் களால் நீளப் பருகுவார்போல் அகங்குளிரக் கண்டு அக் காட்சி யின்பத்தில் தேக்குற்ற திருவுள்ளமுடையராய் நெக்கு நெக்குருகிக் கண்களில் நீர்வார அன்பினுல்

* திருத்தொண்டர் புராணம், தடுத்தாட்கொண்ட, ௱௬.

அழுது நின்றனரன்றே! அத்தகைய மணிவாசகப் பெருமானது பெருநிலையையும் ஈண்டுத் தில்லைத் திருநடங் கண்ட வள்ளற்பெருமானது அருநிலை பெரிதும் ஒக்குமெனக் கூறுதல் வேண்டும். தில்லைத் தேவனைக் கண்டுகொண்ட இராமலிங்க அடிகள், நீர் ஊற ஊறச் சரிந்து உகும் ஊற்று மணல்போல் தம்முள் ஆராத பேரன்பு பெருக்கெடுத்து எழ நெஞ்சுடைந்து நெக்குருகினர். மடைதிறந்த வெள்ளத்தினும் பார்க்க மிக்க விரைவும்வலிவும்உடைய தாய் அடிகளது பெருங்காதல் அங்கு விளங்கிய திருச்சிற்றம்பலத் திருக்கூத்தின்கண் உடனே பெருகிப் பாய்ந்தது. பாய்தலும், அப் பாயும் விரைவு அப்பொழுதே அவரது பற்றற்ற துறவுள்ளத்தையும் உடன் ஈர்த்துச் சென்றமையின் அடிகள் உடனே தம்மை மறந்து உணர்விறந்து நின்றனர்.

பின் சிறிது நேரங் கழித்துப் பெருமான் பெருமூச்சு விட்டு உணர்ச்சி வரப் பெற்றார். அப்போது தமக்கு உள்ளும் புறமும் ஒருணர்வே ஒத்து நிகழத் தம்மை உடைய பிரானை எவரு மறியாமல் அடிகள் அகமுகமாய் நீள நுகர்வாராயினர். பார்க்குமிடமெங்கும் அவருக்குத் தில்லைத் திருவருட் கொழுந்தே நீக்கமறத் தோன்றலாயிற்று. அந்நிலையில், பாலினுந் தயிரினும் வெண்ணெய் மறைந்துந் தெளிந்துங் கலந்திருத்தல்போற், சிவத்தின் திருவருள் பிள்ளைப் பெருமானது உடம்பிலும் உயிரிலும் நிரம்பித் துளும்பிற்று. இங்ஙனமெல்லாம் பொன்னம்பலக் கூத்தரது திருவருட் கடலிற் குளித்து ஒரு நெறிய நிலை எய்தப் பெற்ற பிள்ளைப் பெருமான் பின் நெடுநேரம் வரையிற்

பெருமானைப் பிரியமாட்டாராயினர். பின்னர் ஒருவாறு மனந்தேறி அம்பலவாணரை அரிதிற் பிரிந்து அடிகள் திருமடம் எய்தினர். அடிகட்குத் தில்லைப் பெருமான் பால் உள்ள அளவிடப்படாத இயற்கைக் காதலுணர்வு,

“ திருவார் பொன்னம் பலநடுவே
தெள்ளார் அமுதத் திரள்அனைய
உருவார் அறிவா நந்தநடம்
உடையார் அடியார்க்கு உவகைநிலை
தருவார் அவர்தம் திருமுகத்தே
ததும்பும் இளவெள் நகைகண்டேன்
இருவா தனைஅற்று அங்கோரான்
இன்னும் ஒருகால் காண்பேனோ ” க

“ வள்ளலார்தம் திருஅழகைக்
கோயிற்கு அருகே சென்றுமனம்
குளிரக் கண்டேன் பிரிவுஉற்றேன்
ஈயின் சிறியேன் அவர்அழகை
இன்னும் ஒருகால் காண்பேனோ ” ௨

“ என்கண் அனையார் அவர்முகத்தை
இன்னும் ஒருகால் காண்பேனோ ” ௩

என்று திருமடத்துக்குச் சென்றபின் திருவாய்மலர்ந் தருளிய அவரது ‘ தரிசனப் பதிகத் ’ துத் திருமொழி களால் தெளிய உணரப்படும். அடிகள் திருமடத்தை அடைந்த பின்னர்த்தான் அவரால் இத் ‘ தரிசனப்பதி கம் ’ அருளிச் செய்யப்பட்டதாகு மென்பதற்கு அதன்கண் “ கோயிற் கருகே சென்று மனங் குளிரக் கண்டேன் ” என வரும் மேலுரையே தக்க சான்று கும். இதனுல் அத் திருப்பதிகம் கோயிலின்கண்

இருந்து பாடப்பட்டதன்றென்பது இனிது விளங்குதல் காண்க.

தில்லைக் கடவுள்பால் இங்ஙனம் அளந்தறியப் படாத பேராக்காதல் பெருகப் பூண்டு ஒழுகிய வள்ளலார் பல நாட்கள் அவண் தங்கியிருந்தார். 'தரிசனப் பதிகம்' முதல் இரண்டாந் திருமுறைப் பாடல்கள் முழுவதும் அடிகள் தில்லையிலிருந்த போதே அருளிச் செய்யப்பட்டனவாமன்றோ? ஆகையால் அடிகள் தில்லைத் திருப்பதியில் நெடு நாட்கள் தங்கிப் பொன்னம்பலப் பெம்மானை வாழ்த்தி வணங்கிக்கொண்டிருந்தாராதல் வேண்டும். அங்ஙனம் அத் திருப்பதியின்கண் வைகியிருந்தபோதே பிள்ளையார் சீகாழி, புள்ளிருக்கும் வேளூர் முதலான திருக்கோயில்களுக்கும் இடையிடையே சென்று வணங்கித் தில்லைக்கு மீள்வர். மதுரைக்குப் போய்ப் பாடல்கள் அருளிச் செய்தமைக்குத் திருவருட்பாவில் ஏதொரு குறிப்பும் அகப்படவில்லை.

அடிகள் தில்லையிலிருந்தபோதும் பல செயற்கருஞ் செயல்களைச் செய்து தமது திருவருள் நலத்தை ஆண்டாண்டும் புலப்படுத்தி வந்தார். தில்லையின்கண் அடிகளின் அருமை பெருமைகளை நன்கறிந்த பெரியாரொருவர் இருந்தார். அவர் நம் பெருமானைப்பற்றி "இவர் தமக்கு எதிரில் இருப்பவரது உயிராற்றலைத் தம்பால் இழுத்துக்கொள்ளுந் திறனுடையார்' என்று சிறப்பித்துக் கூறுவது வழக்கம். பிள்ளையார் ஒரு நாள் 'அப் பெரியாரின் உடம்பு இன்னும் ஆறு திங்களில் விழும்' என்று வருவதுரைத்தார். அங்ஙனமே

அவருடம்பு திட்டமாய் அவ் வாறுந் திங்களில் விழுந்து அப் பெரியாருந் துறக்கம் புக்கார். பின்னொருகால் பிள்ளையார் சீகாழிக்குச் சென்றபோது தொழு நோயாளர் ஒருவருக்கு ஐந்தெழுத்து ஓதித் திருநீறுகொடுத்து அவர் நோயை முற்றும் நலப்படுத்தி யருளினார். இவற்றையெல்லாம் அன்பர்கள் கண்டுங் கேட்டும் மிக்க வியப்பும் உவகையும் எய்திப் பிள்ளைப்பெருமானது திருவருள் நிலையை எண்ணி எண்ணி நாளும் புகழ்ந்தேத்துவாராயினர். இவ்வேத்துரையை அக்கம் பக்கத்திலுள்ள அன்பர்களெல்லாருங் கேட்டு அடிகள் பால் அணுமி அவரை வணங்கிச்செல்வர்.

இங்ஙனமே, பிள்ளைப்பெருமான் தோன்றியருளிய மருதூர் என்னும் ஊர் தில்லைக்கு அருகில் இருத்தலால், அவ்வூராரும் இனைய ஏத்துரைகளை நிரம்பச் செவி மாந்தி இறும்பூதுங் களிப்பும் உடையராய்ப் பிள்ளையாரைக் காணவுங் கண்டு வணங்கவும் வேட்கை மிக்கனர். மிக்கு, அவருட் பெருந்தவமுடையார் சிலர் திரண்டு தில்லை போந்து அடிகளைக் கண் களிப்பக் கண்டு ஓடித் திருவடி வீழ்ந்து வணங்கினர். திகைப்பாற் சிறிது நேரம் மயங்கினர். பின் தெளிந்தார். பிள்ளைப் பெருமானது சிறந்த திருமேனியின் கோலமும் அத் திருமேனியூடு ஒளிறி விளங்கும் விழுமிய திருவருட் கோலமும் மருதூரார்க்கு மிக்க அன்பையும் வியப்பையும் ஊட்டின. பிள்ளைப்பெருமான், அவரெல்லாந் தாம் பிறந்த மருதூரின்கண் வாழுநரென்றறிந்து மிக்க அன்புடன் அவரை நலமுசாவினர். பிள்ளையாரது இன்சொல் அவர்களை மேலுங் கனியச்

செய்தது. சின்னேரம் அன்புரைகள் கூறிக்கொண்ட பின், மருதூரவர் பிள்ளையாரை வணங்கித் தமது திருவூருக்கு அவரை எழுந்தருளுமாறு வேண்டிக் கொண்டார். பிள்ளையாரும் அவர்கள் வேண்டுகோட்கு இணங்கிச் சிற்றம்பலப் பெருமானை உளமுருகக் கனிந்து கனிந்து தொழுது அழுது பின் தேறித் திருவுள்ளக் குறிப்பறிந்து விடைபெற்றுக்கொண்டு தில்லையின் எல்லையைப் பிரிந்து திருமருதூரைக் குறுகினார். ஆண்டிருந்த அருந்தவமுடைய ஆடவர் பெண்டிரெல்லாரும் ஒருமிக்கப் பெருகித் திரண்டு அலைவெள்ளமென எதிர்கொண்டு சென்று நிலமிசை விழுந்து வணங்கி, 'ஐய, வருக ! அருள்ஞான வள்ளல் வருக! பொன்னம்பலத்தெஞ் செல்வப் பெம்மான் திருவருள் மாந்தி ஏழையேம் கருமாள வைக்குங் கண்ணே வருக! எங்கள் முன்னைத் தவமே வருக ! கடைப்பட்ட நாயினும் புல்லியேமான ஏழையேமுங் கண்டு களிப்ப எங்கள் முன் எழுந்தருளிவரும் எழிலின் உருவே ! மருதூர்க் கொழுந்தே ! எழுந்தருள்க ! எழுந்தருள்க !' என நல்வரவு மொழி கூறி ஆரவாரித்து அடிகளை வரவேற்றனர். அடிகள் அம் மகிழ்ச்சிப் பெருவெள்ளத்தின் நாப்பண் தோன்றி அவரது அன்பை வியந்து பாராட்டி எல்லார்க்குந் தமது அருள் நோக்கம் அளித்து மருதூர் புகுந்து வைகினார். பிள்ளையாரின் திருவருட்பொலிவு பெற்று அவர்பால் ஆர்வம் மீதூரப் பெற்ற அவ்வூரவர் அடிகளை அவ்வூரிலேயே என்றும் இருந்து தமக்கு வாழ்வளிக்குமாறு பெரிதும் வேண்டினார். ஆயினும் பிள்ளையார் அவ்வூருக்கு

அருகில் உள்ள கருங்குழி என்னுந் திருப்பதியையே தமது வாழ்விடமாய் அமைத்துக்கொள்ள விரும்பி மருதூராரர்க்கு அமைதி கூறிச் சில நாட்களில் அவண் சென்றார். அங்ஙனம் அவர் அக் கருங்குழி என்னுந் திருப்பதியை அடைந்தது தமது இருபத்தெட்டாம் ஆண்டிலா மென்பது இங்கு நினைவுகூரற்பாலது. எனவே, திருவொற்றியூரைச் சேர்ந்தபின் கருங்குழி சேரும் வரையில் அடிகளுக்குத் தில்லைக் காட்சியின் வாயிலாகச் செலவழிந்த ஆண்டுகள் நான்கு ஆகு மென்று அறிதல் வேண்டும். பிள்ளைப் பெருமானது வாழ்விடம் தமக்கு நெடுந்தொலைவில் இல்லாமை உணர்ந்து மருதூரவரும் பின் ஒருவாறு அமைதி யடைந்தனர்.

௪. விரிவுரைத் தொண்டு

அடிகள் கருங்குழியைச் சேர்ந்த சில நாட்களுக்கெல்லாம் அவர்தம் இளைய தமையனார் பரசுராமப் பிள்ளை யென்பார் இறைவன் திருவடி நீழல் எய்தினார். பின்னுஞ் சில நாட்களில் அவர் தமையனார் சபாபதி பிள்ளை என்பாரும் இம் மண்ணுலக வாழ்வை நீத்தனர். உலகுக்குத் தனியராய் விளங்கிய பிள்ளையார் தமது குடும்பத்துக்கும் இப்போது தனியரானார். பெருமான் கருங்குழியைத் தமக்கு வாழ்நாளிடமாய் அமைத்துக் கொண்டபின் தாம் உலகத்துக்கு ஒரு சிறந்த தொண்டு செய்தல் வேண்டும் என்று திருவுள்ளம் பற்றினார். எல்லாம் வல்ல ஆண்டவனது திருவருள் ஆட்சியையும் அவ்வாட்சியுள் அடங்கி உயிர் வாழும் எண்ணிறந்த உயிர்க்கூட்டங்களின் உயிர் வாழ்க்கையையும் அடிகள் அடிக்கடி எண்ணிப் பார்ப்பார். அடிகளின் திருவுள்ளமென்னும் பளிங்கில் இவ்வகையான நுட்ப எண்ணங்களை என்றும் இடையறாது நிழலாடுவவாயின. உயிர்கள் ஆண்டவனது திருவருளாட்சியை உணராமல் தம் வாழ்நாளெல்லை முழுதும் வாளா எண்ணத் தொலையாத அல்லல்களில் அமிழ்ந்தி அமிழ்ந்தி மாய்ந்து போதலும், அதனால் அவ் வுயிர்கள் மேன் மேலும் பிறவியெடுத்து அப் பிறவிகளாகிய அலைகளில் எந்நேரமும் அலைப்புண்டு நிற்றலும் அஞ்ஞான்று அவருக்கு அடுத்தடுத்துத் தோன்றின. அதனாற் பிள்ளைப் பெருமானது திருவுள்ளம் உயிர்கள்பால் மிகவும் இரக்கங் கொள்வதாயிற்று. உயிர்கள் ஆண்டவனது திருவரு

ளாட்சியை உணர்ந்து தமது உயிர் வாழ்க்கையைச் சீர்திருத்திக்கொண்டு இன்புறுதல் வேண்டும் என்றும், அங்ஙனம் இன்புறுதற்கேற்ற வழி வகைகளை அவைகளுக்கு நாளும் அறிவுறுத்தல் வேண்டும் என்றும் அடிகள் உறுதியாய்க் கருதுவாராயினர். ஆங்காங் குள்ள அன்பர்களும் அடிகள்பாற் போந்து வணங்கிப் 'பெருமானே, ஏழையேம் இப் பிறவியாகிய பெருந் துன்பத்தினின்றும் உய்ந்து கடைத்தேறுமாறு அரிய திருவருட்பேருண்மைகளை எங்கட்கு அவ்வப்போதுந் தேவரீர் அறிவுறுத்தியருளல் வேண்டும்' என்று குறையிரந்து வேண்டிக்கொள்வாராஞர். அதுமுதல் அடிகள் அவர்கள் வேண்டுகோட்கு இணங்கியும், இயற்கையே தமக்கெழுந்த பேரிரக்கத்தால் இரங்கியும் சுற்றுப்புறத்துள்ள ஊர்கட்கும் நகர்கட்குஞ் சென்று ஆண்டவனுடைய அருளியல்புகளை நன்கு விளக்கி அடிக்கடி விரிவுரை செய்யத் தொடங்கினர். பிள்ளைப் பெருமானது தேனினு மினிய விரிவுரையைச் செவிவாயாய் மாந்துதற்கு நெடுந்தொலைவிலிருந்தும் அன்பர்கள் திரள் திரளாய்க் குழுமி வருவர். பிள்ளையாரது இவ் வாரமிழ்தத் திருமொழிகளாகிய செவியுணவை நிரம்ப உண்டு தமது வயிற்றுணவை மறந்தாரும் மறுத்தாரும் அஞ்ஞான்று எத்தனையோ பலர். பிள்ளையார் அக்காலங் களிலெல்லாம் எல்லாம் வல்ல திருவருளாட்சிகளின் இயல்புகளை வகை வகையாகப் பிரித்துக்கொண்டு மிக அழகழகாக விளக்கிக் கூறுவார். அவர் செய்தருளுஞ் சீர்திருத்த விரிவுரைகள் கீழ் வருமாறு:—

'உயிர்களெல்லாம் இறைவனது அருளாட்சியில் அடங்கி உயிர்வாழ்ந்துகொண் டிருக்கின்றன. உயிர்

கட்கு இயற்கையில் அறிவும் அன்பும் அருள் இரக்கங் களும் உண்டு. ஆனால் உயிர்கள் இயற்கையே மலத் தால் மூடுண்டிருத்தலின், அறிவு முதலான அவ்வியல் புகள் அவைகட்குச் சிறிதும் விளங்குதலில்லை. மலம் என்பது அறியாமைப் பொருள். உயிர்கள் தாம் சேரும் பொருள்களின் வண்ணமாய் மாறி அமையும் இயல்புடையன. ஆதலால் மலம் என்னும் அறியா மைப் பொருளால் தாம் மறைக்கப்பட்டிருக்கும் வரை யில் அவை அம் மலத்தைப் போல் அறியாமைப் பொருள்களாகவே காணப்படும். ஆனால் மலம் உயிர் என்னும் இவ் விரண்டு பொருள்கட்கும் வேறாகக் கட வுள் என்பவர் ஒருவர் உண்டு; அவர் பேரறிவும் பேராற்றலும் இயற்கையே உடையவராதலால் அவர் என்றும் மலத்தால் மறைக்கப்படுதலில்லை; அதனால் அவருடைய அன்பும் அருளிரக்கங்களும் என்னும் அருளியல்புகள் என்றும் மறைக்கப்படாமல் விளங்கிய படியே இருக்கும். ஆண்டவன் இங்ஙனம் அளவு படாத அன்பு அருளிரக்கங்களுடன் விளங்கி நிற்ற லால் மலத்தால் அறிவு மறைப்புண்டு அறியாமைப் பொருள்கள்போற் கிடக்கும் உயிர்கள்மேல் அவருக் குப் பேரிரக்கம் உண்டாகின்றது. அதனால் அவர் எல்லா உயிர்களுக்கும் படிப்படியாகப் பிறவிகள் தரு கின்றார். உயிர்கள் ஆண்டவன் ஆணைப்படி உலகங் களிற் பிறந்து உலவுகின்றன. இதனால் அவற்றிற்கு இயற்கையேயுள்ள மலம் சிறிது சிறிதாய்த் தேய் வுறும். மலம் தேயவே அறிவும் அன்பு முதலான அருளியல்புகளும் ஓங்கி வளரும். உயிர்களின் அறி

வையும் அன்பு அருளிரக்கங்களையுங் கண்ட அளவில் எல்லாம் வல்ல ஆண்டவன் அவ்வுயிர்களுக்குத் தனது இன்னருளை மிகுதியும் வழங்குவன். அறிவின் பயன் அன்பும் அவ்வன்பின் பயன் அருளிரக்கங்களுமாய் முடிதலின் மக்களாய்ப் பிறந்தோர் எவ்வளவுக் கெவ் வளவு அருளிரக்கத் தெய்வ இயல்புகளை மிகுத்துக் கொள்கின்றார்களோ அவ்வளவும் ஆண்டவன் திருவுள் ளத்துக்கு ஏற்புடைத்தாகும். அதனால் அவர்களும் அவ்வருளிரக்க இயல்புகளின் முடிந்த பயனான பேரின் பத் தேனை நுகரப் பெறுவார்கள். 'அருள்' என்பது ஏனை உயிர்களின் நன்மைக்காக உள்ளங் கசிவது; 'இரக்கம்' என்பது உயிர்கள் துன்புறுதலைக் கண்டுங் கேட்டும் உள்ளங் குழைவது; இங்ஙனம் ஏனை உயிர் களின் நன்மையை நாடி உள்ளங் கசிதலும் உள்ளங் குழைதலுமான இவ்வருளிரக்க வியல்புகளை உயர்த்திக் கொண்டு அவ்வியல்புகளால் ஆண்டவன் திருவருளைத் தலைக்கூடுதலே மக்கட் பிறப்பின் முதற்கடமையா மென்பது இதனால் நன்கு விளங்கா நிற்கும். மற்றப் படி செய்யப்படும் இவ்வுலகத்துத் தொழில்களெல் லாம் மேற்காட்டிய முதன்மையான செயலுக்குக் கருவிகளே யாகுமென்று அறிந்துகொள்ளல் வேண் டும். மண் குடமாகும் வரையில் 'தண்டசக்கரம்' உடனிருந்து சுழன்று பின் சுழலாது நிற்றல்போல், உயிர்களின் மருள்நிலை அருள்நிலை யாகும் வரையில் இவ்வுலகமும் இவ்வுலகத்துத் தொழில்களும் உட னிருந்து பயன்பட்டுப் பின் அழிந்து போவனவேயா மாதலால் அவற்றையெல்லாந் தமதுயிர்க்கு உறுதி

பயப்பனவாமென்று மக்கள் ஒரு பொருளாக எண்ணுதல் ஆகாது.

ஆண்டவனது அருளாட்சியின்கண் அடங்கிய எல்லா உயிர்களும் எல்லா மக்களும் ஆண்டவனுக்கு ஒன்றேயாம். எல்லாரும் அவருக்கு ஒரு வயிற்றுப் பிள்ளைகளேயாம். இத்தகைய பரந்த நோக்கம் ஒவ்வொருவருக்கும் இருத்தல் வேண்டும். நாட்டினாலும், மொழியினாலும், சமயத்தினாலும், காலத்தாலும், பழக்க வழக்கங்களாலும் மக்களும் ஏனைச் சிற்றுயிர்களும் பலவேறு வகையாக வேற்றுமை தோன்றக் காணப்படுவார்கள். எனினும், எல்லா நாடுகளும் எல்லா மொழிகளும் எல்லாச் சமயங்களும் எல்லாக் காலங்களும் எல்லாப் பழக்க வழக்கங்களும் ஆண்டவனது ஒரே ஆட்சியில் அடங்குவனவேயாகும். இறைவனது ஆட்சியின்கண் அடங்காத ஓர் உலகமேனும் அல்லது ஓர் அணுவேனும் யாண்டாயினும் உண்டு கொலோ? இல்லையன்றே! ஆண்டவனுக்கு வேறாக மலம் என்னும் ஓர் அறிவில் பொருள் இயற்கையேயிருத்தலால், அதன் ஆற்றலாற் சில நாடுகளும் மொழிகளுஞ் சமயங்களும் முதலானவை நன்மையில்லனவாயுமிருக்கும். அங்ஙன மிருத்தலால் அவற்றையுடையார்பால் ஆண்டவனது பேரருள் விளக்கம் நிரம்பத் திகழமாட்டாது. எடுத்துக்காட்டாக, விளக்கம் மிக்கதொரு பளிங்குப் பாறையும் அவ் விளக்கம் இல்லாததொரு கருங்கற் பாறையும் எடுத்துக்கொள்வோம். அங்ஙனமே தீஞ்சுவைச் சாறு மிக்க நறுநிறக் கனியொன்றும் அச் சுவைச் சாறு இல்லாத வன்கருங்கா

யொன்றும் எடுத்துக்கொள்ளலாம்; இவற்றுள் பளிங்குப் பாறையின்கண்ணும் நறுநிறக் கனியின்கண்ணும் ஆணவமலத் தடிப்பு மிக்கில்லாமையால், அவற்றின்கண் ஆண்டவனது திருவருள் விளக்கம் முனைத்து நிற்கின்றது. ஆனால், கருங்கற் பாறையின்கண்ணும் வன்கருங் காயின்கண்ணும் ஆணவத் தடிப்பு முனைத்து நிற்கின்றது. ஆதலால் அவற்றின்கண் இறைவன் திருவருள் விளக்கம் குறைந்து நிற்கின்றது. இங்ஙனமே நாடுகளிலும் மொழிகளிலுஞ் சமயங்களிலுங் காலத்திலும் பழக்கவழக்கங்களிலு மெல்லாம் ஆணவத் தடிப்பியல்புகள் மிக்குத் திருவருள் விளக்கங் குறைந்தும், திருவருள் விளக்கம் மிக்கு ஆணவத் தடிப்பியல்புகள் குறைந்துங் காணப்படும். திருவருள் விளக்கம் மிக்க நாடுகளும் மொழிகளுஞ் சமயங்களும் முதலானவற்றை உயர்ந்த நாடுகள் உயர்ந்த மொழிகள் உயர்ந்த சமயங்கள் என்றும், ஆணவத் தடிப்பியல்புகள் மிக்கவற்றைத் தாழ்ந்தவை யென்றுங் கூறுவது மரபாம். ஆனால் உயர்ந்தவை தாழ்ந்தவை யென்னும் இவ் வெல்லாப் பொருள்களும் ஆண்டவனது அருளாட்சியின்கண் அடங்கி ஒருமிக்கத் தொழிற்படுவனவேயாம். உயர்ந்தவை யெல்லாம் முன்னொருகால் இவ் வுயர் விழுந்து தாழ்ந்து நின்றவையேயாகும்; தாழ்ந்தவை யெல்லாம் இனியொருகால் இத் தாழ்வு நீங்கி உயர்ந்து நிற்பவையேயாகும்; மேலும் எல்லாப் பொருள்களும் ஒவ்வோர் வகைக்குப் பயன்பட்டு நிற்பவையேயாகும். ஆதலால் எப்பொருள்களையும் மக்கள் இகழ்ந்தொதுக்குதலாகாது.

ஆனால் எல்லாவற்றையும் நாம் ஒன்றெனக் கொள்ளலுமாகாது. அங்ஙனமானால் வேற்றுமை பாராட்டா திருத்தலென்பது என்னையெனின், உயர்வா யிருப்பவற்றிற்கு மகிழ்தலும், உயர்வின்றித் தாழ்வாயிருப்பவற்றிற்கு அவை அங்ஙனமிருத்தற்காக இரங்கி அவற்றின் மேன்மையை நாடுதலுமே யாகும். உயர்ந்த பொருள்கள்பால் அவை உயர்வடைந் திருத்தற்காக அன்பு வைக்கின்றோம்; தாழ்ந்த பொருள்கள்பால் அவை உயர்வடைந்து வரல் வேண்டுமென்று அன்பு வைக்கின்றோம்; ஆகவே ஊன்றி நோக்குங்கால் இப்போது எல்லாப் பொருள்களிடத்திலும் நாம் அன்பு வைத்தவர்களாவமே யல்லாமல் எதனையும் அருவருத்தவர்களாகோம். இங்ஙனந்தான் எல்லாம் வல்ல இறைவனும் புல் முதல் மக்கள் ஈறாக எல்லா உயிர்களிடத்திலும் வேற்றுமை பாராட்டாமல் அன்பும் அருளிரக்கங்களுங் காட்டிவருகின்றான். ஆதலால் இவ்வுலகத்தின்கண் நாடுகளாலும் மொழிகளாலுஞ் சமயங்களாலுங் காலங்களாலும் பழக்க வழக்கங்களாலு மெல்லாம் நிரம்பவும் வேறுபட்டு உயர்வு தாழ்வு தோன்றக் காணப்படும் எல்லா மக்கள்பாலும் அன்றி எல்லா உயிர்கள்பாலும் வேற்றுமை பாராட்டாமல் ஒரே பொதுநோக்காய் அன்பும் அருளும் இரக்கமும் உடையரா யிருக்கப் பழகுவதுதான் மக்களாய்ப் பிறந்தார்க்கு முதற் கடமையாகு மென்பது இனிது விளங்குதல் காண்க.

இனி, இங்ஙனம் மக்களெனப்படுவார் அன்பும் அருளிரக்கங்களும் உடையரா யிருக்கப் பழகிக்கொள்

வதோடு அவர்தம் மக்கட் பிறவியின் கடமை தீர்ந்து விடவில்லை; இவ்வன்பு அருளிரக்கப் பழக்கங்கள் மக்கட் பிறவியின் முழு நோக்கத்துக்கு ஒரு படியே யாகும். மக்களாவார் அறிவும் அன்பும் அருளிரக்கங்களும் வளர்த்துக்கொண்ட பின், அவ்வன்பு அருளிரக்கங்களைக் கொண்டு ஆண்டவனை வழிபடுதல் வேண்டும்; ஆண்டவனை வழிபடுதலாவது அவன்றன் அன்பு அருளிரக்க நிலைகளையெல்லாம் உணர்ந்து இன்புறுதலும், அவன் அறிவு சென்றவழி, அவன் அன்பு சென்ற வழி, அவன் அருளிரக்கங்கள் சென்றவழி மக்கள் தம் அறிவையுந் தம் அன்பையுந் தம் அருளிரக்கங்களையும் நிறுத்தி அவன் திருவருளுக்கு உரியராய் உயிர் வாழ்தலுமேயாகும்; இவ்வகையான உண்மை வழிபாடு தமக்குக் கைவரல் வேண்டுமானல் எல்லாம் வல்ல முழு முதற் பெருமானுன ஆண்டவனைத் தெரிந்து சென்று மக்கள் நாடோறும் வணங்குதலும் வாழ்த்துதலும் வேண்டும்; இங்ஙனம் இறைவனுடைய வணக்கமும் வழிபாடும் இல்லாதார்க்கு உலகத்தில் எவ்வுயிர்களிடத்திலும் அன்பும் அருளிரக்கங்களும் ஒரு சிறிதும் எழமாட்டா. இவ்வரிய உண்மையைத் தெளிய உணர்ந்தே, அருணந்தி சிவனுர் என்னும் நம் அருமைப் பேராருட் குரவரும்

"ஈசனுக்குஅன் பில்லார் அடியவர்க்குஅன் பில்லார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும்அன் பில்லார்
பேசுவதென் அறிவில்லாப் பிணங்களை நாம் இணங்கில்
பிறப்பினிலும் இறப்பினிலும் பிணங்கிடுவர் விடுநீ

ஆசையொடும் அரனடியார் அடியாரை அடைந்திட்டு
அவர்கருமம் உன்கரும மாகச் செய்து
கூசிமொழிந்து அருண்ஞானக் குறியில் நின்று
கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே." *

என்று அருளிச் செய்வாராயினர். உலகுக்கெல்லாம் ஒரு முதல்வனை ஆண்டவன்பால் அன்பிலராயின் அவன் ஆட்சியின்கண் அடங்கிய உயிர்கள்பால் மக்கள் எங்ஙனம் அன்பு செலுத்தமாட்டுவர்! எங்ஙனம் அருளிரக்கங்கள் காட்ட முனைகுவர்! அற்றன்று, எல்லாம் வல்ல ஒரு முழுமுதற் கடவுளை வணங்கவும் வாழ்த்தவும் வகையறியாதா ரெல்லாரும் மக்களிற் சிலர்பால் அன்புடையரா யிருக்கக் காண்கின்றனமே யெனின், அது பொருந்தாது; அவர் செலுத்தும் அன்பும் அருளிரக்கமுமெல்லாம் பிறரால் தமக்கு உண்டாகும் பயன் நோக்கி எழுவனவேயாகும். அப் பயன் குன்றியக்கால் அவரது அன்புங் குன்றிவிடும். ஆதலால் அஃது சான்றோரால் தழுவுதற்குரிய அன்பன்றாம். ஆனால் ஈண்டுக் கூறப்படும் அன்பும் அருளிரக்கங்களு மெல்லாம் இறைவனைப்போற் பயன் கருதாமற் செலுத்தப்படுந் தெய்வ இயல்புகளாகும் என்று அறிதல் வேண்டும்; இத்தகைய அறிவும் உணர்ச்சியும் அன்பருளிரக்கங்களுமெல்லாம் எல்லாம் வல்ல ஒரு முழுமுதற் கடவுளின் வணக்கத்தினாலும் வழிபாட்டினாலுமே மக்கள்பால் இடையறாமல் நிகழ்ந்து நிலையாய் நிலைபெறும்; இன்றேல் ஏதானுமோர் இடுக்குவரின் எல்லாம் இருக்குமிடந் தெரியாமற் பறந்துபோம். ஆதலால் அறிவும்

* சிவஞான சித்தியார், சுபக்கம்; ௧௨ : ௨.

உணர்ச்சியும் அன்பும் அருளிரக்கங்களுமென இத் தெய்வ இயல்புகளில் நிலையாய் வைகிப் பேரின்பப் பெருவாழ்வு பெற விரும்புவார்க்கு இறைவன் வழி பாடு மிகவும் இன்றியமையாததாகும் என்பதை ஊன்றிக் கருத்திருத்துதல் வேண்டும். இறைவன் வழி பாடு இல்லாமல் வாளாச் 'சன்மார்க்கம்' என்றும், 'சமரச சன்மார்க்கம்' என்றும் வாய் உரை கூறிக் கொண்டு, 'எல்லா உயிர்களும் எமக்கு ஒன்றேதாம்; அவற்றுள் உயர்வு தாழ்வு என்பது ஏதுமில்லை; எல்லா உயிர்களிடத்திலும் யாம் வேற்றுமை கருதாமல் மிக்க அன்பு செலுத்துகின்றேம்' என்பதெல்லாம் வெறும் பொருளில் மொழிகளேயாகுமென்க. ஆதலால் முதன் முதலில் அன்பருளிரக்கங்களை மிகுத்துக்கொள்ளும் பொருட்டும் மக்கட்கு ஆண்டவன் வணக்கமும் வழிபாடும் வேண்டும்; பின்பு மிகுத்துக்கொண்ட அவ் வன்பரு ளிரக்கங்களால் அவர்கள் ஆண்டவனுடைய பேரன்பு பேரருள் பேரிரக்க நிலைகளை யெல்லாம் நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து பேரின்ப முறுதற்கும் கடைப்படியாக ஆண்டவனது வணக்கமும் வழிபாடும் வேண்டும் என்று எல்லாரும் நினைவிற் பதியவைத்தல் வேண்டுமென்பது. ஆண்டவன் திருவருளால் அன்பருளிரக்கங்களை மிகுத்துக் கொண்டு பின் அவ் வன்பருளிரக்கங்களால் ஆண்டவனை வணங்கி வழிபட்டு அவ்வாற்றால் அவன் திருவருள் பெற்றுப் பேரின்ப வீடுபேறு அடைதல் வேண்டுமென்பது எதுபோ லெனின், அதனை ஓர் எடுத்துக் காட்டால் இங்கு விளக்கிக் கூறுதும்.

அரிய கலைநூற் பொருள்களும் அம்முகத்தால் மெய்யறிவு மெய்யுணர்வுப்பேறும் பெற விரும்பும் நன் மாணுக்கன், நல்லாசிரியரை அடுத்து முதலில் அவரை வணங்கியும் வழிபட்டும் நிற்கின்றான்; வணங்குதலாவது உடம்பும் உள்ளமும் உரையும் அடக்கமுடையனாதல்; வழிபடுதலாவது ஆசிரியன் குறிப்புவழி நிற்றலென்க. இவ் வணக்கத்தினாலும் வழிபாட்டினாலும் மாணுக்கன் உள்ளம் ஆசிரியன் கூறும் நுண்மாண் கலைகளைத் தெரிந்துகொள்ளவும், தெரிந்து மெய்யறிவும் மெய்யுணர்வும் மேன்மேற் பெறவுந் தகுதியெய்துகின்றது. அத் தகுதி யறிந்து ஆசிரியன் மகிழ்ந்து உடனே அம் மாணுக்கனுக்கு மிக அரிய நுண் கலைகளையெல்லாம் மெல்ல மெல்ல இனிமை ததையக் குழைத்து ஊட்டி மெய்யறிவும் மெய்யுணர்வும் பெறவைப்பன். இவ்வாற்றால் ஆசிரியன் வணக்கமும் வழிபாடும் மாணுக்கனுக்குக் கலையறிவும் மெய்யுணர்வும் பெறுதற்கு ஏதுவாயின. இனி ஆசிரியன் திருவருளால் இங்ஙனங் கலையறிவும் மெய்யுணர்வும் பெற்றுக் கொண்ட மாணவன் கடைப்படியாக அக் கலையறிவும் மெய்யுணர்வுங் கொண்டு ஆசிரியனை வணங்கி வழிபட்டு உய்தல் வேண்டும். அங்ஙனம் அது செய்யானாயின், தான் மிகுத்துக்கொண்ட கலையறிவினாலும் மெய்யுணர்வினாலும் அவன் ஏதும் பயனறியாமல் ஒழிகின்றான். பயனாவது இன்பம்; அவ்வின்பத்தை எங்ஙனம் எய்துதலெனின், மாணுக்கன் முன் நிலையில் வாளா வணங்கியும் வழிபட்டும் நின்றாற்போ லல்லாமல், இப்போது தன்னுடைய கலையறிவினாலும் மெய்

யறிவு மெய்யுணர்வினாலும் ஆசிரியனை வணங்கியும் வழிபட்டும் நிற்றல் வேண்டும்.

அதாவது மாணாக்கனுக்கு இப்போது ஆசிரியனுடைய மிகப் பரந்த கலையறிவையும் மிகப் பரந்த மெய்யறிவு மெய்யுணர்வுகளையும் உணர்ந்து பார்த்தற்கும், உணர்ந்து அவை நிகழும் முறையில் நிகழ்த்துதற்கும் உரிய தகுதியான கலையறிவும் மெய்யறிவு மெய்யுணர்வுகளும் நிரம்பி யிருக்கின்றன. ஆதலால் மாணாக்கன் ஆசிரியனுடைய பேரறிவு பேருணர்வுகளை யெல்லாம் இடையறாமல் நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்தும், பின் அவ்வறிவு உணர்வுகள் நிகழும் வழியெல்லாந் தன் அறிவு உணர்வுகளை நிகழ்த்தியும் இன்பம் ஊற்றெடுக்கப் பெறுவ னென்க. இங்ஙன மெல்லாம் மெய்யுணர்வு நிகழ்ச்சிகளில் மேன் மேலும் முன்னேறி வந்து இன்ப ஊற்றாய் இலகுதலான தன் மாணாக்கனுடைய வணக்கமும் வழிபாடுங் கண்டு ஆசிரியன் மிக்க மகிழ்ச்சியும் முழு அன்புங் கொண்டு தன்னுடைய பெருங் கலை யறிவையும் மெய்யுணர்வுப் பெருக்கையும் அவனுக்கு முழுவதும் வழங்கி அவனைப் பின்னும் பின்னும் அவ்வின்ப ஊற்றில் நிலையாய்ப் படிவித்திடுவனன்றோ? இதனால் மாணாக்கனுடைய கலையறிவும் மெய்யறிவு மெய்யுணர்வுகளும் ஆசிரியனை வணங்குதற்கும் வழிபடுதற்கும் ஏதுவாயினமை நன்கு தெளியப்படும். இவ் வெடுத்துக்காட்டினாற் பெறப்படும் முடிபு, ஆசிரியன் திருவருளால் மாணாக்கன் கலையறிவு முதலாயின பெறுதலும், பின் அக் கலை

யறிவு முதலானவற்றால் அவன் ஆசிரியன் திருவருளெய்தி இன்புறுதலுமென அவைதாம் ஒன்றற்கொன்று ஏதுவும் பயனுமாய்ப் பெரிதும் இயைபுடையவாகுமென்பது.

இங்ஙனமே மக்களாய்ப் பிறந்தாரெல்லாரும் எல்லாம் வல்ல ஒரு முழுமுதற் கடவுளின் வணக்கமும் வழிபாடும் உடையராய் அக் கடவுளின் திருவருள் கொண்டு அறிவும் உணர்ச்சியும் அன்பும் அருளிரக்கங்களுமெனத் தமக்கு இயற்கையேயுள்ள நல்லியல்புகளைப் பெருக்கிக்கொண்டு அங்ஙனம் பெருக்கிக் கொண்ட அந் நல்லியல்புகள் கொண்டு தம் ஆண்டவனை உணரும் ஒழுக்கமுடையராய் அவனை வணங்கியும் வழிபட்டுந் திருவருள்பெற்றுப் பேரின்ப வீடுபேறு அடையற்பாலாரென்று அறிதல் வேண்டும். இதுதான் மக்கட்கு நன்னெறி (சன்மார்க்கம்) என்பதாம் ; இந் நன்னெறியானது எவ்வுயிர்களிடத்திலும் வேற்றுமை காணுமல் அன்பும் அருளிரக்கங்களுங் காட்டி இறைவன் திருவருளை நாடுதலின் இதுவே பொது நன்னெறி (சமரச சன்மார்க்கம்) எனவுங் கூறப்படும் ; சைவ சமயம் என்னும் மற்றொரு விழுமிய பெயராலுந் தொன்றுதொட்ட வழக்காய் வழங்கப்பட்டு வருந் திருவருள் நெறியானது இப் பொது நன்னெறியேயாகும் ; மிகப் பழைய காலந்தொட்டுத் திருவருள் வல்ல நந் தமிழ்ச் சான்றோர்களால் இவ் வரிய உண்மைகள் தம் அறிவு உணர்வுகளின் பெரும் பழக்கத்திலிருந்து மிக நுட்பதிட்பமாய் ஆராய்ந்து தெளியப்பட்டுப் பின் ஒரு நெறிப்பட நந்தம் புண்ணியத்

தமிழகத்தில் வழங்கி வருந் தனித்தமிழ் நெறியான இச் சைவ சமயமும், அதன் அன்பருளிரக்கப் பொது நன்னெறிக் கருத்துக்களும் உலகம் முழுமைக்கும் உரிமையும் பொதுவும் உடைய முதன்மையான உண்மைகளாமென்று அழுத்தமாய்த் தெளிந்துணர்ந்து கொள்ளவேண்டுவது நம் முதன்மையான கடமையாகுமென்பது. ஆகவே அச் சமய நன்னெறியில் நின்று நம் முழுமுதல் ஆண்டவனைத் தெளிந்து அவனுடைய எல்லையில்லாத் திருவருட்பெருக்கும் அதன் பயனான முடிந்த பேரின்ப வீடுபேறும் அடையும் பொருட்டு முதலில் நாமெல்லோரும் நம் ஆண்டவன் திருவருளை முன்கொண்டு புல் முதல் மக்கள் ஈறான எல்லா உயிர்கள்பாலும் நாடு மொழி சமயஞ் சாதி முதலான எவ்வாற்றானுந் தினைத்தனையும் வேற்றுமை காணாத அறிவையும் உணர்வையும் அன்பையும் அருளிரக்கங்களையும் பெருக்குதுக்கொள்ள இன்று தொட்டே முற்படுவோமாக' என்பது.

என்றிங்ஙனமெல்லாம் பிள்ளைப் பெருமான் எல்லாம் வல்ல ஆண்டவனுடைய திருவருட் பேருண்மைகளையெல்லாம் நிரல்பட வகுத்தெடுத்துக் கொண்டு ஆங்காங்கும் வற்புறுத்தி வற்புறுத்தி மிக இசைவான முறையில் தெளிவாய் விளக்கிச் 'சமரச சன்மார்க்க'மென்னுஞ் சைவப் பொது நன்னெறியை நிலைபெறுக்கி மக்களை நல்வழிப்படுத்துவாரானார். இதனால் அடிகட்குத் 'திருவருட் பிரகாச வள்ளலார்' என்னுஞ் சிறப்புப் பெயரும் எங்கும் வழங்குவதாயிற்று. வடலூரிற் சென்றிருந்தபொழுது பிள்ளையார் இடைவிடா

மல் விரிவுரை செய்து எல்லாரையுந் திருத்தினார். அடிகள் ஆங்காங்கும் வகுத்துரைக்கும் விரிவுரைக் கருத்துகள் மேற்காட்டியவாறுதல்,

“ அருள்வி ளங்கிய திருச்சிற்றம் பலத்திலே யழியாப்
பொருள்வி ளங்குதல் காண்மினோ காண்மினோ புவியீர்
மருள்உ ளங்கொளும் வாதனை தவிர்ந்தருள் வலத்தால்
தெருள்வி ளங்குவீர் ஞானசன் மார்க்கமே தெளிமின் ”

(௬, உய்வகை கூறல், ௧௨)

“ திருநெறியொன் றேயதுதான் சமரசசன் மார்க்கச்
சிவநெறியென் றுணர்ந்துலகீர் சேர்ந்திடுமின் ஈண்டு ”

(௬, வாய்ப்பறை யார்த்தல், ௧௨)

என்னும் அவர்தந் திருவருட்பாத் திருமொழிகளால் இனிது தெளியப்படும். இவ்வகையாகச் ‘சமரசசன் மார்க்க’ உண்மைகளை மக்கட்கு அறிவுறுத்தி அவர்களை அச் ‘சன்மார்க்க சங்கத்’தில் அடைவித்தலையே வள்ளற்பெருமான் தமது பிறப்பின் கடமையாய் மேற்கொண்டிருந்தா ரென்பதும்,

“ எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும் ”

(௬, வேண்டுகோள், ௧)

“ அகத்தே கறுத்துப் புறத்து
வெளுத்திருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க
சங்கத்து அடைவித்திட அவரும்

இகத்தே பரத்தைப் பெற்று
  மகிழ்ந்திடுதற் கென்றே எனைஇந்த
யுகத்தே இறைவன் வருவிக்க
  உற்றேன் அருளைப் பெற்றேனே"

(சு, வேண்டுகோள், க)

என்று அப் பெருமானே அருளிச் செய்தலால் நன்கு விளங்கும்.

வள்ளலார் கருங்குழியில் விளங்கிய காலங்களிலும் பல அருஞ்செயல்கள் நிகழ்த்தினர். ஒருகால் அடிகள் தம் மாணவருள் ஒருவரைக்கொண்டு 'இலக்கண வியனடை வழக்கப்படுத்துவிக்கும் பத்திரிகை' ஒன்று எழுதுவித்துத் தம்பாற் புலமைச் செருக்குடன் அணுகினெருருவரை அவரது செருக்கழித்துத் திருத்தினர். மற்றொருகால், 'அருவாய் யாண்டும் நிறைந்துள்ள கடவுளுக்கு ஓர் உருவஞ் சமைத்து வழிபடுதல் அடாது' என்றுரோர் அறிஞரை, 'அங்ஙனம் அவருக்குத் திருவுருவம் அமைத்து வழிபடுதல் முறையேயாம்' என்று மிகச் சிறந்த வாதத்தால் தெளிய அறிவுறுத்தி இனிது வென்றார். பின்னெருகால், "வாழைப்பழங் கொடுத்தவன் கல்லாலடித்தான்; கல்லாலடித்தவன் வாழைப்பழங் கொடுத்தான்" என்றொரு கதை சொல்லி மலைவு மிக்க புலவரொருவரை அம் மலைவினின்றும் விடுவித்தார். இன்னெருகால் நமக்கு ஒரு நல்லாசிரியர் வேண்டும் என்று அவரது நல்வரவை எதிர்நோக்கிக்கொண் டிருந்த மாணக்கர் ஒருவரை அடிகள் அவர் மறைவில் நினைத்துக்கொண்டிருந்த நினைவின்படியே சென்று ஆட்கொண்டருளினர்.

இங்ஙனமே அடிகள் ஆங்குச் செய்த அருஞ் செயல்கள் பல. அடிகள் கருங்குழியில் இருக்கும் பொழுதே சித்தராயும் விளங்கினார்.

பெருமான் கருங்குழியை அடைதற்கு முன்னரே அடிகள் இரண்டாந் திருமுறையாக உள்ள எல்லாப் பாடல்களையும் பாடிவிட்டனரென்பது மேற்காட்டப் பட்டது. கருங்குழிக்கு வந்தபின் மூன்றாந் திருமுறைப் பாடல்களையும் நான்காந் திருமுறைப் பாடல்களையும் பாடியருளினர். கருங்குழியிற் பாடிய பாடல்களில் முதல் இருநூற்று முப்பத்தைந்து பாடல்கள் திருவொற்றியூரை நினைந்து பாடப்பட்டிருக்கின்றன. எஞ்சிய இருநூற்று முப்பத்தெட்டுப் பாடல்களுந் தில்லையை நினைந்து வழுத்தப்பட்டிருக்கின்றன. ஆகையால் இவைகள் முறையே மூன்றாந் திருமுறையாகவும் நான்காந் திருமுறையாகவும் வகுத்துச் சேர்க்கப்படலாயின. மூன்றாந் திருமுறையுள் 'தலைவி பாங்கியொடு கிளத்தல்' 'தலைவி பறவைமேல் வைத்துப் பையுளெய்தல்' 'தலைவி இரங்கல்' 'தலைவி நினைவின் மகிழ்தல்' 'தலைவி வியந்து மொழிதல்' 'நற்றாய் நயத்தல்' 'தலைவி வருந்தல்' 'தலைவி வியத்தல்' 'தலைவி மிகுகழி காதல்' 'செவிலி கழறல்' 'தலைவி கடிற்றெதிர் மறுத்தல்' 'தோழியொடு கூறல்' என்னுந் தலைப்புகள் காணப்படுகின்றன. இவையெல்லாம் தலைவனைப் பிரிந்தபின் தலைவிக்கு நிகழும் அகப்பொருள் துறைகளாகும். இவை இங்ஙனமாதல் தொல்காப்பியம், இறையனாரகப் பொருள், திருச்சிற்றம்பலக் கோவையார் முதலான அகப்பொருள் நூல்களாலெல்லாம் இனிது விளங்கும்.

விரண்டொடு கருங்குழியின்கண் அமர்ந்து பாடியரு ளிய திருவொற்றியூர்ப் பாடல்களுந் தில்லைப் பாடல் களுமான இவ் விரண்டு திருமுறைகளும் உடன்சேர்க் கப்பட, அவைகள் முறையே முதல் நான்கு திருமுறை களாய் நின்றன. இந் நான்கு திருமுறைகளுஞ் சூழ இருந்த அன்பர் சிலரால் அச்சிட்டு வெளிப்படுத்தப் பட்டன. இவை அச்சின் மிளிர்ந்ததும் இவற்றை அரு ளிச் செய்தற்கு முன்னரே முதன் முதலில் முருகப் பெருமான்மாட்டு அகமுருகிப் பாடி மறைவில் வைக்கப் பட்டிருந்த திருத்தணிகைப் பாடல்கள் அவ்வளவும் அச்சேறுங் கருத்தால் தாமே வெளிப்படுத்தப்பட் டன. முன் நான்கும் அச்சாய் விட்டமையால் இவை ஐந் தாந் திருமுறையென வழங்கப்படலாயின. அந் நான் கும் அச்சிடப்படாததற்கு முன்பே இத் திருத்தணி கைப் பாடல்கள் கிடைத்திருக்குமாயின், வள்ளலா ரின் வரலாற்று வழியே திருமுறைகள் முறைப்படுத் தப்பட்டுத் திருவருட்பா அச்சிடப்பட்டிருத்தலை நோக்க, இவைகள் முதல் திருமுறையெனப் பெயர் பெற்று இப்பொழுது முதல் திருமுறையாயிருப்பது இரண்டாந் திருமுறையாகவும், இரண்டு மூன்றாகவும், மூன்று நான்காகவும், நான்கு ஐந்தாகவும் வழங்கும் என்று துணிந்து கூறலாம். முதல் நான்கும் முதலில் அச்சிடப்பட்டமையாற் பின்னுற் கிடைத்த தணி கைப்பாட்டுகள் தனி நூலாகப் பின் அச்சிடப்பட் டன. அதன்பின் ஆறுந்திருமுறையும் பின்னுல் இயற் றப்பட்ட ஏதுவால் தனி நூலாக அச்சாய் உலவிற்று. இவையெல்லாம் இரண்டாவதாகத் திருவருட்பா அச்

சானபோது ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டு ஒரே நூலாயின.

இவ்வாறான இத் திருவருட்பா வரலாற்றில் முதல் ஐந்து திருமுறைகளும் அடிகள் கருங்குழியிலிருந்த பொழுதே அச்சாயினவென்க. முதல் நான்கு திருமுறைகட்குப் பின் அச்சிடப்பட்ட ஐந்தாந்திருமுறையின் முகத்திற் 'பிள்ளையார்'மேற் பாடப்பட்ட சில பாடல்கள் 'சித்திவிநாயகர் பதிகம்' 'வல்லபை கணேசர் பிரசாதமாலை' 'கணேசத் திருவருண்மாலை' எனவும், 'தனித்திருமாலை' எனவுங் காணப்படுகின்றன. இவற்றுளொன்றில்,

"காவிநேர் களத்தான் மகிழ்ஐங்கரக்
கடவுளேநற் கருங்குழி என்னும்ஊர்
மேவிஅன் பர்க்கருள் கணநாதனே
விளங்குஞ்சித்தி விநாயக வள்ளலே"

(ரு, கணேசத் திருவருண்மாலை, ம)

எனக் கருங்குழி என்னும் ஊர் குறிக்கப்படுகின்றது. ஐந்தாந் திருமுறையை அச்சிட்டபொழுது முதலிற் 'பிள்ளையார் வணக்கம்' இருத்தல் வேண்டுமென்று அன்பர்கள் சிலர் விழைந்து அடிகள்பால் விண்ணப்பிக்க, அவரும் அங்கு விளங்கிய பிள்ளையார்மேற் சில பதிகங்கள் அருளிச்செய்து கொடுத்தனராதல்வேண்டும். இங்ஙனம் ஐந்தாந் திருமுறை கருங்குழியின் திருப்பதிகங்களைத் தலைப்பிற் பெற்று, அச்சானமையின் அஃதும், அதற்கு முன்பே அச்சான முதல் நான்கு திருமுறைகளும் அடிகள் கருங்குழியில் விளங்கியபொழுதே அச்சாய்விட்டன வென்பது உண்மை

யாயிற்று. மேலும், வள்ளலார் 'பிரபவ' ஆண்டு பிறந்த பின்னரே வடலூர்ப் பெருவெளிக்கு எழுந்தருளி யிருத்தலால், 'அட்சய' ஆண்டே அச்சிடப்பட்ட திரு வருட்பா அங்ஙனம் அச்சிடப்பட்டு வெளியானது அடிகள் கருங்குழியிலிருந்தபோதுதா னென்பது நிலை பேறுனது காண்க.

இங்ஙனம் இவை அச்சேறிய காலத்து வள்ள லார் வெளிப்படுத்திய ஓர் அரிய நல்லியல்பு இங்குப் பெரிதும் நினைவு கூர்ந்து மகிழற்பாலதா யிருக்கின் றது. அன்பர்கள் திருவருட்பாவை அச்சிடும்போது பெருமானது திருவுள்ள இசைவுக்கு வேண்டினர். ஆனால் அடிகள் முதலில் அவர்கள் கருத்துக்கு இசைய வில்லை. ஆயினும் அவ்வன்பர்கள் தமது விருப்பத்திற் பிடியாய் நின்று வள்ளலாரை மேன்மேலும் வேண்டுவா ராயினர். அடிகள் அஃதறிந்து அவ்வன்பர்கள்மாட்டும் ஏனையோர்மாட்டும் இரங்கியே பின் அதற்கு இசைந்த னர். பிள்ளைப் பெருமானுக்குத் தஞ்செயல்கள் செயற் கரியவே யாயினும், அவற்றை அவர் வெளியிற் புல னுகச் செய்து அம்முகத்தால் தம்மைப் பிறர் புகழ வைத்துக்கொண்டு அதுகேட்டு மகிழுந் தீய இயல்பி னர் அல்லர். தமது நிலை எத்துணைதான் உயர்ந்த தாயினும், அடக்கமே கைகண்ட செல்வமென உன்னி யாண்டும் அடங்கியே நிற்கு நீரர்! அன்பர்கள் அழைப் பிற் கிணங்கி ஒருகால் அடிகள் ஓர் ஊருக்கு இரா நேரத்திற் சென்றுகொண் டிருந்தார். அன்பர்களுஞ் சிலர் அடிகளைப் பின்பற்றிச் சென்றனர். அஞ்ஞான்று ஆண்டுத் திருடர்கள் சிலர் திடுமெனத் தோன்றி அடி

களுடன் வந்த அன்பர்களை ஓங்கி அடிக்கும்பொருட்டுத் தம் கைகளை மேலே தூக்கினர். அன்பர்கள் துணுக்குற்று நெஞ்சங் கலங்கி அஞ்சினர். பிள்ளைப் பெருமான் அஃதுணர்ந்து பெரிதும் வியந்து திருவருளை எண்ணி அத் திருடர்களின் கைகளை மேல் தூக்கியவாறே விறைக்கச் செய்துவிட்டார். அன்பர்கள் இவ் வருட்செய்கையைத் தெரிந்து அச்சந் தீர்ந்து பிள்ளையார் திருவடிகளைத் தொழுது வணங்கிப் 'பெருமானே, தேவரீர் திருவருளால் இன்று ஏழையேம் உய்ந்தனம்; தேவரீரது திருவருட்பெருக்கை என்னென்பேம்; எங்ஙனம் வியப்பேம்; எங்ஙனம் போற்றுவேம்' என்று மெய்விதிர்த்து நாக்குழறக் கூறினார். பெருமான் அவர் அன்பிற்கு மகிழ்ந்து, 'அன்பர்காள், இஃது ஆண்டவன் செய்கை; இதனை எங்கும் வெளியிடல் வேண்டாம்' என்று அவர்க்கு உரைத்தருளினர். பின் அங்கு வந்த திருடர்களெல்லாருந் தமது பிழையையும் பிள்ளையாரது பெருமையையும் இனிது உணர்ந்து உளந்திருந்தி அடிகள் திருவடிகளைத் தொழுது குறையிரந்து அவரது கடைக்கண் நோக்கால் தாம் எய்திய பேர் ஒறுப்பினின்றும் நீங்கி உய்ந்து விடைபெற்றேகினார். மற்றொருகால், வடலூருக்குச் சிறிது தொலைவில் உள்ள ஓர் ஊரிற் சாதல் துன்பத்திற் கிடந்து உயிர்துடிக்கும் ஓர் அன்பர்க்கு அடிகள் சிற்றம்பலப் பெம்மான்றன் செல்வத் திருநீறு அளித்து அவரைக் கூற்றுவன் வாயினின்றும் மீட்டருளினார். மீட்டருளி, அந் நொடியிலேயே அடிகள் வடலூரை நண்ணி அங்கு விரிவுரை செய்வாராயினர். இவ்

வருஞ் செயலை அச் சாதல் நீங்கிய அன்பர் தெரிந்து கொண்டவளவில், அடிகள், 'இஃது ஆண்டவன் செயல்; இதனை யாண்டும் வெளியிடற்க' என்று அவர்க்குக் கட்டளையிட்டருளினார்; இங்ஙனமே வேறொருகாற் சென்னையில் ஓர் அன்பருடன் இருந்து ஓர லுவல் பார்த்துவிட்டு அங்கொடியிலேயே வடலூருக்கு எழுந் தருளி விரிவுரை செய்துகொண்டிருந்து, அங்ஙனஞ் செய்துகொண்டிருந்த தமது திருவருட் செயலைப் பின் னொருகாற் றெரிந்துகொண்ட அச் சென்னை யன்பர்க் கும் 'இஃது ஆண்டவன் செயல்; வெளிப்படுத்த வேண்டாம்' என்று ஆணையிட்டருளினர். இன்னோ ரன்ன அருஞ் செயல்களாலும் அவற்றால் அவர் யாண் டும் எட்டுணையும் புகழ்விரும்பா நல்லியல்புகளாலும் அவரது அடங்கிய அருநிலை எம்மனோர்க்கெல்லாம் இனிது புலனாகின்றதன்றோ! இங்ஙனமாக அடிகள் அங்கங்கும் பல அருஞ் செயல்கள் செய்துகொண்டும், தெய்வத் திருவருள் மணஞ் சொற்றொறுங் கமழுந் தெளிதமிழ்த் தீந் திருப்பதிகங்கள் இயற்றிக்கொண் டும், இடையறாது விரிவுரைகள் நிகழ்த்திக் கொண் டும், சூழ உள்ள பல தெய்வத் திருப்பதிகளுக்குச் சென்று சிவத்தை வணங்கிக்கொண்டும் கருங்குழியிற் பதினொரு ஆண்டுகள் விளங்கினர்.

௫. வடலூர்ப் பெருவெளி

'சைவசமயம்' என்பது 'பொது நன்னெறியே' (சமரச சன்மார்க்கமே) யென்றும், பொது நன்னெறி யென்பது 'அருளொழுக்க'மே யென்றும் அடிகள் பல வாறான உயிரிரக்க விரிவுரைகளை எங்கும் இடையறா மல் நிகழ்த்திக்கொண்டிருந்தமையால், உலகத்தி லுள்ள உயிர்கள் அவ்வப்பொழுதும் எய்தும் எல்லாத் துன்பங்களும் அடிகளின் திருவுள்ள மலரில் அடுக் கடுக்காய்த் தோன்றி அவருக்குப் பெரியதோ ரிரக் கத்தை விளைத்துவிடலாயின. இவ்வாற்றால் அடிகள் இரக்கமே ஓர் உருவாயினர். அடிகள் காலத்திலிருந்த சான்றோ ரொருவரும்,

"இரக்கமே வடிவாம் வடலூரான்"

எனவும்,

"மிளகைநேர் ஒருசிறிய வண்டெழுந்து
விளக்கில் வீழினும் விழிப்புனல் சிந்தி
இளகு நெஞ்சகம் பெறும் வடலூரான்"

எனவும் அவரைத் தமது வாய்குளிரக் கூறி வழுத் தினமை பெரிதும் நினைவுகூரற்பாலது. உயிர்கள்பால் தமக்கு எழுகின்ற விழுமிய பேரிரக்க நிலையினை வைத்து அடிகளே ஓரிடத்தில்,

"உருவஎன் உயிர்தான் உயிரிரக் கந்தான்
ஒன்றதே இரண்டிலை இரக்கம்
ஒருவில்என் உயிரும் ஒருவும்என் உள்ளத்
தொருவனே நின்பதத் தாணை"

(௬, பிள்ளைப் பெருவிண்ணப்பம், ௩௩)

என்று தம் முதல்வன்பால் மிக உருக்கமாகக் குழைந்து

விண்ணப்பஞ் செய்வர். இங்ஙனமாக இராமலிங்க அடிகள் உயிரிரக்கத்துக்கே ஓர் உறையுளாய் விளங்கின மையின், அவரது திருவுள்ளம் உலகத்து உயிர்களின் துன்ப நிலைகளையே எந்நேரமும் எண்ணுவதன்றி வேறு எதனையும் ஒரு சிறிதும் எண்ணாதாயிற்று. அதனாற் பிள்ளையார் என்ஞான்றும் நெஞ்சம் உருகி உருகி விழிப்புனல் சிந்தியபடியாயிருப்பர். அடிகளின் மெல்லென்ற அருள் நெஞ்சம் உயிர்களின் துன்ப நிலையிலேயே ஊன்றிப் படிந்துவிட்டது; ஐயகோ, அடிகள் என் செய்வார்; நினைந்து நினைந்து உள்ளங் குழைந்துருகி அழுவதும், எல்லாம் வல்ல முதல்வன்பால் உயிர்களின் துன்ப நிலைகளையெல்லாம் வனைந்து வனைந்து குறையிரந்து தொழுவதும், ஊற்றெடுத்த கண்ணீரதனால் உடம்பு நனைந்து நனைந்து யாண்டும் விரிவுரை செய்து எல்லார்க்கும் இனிய திருத்தங்கள் மொழிவதுமாய் உயிர்களின் துன்பங்களைத் தம்மால் இயன்றமட்டும் நீக்கும் பொருட்டுப் பெருமான் நிரம்பவும் முயன்றார். ஆனால் அவ்வளவிலேயே வள்ளலார்க்கு அமைதி ஏற்பட்டிலது. உயிர்களின் துன்ப நீக்கத்தின் பொருட்டுத் தாமே செயலளவிலும் ஏதேனுஞ் செய்தல் வேண்டுமெனத் திருவுள்ளம் பற்றினார். பற்றித் தாஞ் செய்தற்குரிய ஆருயிர்த் தொண்டு எதுவென்று ஆராய்ந்து பார்த்தார்.

கடைசியில் உலகத்து உயிர்கள் எய்தும் எல்லாத் துன்பங்களினும் பசித் துன்பமே பெருந் துன்பமாகும் எனவும், ஏனைய துன்பங்கட்கெல்லாம் இப் பசித்துன்பமே அடிப்படையான காரணமாகும் எனவும், ஆதலால்

அத் துன்பத்தினை நீக்குதலே பேருதவியும் பெருந் தொண்டும் ஆகுமெனவும் பெருமான் முடிவு செய்வாராயினர். மேலும், பசித்துன்பம் எல்லா உயிர்களின் உணர்ச்சிக்கும் வருவதாகும்; எஞ்ஞான்றுந் திரும்பத் திரும்பத் தோன்றி உயிர்களை வருத்துவதுமாகும்; ஆனால் ஏனைய துன்பங்களெல்லாமோ வெனின், இங்ஙனம் எல்லா உயிர்களின் உணர்ச்சிக்கும் வாரா; எஞ்ஞான்றும் அவைபால் நிலைத்திரா; அன்றி ஒரோவொன்று அங்ஙனம் எல்லா உயிர்களின் உணர்ச்சிக்கும் வந்து அடிக்கடி நிகழுமாயினும், பசியின் கொடுமைக்குமுன் அவையெல்லாந் தலைகாட்டமாட்டாவாகலானும், பசித் துன்பம் மட்டும் உயிர்களைச் செயலறச் செய்து கூற்றுவன் வாய்க்கும் இரையாக்குதல்போல் ஏனைத் துன்பங்கள் ஒரே பிடியில் அங்ஙனஞ் செய்யாவாகலானும் பசிக்கு மிஞ்சியதொரு துன்பநிலை உலகத்தில் ஏதும் இல்லையென்றே கூறுதல்வேண்டும். அடிகள் இப் பசித்துன்பத்தின் எண்ணரிய பெருங் கொடுமைகளைத் தாம் பெரிதிரங்கி எழுதியருளிய "சீவகாருணிய ஒழுக்கம்" என்னுந் தெளிதமிழ்க் கட்டுரையில் நன்கு விரித்து விளக்கியிருக்கின்றார். பசியின் கொடுமைகள் இத்தகையு வாதல் உணர்ந்தன்றோ பண்டைத் தண்டமிழ்ச் சாத்தனாரும்,

"குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாண்அணி களையும் மாண்எழில் சிதைக்கும்

பூண்அணி மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி ''

என உரைத்து அதனை ஏசுவாராயினர். நந் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாரும் இத்தகைய பெருங் கொடுமைப் பசிப்பிணியை நீக்குவாரது ஆற்றல் தவத் தினும் பெரிதெனக் வைத்து,

" ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவா ராற்றலின் பின் '' *

எனத் திறமாய் அருளிச் செய்வர். ஆகையால் வள்ளற் பெருமான், பசியால் மெலிந்து வருந்தும் மக்களுக்கு அவரது பசித்துன்பத்தை நீக்கும்பொருட்டு ஓர் அறக்கூழ்ச் சாலை (தரும சாலை) அமைத்தல் வேண்டு மெனத் திருவுளங் கொண்டார்.

இனிப் பசித்துன்பத்தினின்றும் உய்யும் மக்கள் தமது அறிவைப் பேரறிவாய் வளர்த்துக்கொள்ளுங் கடமையுடையர் ; ஆதலாற் போதுமறைக் கல்விக் கழ கம் (சமரச வேத பாடசாலை) என்பதொன்றும் அடி கள் நிறுவ விரும்பினார். பின் அங்ஙனம் அறிவைப் பெருக்கிக்கொள்ளும் அன்பர்கள் எல்லாம் வல்ல ஒரு முழு முதற் பெம்மானை வழிபட்டு உய்தல் வேண்டு மாகலின் அவர்க்கு ஓர் அறிவு மன்றமும் (ஞான சபை) அமைக்கத் துணிந்தார். அடிகள் தில்லைப் பெம்மான் றிருவருட் காதலே பெரிதுடைய பெருமானாகலின், அவரது திருவுள்ளம் அம்பலவாணரது அருட்கூத் தின் கண்ணேயே முழுதும் அழுந்தியிருந்தது. இறை வன் கூத்து என்பது இறைவன் நினைப்பேயாம். ஒரு

* திருக்குறள் ௨௩ : ௫.

நூறுயிரம் வெள்ளியைக் கையில் உடைய செல்வன் ஒருவன் அதனை முழுவதுந் தனக்கு ஆனதொரு முயற்சியிற் செலவழித்துவிடுவானுனல், அவனைக் கண்டாரெல்லாரும் 'ஆ, இவன் தன் கையில் இருந்த பொருளைக்கொண்டு ஓர் ஆட்டம் ஆடி விட்டான்' என்று கூறுவது வழக்கம். அங்ஙனமாயின் இங்கு 'ஆட்டம்' என்பதன் கருத்து ஏதாயிருத்தல் வேண்டும்? உடம்பின் ஆட்டம் ஆகுமா? அன்று; மற்று அவனது நெஞ்சத்தின் அசைவே இங்கு ஆட்டம் எனக் கூறப்படுவதாயிற்று. நெஞ்சத்தின் அசைவென்பதும் நெஞ்சத்தின் நினைப்பேயாமன்றே! ஆதலால், எல்லாம் வல்ல நம் முழுமுதற் கடவுள் இவ் வெண்ணில்லாத உலகங்களையெல்லாந் தோற்றுவித்து அவைதம்முள் இவ் வெண்ணில்லாத உயிர்களையும் பிறப்பித்துத் தானும் உடனிருந்து அவைதம்மையெல்லாம் நொடிதோறும் இயக்கி வருகின்றமையின் அவனது ஆட்டமும் அவனது நெஞ்சத்தின் அசைவேயாகுமல்லாமல் வேருகாதென்று உணரல்வேண்டும். எல்லாம் வல்ல இறைவன் தனக்கு இயற்கையேயுள்ள அருட்டன்மையால் இங்ஙனமெல்லாம் அருட்செயல்கள் செய்தருளுகின்றமையின் இவ்வசைவினை 'அருள் அசைவு' எனவும் ஆன்ருேர் கூறுப. ஆகையால் 'அருள் அசைவு' என்பதும், அல்லது 'நெஞ்ச அசைவு' என்பதும், 'இறைவன் நினைப்பு' என்பதும், 'அருட்கூத்து' என்பதுமெல்லாம் இப்போது ஒன்றேயாதல் இனிது பெறப்படுதல் காண்க. எல்லாம் வல்ல இறைவன் தனது திருவுள்ளத்தில்

ஏதொன்றும் இரங்கி நினையானாயின் உலகத்தில் ஏதும் நிகழாது. "அவனன்றி ஓர் அணுவும் அசையாது காண்" என்னுந் தாயுமானச் செல்வரது பொன் மொழி இங்குப் பெரிதும் நினைவுகூரற்பாலது. இதனாலன்றோ,

"நாயகன் கண்ண யப்பால் நாயகி புதைப்ப எங்கும்
பாய்இரு ளாகி மூடப் பரிந்துஉல கினுக்கு நெற்றித்
தூயநேத் திரத்தி னாலே சுடரொளி கொடுத்த பண்பின்
தேயமார் ஒளிக ளெல்லாம் சிவனுருத் தேச தென்னார்"*

என அருள் வல்ல சான்றோர் திருமொழியும் பொருள் பொதிய எழுவதாயிற் றென்பது. இதனாலன்றோ, 'எந்நலமுமில்லா ஏதுமறியா ஏழை உயிர்கள் பொருட்டும் எல்லா நலங்களும் ஒருங்குடைய எல்லா அறிவும் ஒருங்குடைய தனக்கொப்பில்லா முழுமுதல்வன் இங்ஙனமெல்லாம் இமைதொறும் அருட் செயல்கள் புரிகின்றனனே' என்று அப் பெருமானது திருவருளாட்சியை உணருந் தனித் தவமுடைய மெய்யுணர்வினரெல்லாரும் அம் முதல்வனை ஒரு கூத்தப்பெம்மானாகவே திருவுளங் கொள்வாராயின ரென்பது. இறைவன் உண்மை இங்ஙனமிருத்தலாற்றான் அவனது இவ்வருளாட்சியையன்றி வேறொன்றனையும் அறியாத வள்ளற் பெருமானுக்குத் தில்லைத் திருக்கூத்தின்கண்ணேயே பெயராக் காதல் பெருக்கெடுப்பதாயிற் றென்க.

இனி இங்ஙனம் இறைவனைக் கூத்தப்பெம்மான் என விழைந்த சான்றோர் அவனது அருள் நினைவினை

* சிவஞான சித்தியார், சுபக்கம், க: ருஉ.

நுண்ணுணர்வில்லா மக்களும் நன்குணரல் வேண்டிக், கூத்து நிகழ்த்துவான்போல் அவனுக்கு ஒரு திருவுருவங் கற்பிப்பாராயினர். உலகத்தில் உருவுள்ள பொருள்கள் தீயும் நீரும் நிலனுமேயாம்; வளியும் வெளியுங் கண்ணுக்குக் காணப்படா. தீயை யொப்ப நீரும் நிலனும் இறைவனியற்கைக்கு அத்துணை இணக்கமுடையவாகா. இறைவன் உருவாயுந் தோன்றுவான்; அருவாயும் அமைவான்; அருவுருவாயும் விளங்குவான்; திடுமெனத் தோன்றுவான்; சட்டென மறைவான்; அவன் மல வழுக்கினுல் என்ஞான்றும் பற்றப்படான். என்றும் பிறிதொன்றன் உதவியின்றித் தானே அசைவான். ஆனுல் நீரும் நிலனும் இன்ன இயற்கைகள் உள்ளன அல்ல. அவ்விரண்டும் என்றும் உருவுள்ள பொருள்களாகவே நிலைபெறும். சட்டெனத் தோன்றிச் சட்டென மறையும் இயல்பும் அவற்றின்பால் இல்லை. மேலும், அழுக்குகளால் அவை பற்றப்படும். பிறிதொன்றன் உதவி யின்றித் தாமே அசையமாட்டா. நீர் ஒரு சிறிது நெகிழ்ந்தசையுமாயினும், நிலத்தின் பற்றின்றி வெள்ளிடத்தில் அசையமாட்டாது. மற்றுத் தீப்பொருளோ வெனின், கண்ணுக்குக் காணப்படுகின்றமையின் உருவும், கையாற் பற்றப்படாமையின் அருவும் உடைய அருவுருவப் பொருளாயும், மற்றொருகால் எல்லாம் அவிந்து அவ் வருவுருவும் இல்லாததாயும் விளங்குகின்றது. சட்டெனத் தோன்றிச் சட்டெனமறையுந் தெய்வ இயல்பையும் நாம் அதன்பால் நேரிற் காண்கின்றோம். தன்பால் ஏதேனும் அழுக்குச் சேரின் அஃது அதனை எரித்துத் தானுந்

தூய்மை கெடாமல் என்றும் அழுக்கற்று விளங்குகின்றது. மேலுந் தீப்பிழம்பு தானேயும் அசையும். அதுவுமன்றி இறைவன் என்றும் ஒளிப்பொருளாய்த் துலங்கி உயிர்களின் மலவிருளை நீக்குகின்றமைபோல், தீயும் அங்ஙனமே ஒளிமிக்க பொருளாய் விளங்கி உலகத்தின் பாயிருளை ஒழித்து வருகின்றது. இன்னும் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் செந்நிறம் உள்ள ஆண் வடிவு ஒரு பக்கமும் நீல் நிறம் உள்ள பெண் வடிவு ஒரு பக்கமுமாய் ஒருங்கமைந்த ஓர் அருமைத் திருவடிவங்கொண்டு அம்மை யப்பராய் விளங்குகின்றது. அங்ஙனமே தீப்பொருளும் நீல் நிறத் தழலுஞ் செந்நிறத் தழலுங் கட்புலனாகும்படி ஒருங்கிணைந்து ஓர் அருமைப் பிழம்புருவமாய் ஒளிர்கின்றது. இங்ஙனமெல்லாம் மண் முதலான உலகத்தின் ஐம்முதற் பொருள்களுள்ளுந் தீப்பொருளே இறைவ னியல்புகளோடு பெரிதும் ஒத்திருத்தலின், பண்டு தொட்டே பொதுவாக உலகம் முழுமையுஞ் சிறப்பாக நந் தண்டமிழ் நாட்டினும் இத் தீயின் வாயிலாகவே இறைவன் வணக்கம் நிகழ்ந்துவரா நின்றது. இவ்வுண்மை,

“ துடிகொள்நேர் இடையாள் சுரிகுழன் மடந்தை
துணைமுலைக் கண்கள்தோய் சுவடு
பொடிகொள்வான் தழலில் புள்ளிபோல் இரண்டு
பொங்கொளி தங்குமார் பினனே ” *

“ பொன்னிறம் கட்டியினும் பூணினும் நின்றாற்போல்
அந்நிறம் அண்ணலும் அம்பிகையும்—செந்நிறத்தள்

* திருவாசகம், அருட்பத்து, ௫.

எந்நிறத்த ளாயிருப்பள் எங்கள் சிவபதியும்
அந்நிறத்த னாயிருப்பன் ஆங்கு" *

என நந்தஞ் செந்தமிழ் மாமறைகளிலெல்லாந் தெளி வாய் அருளிச்செய்யப்பட் டிருத்தல் காண்க. இங்ஙனம் இறைவன் தீப்பொருளையே பெரிதும் ஒத்துச் செந்நிற முடையனாய் விளங்குதலாற்றான் நந் தண்டமிழ்ச் சான்றோர் சிவன் என்று அவனை அழைப் பாராயினர். இராமலிங்கப் பெருமானுந்

"தீயோடு உறழுந் திருவருள் வடிவச் சிவனேயோ"
(சு, தனிப்பாடல்கள்)

எனப் பரிந்தழைப்பாரானார். ஆகையால் அடிகள் தாம் நிறுவ விரும்பிய அறிவு மன்றத்தில் மண்ணினுஞ் செம்பினுங் கூத்தப் பெம்மான் திருவுருவம் அமைத்து அவற்றின் வாயிலாய் அவனை வழிபாடு செய்வித்தலினும் பார்க்கத் தீக் கொழுந்து ஒன்றே அப் பெம்மான் திருவுருவமென அமைத்து அதன் வாயிலாய் வழிபாடு செய்வித்தலே சாலவுஞ் சிறந்த தென்று திருவுள்ளம் பற்றினர். பொன்னம்பலத்தில் விளங்குங் கூத்தப் பெம்மானைத் திருமாளிகையின் கண் விளங்குந் 'திருவளர் ஒளி' என்று தெய்வச் சேக்கிழார் கூறியருளுதலும் இங்கு நினைவுகூறற்பாலது.†

இவ்வாறாகப் பிள்ளைப் பெருமான் தமது ஆருயிர்த் தொண்டினைச் செயலளவிலுங் கொண்டு வர விரும்பி 'அறக்கூழ்ச் சாலை' ஒன்றும், 'பொது மறைக் கல்விக் கழகம்' ஒன்றும், 'அறிவு மன்றம்' ஒன்றும்

* திருக்களிற்றுப்படியார், எக.

† திருத்தொண்டர் புராணம், தடுத்தாட் கொண்ட, ௱௯.

ஓரிடத்தில் அமைக்கத் துணிந்தார். இறைவன் தனது திருக்கூத்தை இயற்றியருளும் இடம் வெளியே யாதலாற் பெருமானுந் தமது சாலையையுங் கழகத்தையும் மன்றத்தையும் ஒரு வெட்ட வெளியிலேயே அமைக்கக் கருதினார். மேலும் அடிகள் தமது இளமை தொட்டு இயற்கைத் தனி வெளியையே பெரிதும் விரும்பி வந்தனரென்பது அவரது அருள் வரலாற்றினின்றும் நன்கு புலனாகின்றது. ஆதலால், அடிகள் தாம் இதுகாறும் எழுந்தருளியிருந்த கருங்குழி என்னும் ஊருக்கு அண்மையில் தில்லை, கூடலை யாற்றூர், திருமுது குன்றம், திருவதிகை, திரு இரும்பை மாகாளம், திருப்பாதிரிப் புலியூர் முதலான திருக்கோயில்களுக்கும்; தென்பெண்ணையாறு, கெடில ஆறு, வெள்ளாறு, மணிமுத்தாறு முதலான நீர் நிலைகளுக்கும் நடுவில் உள்ள வடலூர்ப் பெரு வெளியையே தமது குறிக்கோள் நிறைவேறுதற்கு ஏற்ற இடமாகக் குறித்தருளினார்.

பிறந்தது தொட்டே பிள்ளைப் பெருமான் அனைவராலும் விரும்பப்பட்டு அவரெல்லார்க்கும் அருட்பெருந் தலைவராய் விளங்கி வந்தமையின் அடிகள் குறித்தருளிய வடலூர்ப்பெருவெளியில் அன்பர்களால் ஓர் அறக்கூழ்ச் சாலை உடனே அமைக்கப்பட்டது. அடிகள் தமது நாற்பத்து நான்காம் ஆண்டில் (பிரபவ, வைகாசிப், பதினோராம் நாள்) அச் சாலையில் எழுந்தருளினார். எழுந்தருளி உயிரிரக்கத்தைப்பற்றி இப்போது முதற் பிரிவாய் விளங்கும் விழுமிய தெளி தமிழ்க் கட்டுரையை விரித்தெழுதிச் சோற்றுக் கெ

டையை விளக்கி வற்புறுத்தினர். அஃது எல்லாரை யும் அத் திருப்பணியில் நன்கு ஊக்கிற்று. உடனே, நாளொன்றுக்கு ஆயிரக்கணக்காக அங்குத் திரண்ட மக்கட்குச் சில நாட்கள் உணவளிக்கப்பட்டது. அன்று தொட்டு இன்றுகாறும் ஆண்டுச் செல்வா ரெல்லார்க்கும் என்ஞான்றும் உணவளிக்கப்பட்டு வரு தல் யாவரும் அறிந்த தொன்றேயாம். சாதி சமய வேற்றுமைகளில்லாமல் எல்லாரும் ஒரே காலத்தில் ஒரே இடத்திற் கலந்தவாறு உட்கார்ந்து உண் ணல் வேண்டுமென்று அடிகள் அவ் வறக் கூழ்ச் சாலையில் திருத்தஞ் செய்தருளினர். பின் பெருமான் 'பொதுமறைக் கல்விக் கழகம்' ஒன்று ஏற்பாடுசெய்து, அதன் வாயிலாய் எல்லாருந் தமிழ் நன்மறைகள் ஓதி அன்பும் அறிவும் அருளிரக்கங்களும் விளங்கப் பெறு மாறு உடனிருந்து துணை புரிவாராயினர். அதன் பின்பு சில நாட்கள் கழித்து அறிவுமன்றமும் நிறுவத் தொடங்கினர். நன்மக்களின் அறிவாகிய மன்றத்தில் இறைவன் விளங்குதலால் வடலூரின்கண் நிறுவப் பட்ட மன்றம் 'அறிவுமன்றம்' எனப் பெயர் பெற்றது; அறிவின் முளைப்புக்கு இடமான நெஞ்சம் மணத்தின் முளைப்புக்கு இடமான மலர்போன்றலின் அவ்வறிவு மன்றமும் மலர்வடிவாக அங்கு அமைக்கப்பட்டது; மன்றம் தைத் திங்களிற் கட்டி முடிந்தமையால், அத் திங்களில் நல்ல நாள் எனப்படும் 'பூச' நாளில் ஒரு நிலைக்கண்ணாடியின் முன் முதல்வன் திருவடையாள மாகத் தீக்கொழுந்து ஒன்று நிறுவிப் பல்லாயிரம் நன் மக்களுக்கும் அதனைக் காட்டியருளி இறைவனுடைய

அருளியல்புகளை அடிகள் காட்சி முறையால் நேரே விளக்கியருளினார். இவ்வாறான அவ் வருட் காட்சியை ஒவ்வொரு தைப்பூச நாளிலும் மக்கள் பல்லாயிரக் கணக்காக ஆங்குத் திரண்டுசென்று இன்றுங் காணப் பெறுகின்றனர்.

அறிவு மன்றம் அமைக்கத் தொடங்கியதும் வள்ளற் பெருமான் வடலூருக்கு இரண்டு கல் தொலைவில் உள்ள மேட்டுக்குப்பம் என்னும் ஊரிற் சென்று ஒரு குடிலில் இருந்து தமது உணர்வை உள்ளுணர்வாய் நிறுத்தித் தவத்தில் அமர்வாராயினர். அமர்ந்து, அத் தவமுனைப்பால் தமது தூய அருள் நெஞ்சத்தில் வடலூரின்கண் அமைக்கப்படும் அறிவு மன்றத்தை ஒப்ப ஓர் உண்மையான அறிவு மன்றம் அமைந்து வர, அதனுள் இறைவன் அருண்முனைப்பைப் பெருமான் சுடருருவாகக் காணப்பெற்று இருள் நீங்கி இன்பம் பயப்பப் பேரா வியற்கையிற் படிந்து தேக்குற்றிருந்தனர். பின் அவ் வருட்பெரும் நிலையிலேயே தெளிவுற்றுத் தமது அகஞான மன்றத்தில் விளங்கிய அருட்பெருஞ் சோதியை வழுத்தி அடிகள் மிக நீண்டதோர் ' அருட்பெருஞ் சோதி அகவல் ' திருவாய்மலர்ந்தருளுவாராயினர். அடிகள் மேட்டுக் குப்பத்திலிருந்து அருட்சுடர் கண்டு திருவாய்மலர்ந்தருளிய ' அருட்பெருஞ் சோதி யகவ 'லும் வடலூரின் அறிவு மன்றமும் ஒரே காலத்தில் முடிவுபெற்றமையால், அவ்வாண்டுத் தைப்பூச நாளில் அருள் நன்மக்கள் எல்லாரும் அவ் வருட்பெருஞ்சோதி அகவலை உளமுருக நாவார ஓதிச் சுடருண்மை உணர்ந்து வடலூர்

மாளிகையின் திருவள ரொளியைக் கண்டு வழுத்து தற்கு நன்மையாயிருந்தது. அடிகள் அவ்வொளியின் பெருமையை,

“ ஒளியாகி உள் ஒளியாய் உள் ஒளிக்குள் ஒளியாய்
ஒளி ஒளியின் ஒளியாய் அவ்வொளிக்குளும் ஓர் ஒளியாய் ''
—(சு, இன்பத்திறன், அ)

எனப் பல அருட்பாக்களால் மேலும் விளக்கியருளு வர்.

பிரபவ ஆண்டு வைகாசித் திங்களின் முதலிலே யே அடிகள் கருங்குழியை விட்டு வடலூருக்கு எழுந் தருளினர். ஆனல் வடலூரின் அறிவு மன்றம் ‘பிர சோற்பத்தி’ ஆண்டு ஆனித் திங்களுக்கு மேலேயே அமைக்கப்படுவதாயிற்று ; அறிவு மன்றம் அமைக்கத் தொடங்கியதன் பின்னரேயே அடிகள் அருட்பெருஞ் சோதி அகவல் திருவாய்மலர்ந்தருளி யிருத்தலின், அதற்குமுன் இடையிற் கழிந்த நான்காண்டு ஒரு திங் கள்காறும் அவர் எதும் பாடல்கள் அருளிச் செய்யா மல் வாளா இரார். ஆதலால் அருட்பெருஞ் சோதி யகவலுக்குப் பின் ஆறுந் திருமுறையின்கட் காணப் படும் பதிகங்களிற் சில முதலிற் பாடியருளிய பின்ன ரே இவ் வருட்பெருஞ் சோதி அகவலை அடிகள் அருளிச் செய்தனராதல் வேண்டும். இங்ஙனம் பெருமான் திருவருட்பா அருளிச் செய்வதும், அருட் சுடர் விரிவுரைகள் நிகழ்த்துவதும், தனியே இருந்து இறைவனது திருவருள்விளக்கத்திற் படிந்திருப்பதும், அருகில் உள்ள சிவபெருமான் திருப்பதிகளுக்குச் சென்று திருவடி தொழுவதுமாக வடலூரின்கண் நான்

காண்டுகளும் மேட்டுக் குப்பத்தில் இரண்டாண்டு களும் விளங்கினர். அடிகள் திருமுதுகுன்றம் சென்று திருப்பதிகம் அருளிச் செய்தமைக்கு ஆரூர் திருமுறையின்கண் 'திருமுது குன்றப் பதிகம்' ஒன்று இருத்தலே உரிய சான்றாகும். அப் பதிகத்தின் ஈற்றடியில் "சூழ்ந்து வணங்கிக் கண்டேனே" என்று ஓர் உரை காணப்படுதலால் அடிகள் திருமுது குன்றத்துக்குச் சென்றே அத் திருப்பதிகத்தை அருளிச் செய்திருக்கின்றனரென்பது இனிது பெறப்படும்.

வடலூரில் விளங்கிய ஞான்று அடிகள் எய்திய உள்ளுணர்வுப் பேறுகளெல்லாம்,

"ஏய்ந்தபொன் மலைமேல் தம்பத்தி லேறி
ஏகவும் ஏகவும் நுணுகித்
தேய்ந்தபோ தடியேன் பயந்தவெம் பயத்தைத்
தீர்த்துமே லேற்றிய திறத்தை"

—(கூ, பிள்ளைப் பெருவிண்ணப்பம், கூஈ)

என்னுந் திருமொழிகளால் நன்கு விளங்கும். வள்ளலார் இக் காலங்களிற் செய்தருளிய அருட்பெருஞ் செயல்களும் பலவாகும்; பண்டுதொட்டே விளங்கும் நஞ் செந்தமிழ் மொழியினைப் 'பின்னால் எழுந்த தாழ்ந்த மொழி' யென்று வாய்க்கு எளிதாக அறியாமற் கூறிச் செருக்கினரெல்லாரும் அடங்கியொழியுமாறு 'தமிழ்' என்றொரு கட்டுரை எழுதியும், அகரத்தைப்பற்றி அறுபத்து நான்கு இலக்கணங்கள் விரித்தும் விளக்கியருளினர். கருங்குழியிலிருந்த போதே சித்தராய் விளங்கிய பெருமான் வடலூருக்கு எழுந்தருளிய பின் மேன்மேலும் பேரருட் சித்தராய் விளங்கியருளினர்.

"சித்திக ளெல்லாம் சிறந்திட உனக்கே தந்தன மெனஎன்
சென்னி தொட்டு உரைத்தனை"

(ரு, திருவடி முறையீடு, ரு)

என்னுந் திருவருட்பாத் திருமொழியை இங்கு நினைவு கூர்க.

இனி அடிகள் வடலூருக்கு எழுந்தருளிய பின்னும் எழுந்தருளுதற்கு முன்னும் நிகழ்ந்த பல வரலாறுகள் அவர் திருவாய்மலர்ந்தருளிய திருவருட்பாவினால் மட்டும் விளங்குகின்றன. அவற்றுட் சில வருமாறு :—

"புரிகின்ற வீட்டகம் போந்து அடிபட்டுப் புறங்கடையில்
திரிகின்ற நாய்க்கும் சிரிப்பாம்என் பாவிச் சிறுபிழைப்பை"

(க, திருவருண் முறையீடு, உஉரு)

"என் கருத்தறியாமற் கழறுகின்ற
தனக்கேளர்பாற் சென்று அடியேன் இதயம் தளர்வதெல்லாம்
நினக்கே தெரிந்தது" (க, திருவருண் முறையீடு, உஉச)

"தெருவிடத்தே விளையாடித் திரிந்தவெனை வலிந்தே
சிவமாலை யணிந்தனை" (ரு, பிரியேனென்றல், க)

"எந்தாய் ஒருநாள் அருள்வடிவின்
எளியேன் கண்டு களிப்படைய
வந்தாய் அந்தோ கடைநாயேன்
மறந்து விடுத்தேன் மதிகெட்டேன்"

(உ, திருவிண்ணப்பப் பதிகம், க)

இவை வள்ளலார் திருவொற்றியூரின்கண் இருந்தவரையில் நிகழ்ந்தவையாகும்.

"திருநெறிமெய்த் தமிழ்மறையாந் திருக்கடைக்காப் பதனால்
திருவுளங்காட் டியநாளில் தெரிந்திலன்இச் சிறியேன்

பெருநெறிஎன் னுளத்திருந்து காட்டியநாள் இருந்தே
 பிழைபடாத தெய்வமறை இதுவெனப்பின் புணர்ந்தேன்
ஒருநெறியில் எனதுகரத்து வந்தளித்த நாளில்
 உணராத உளவையெல்லாம் ஒருங்குணர்ந்து தெளிந்தேன்''
(உ, திருவருள் விலாசம், உ)

"திருவளர்திருவம் பலத்திலே அந்நாள்
 செப்பிய மெய்ம்மொழிப் பொருளும்
உருவளர்திருமந் திரத்திரு முறையால்
 உணர்த்திய மெய்ம்மொழிப் பொருளும்''
(சு, பிள்ளைப் பெருவிண்ணப்பம், ககச)

என்பன தில்லையிலும்,

"கால்மலர்என் தலைமீது தான்மலர அளித்தாய்''
(௬, அபராத மன்னிப்பு மாலை, ௬)

என்பது கருங்குழியிலும் நிகழ்ந்தவை.

"தீட்டரும் புகழ்சேர் திருவடித் துணைகள்
 செலுத்திய திருச்சிலம் பொலிநான்
கேட்டபோ திருந்த கிளர்ச்சியும்''

"நினது மலர்ப்
பாதந் தலைமேற் சூட்டியெனைப் பணிசெய்திடவும் பணித்தனை''
(சு, பிரிவாற்றமை, எ)

"பாதியிரவில் எழுந்தருளிப் பாவியேனை எழுப்பிஅருள் [ரூய்''
சோதி யளித்தென் உள்ளகத்தே சூழ்ந்து கலந்து துலங்குகின்
(சு, பிரிவாற்றமை, ൰)

"செய்வகை என்னெனத் திகைத்தேன் திகையேல் என்றொரு
 திருமேனி காட்டியெனைத் தெளிவித்தாய் நீயே'' [நாள்
(௬, பிரியேனென்றல், ரு)

"முன்னாளில் யான்புரிந்த பெருந்தவத்தால்
 முகமலர்ந்து மொழிந்தஅருண் மொழியை''
(சு, வாதனைக்கிரங்கல், ൰)

"நினையே
நேர்காண வந்தனமென்று என்மடிமேல் மலர்க்கால்
தாணிலைக்க வைத்தருளிப் படுத்திடநான் செருக்கித்
தாள்களெடுத்து அப்புறத்தே வைத்திடத்தான் நகைத்தே
என்நினைத்தாய் இவ்வளவு சுதந்தரம்என் மகனே
எனக்கிலையோ என்றருளி எனையாண்ட குருவே"

(சு, அருள்விளக்கமாலை, ௫௧)

"இவ்இரு நிலத்து இயல் அருளொளியால்
பூதநல் வடிவங் காட்டி" (சு, திருவடிப் புகழ்ச்சி, ௧௩)

"முன்பாட்டுக்
காலையிலே வந்து கருணையளித் தேதருமச்
சாலையிலே வாவென்றான் தான்"

(சு, பாமாலை ஏற்றல், ௫)

"கங்கணம்என் காத்தணிந்தாய்" (சு, திருவருட்கோடை, ௪)

"யான்பாட நீதிருத்த என்னதவம் செய்தேனோ"

(சு, தனிப்பாடல்கள்)

என்னும் இவையெல்லாம் அடிகள் வடலூரின்கண் இருந்தவரையில் நிகழ்ந்தவையாகும்.

இங்ஙனமெல்லாம் இராமலிங்க அடிகள் அரிய பெரிய திருவருட்செயல் உடையராய்த் திருவளரொளிக்கண் உள்ளந் திகழப்பெற்றமையின், அவருக்கு மும்மலவாற்றல் அடங்கி நின்றது. நின்றதும் அடிகள்,

"இவையெல்லாம் அந்நாள் உடையனே அலனே
இந்தநாள் இறைவநின் னருளால்
நவையெலாம் தவிர்ந்தேன் தூயனேன்"

(சு, அபயத்திறன், ௨௮)

என்று அருளிச்செய்து சிவபிரான் றிருவடிப் பேறொன்றையே விரும்பி நின்றனர்.

உலகமென்னுந் தீயில் விடுத்து மக்களின் மலத்தைப் பொசுக்கி அவ்வாற்றால் தூயராய்த் தலைப்பட்டு வருவாரைத் தமது திருவார்ந்த திருவடிக்கண் இருத்தித் தம் வண்ண மாக்கிக்கொள்ளுஞ் சிவபெருமான், அந்நிலைக்குத் தக்காராய் நின்ற நம் அருமை இராமலிங்க அடிகட்குந் தமது தண்ணார் அருளை வழங்கியருளினார். உடனே நம்மை யாள எழுந்தருளிய அருளொளி வள்ளலார் சீமுக ஆண்டுத் தைத் திங்களின் புனர்ப்பூசத்தன்று இராப் பதினைந்து நாழிகையில், மேட்டுக் குப்பத்துச் சித்திவளாகத் திருமாளிகையில், திருவருளால் தம் புலன்களின் உணர்வை உண்ணிறுத்தி ஒருநெறிய அரிய நிலையில் அமர்தலும், அவர்கள் பருவுடம்பு தானே கழன்று நின்றது. "நானானேன் தானானேன் நானுந்தா னும்ஆனேன்" (கூ, அனுபவநிலை) என்னுந் திருமொழியிற் கூறியாங்கு பெருமான் ஒருநிலை பெற்றவராய் மறைந்தருளினர். கழன்ற உடம்பும் ஆண்டே மறைந்தது. அது மறைந்த இடத்திற்றான், வள்ளற் பெருமான் ஆண்டு அடைந்த அருள் நிலைக்கு அறிகுறியாக அணையாத திருவிளக்கு ஒன்று வைக்கப்பட்டு இன்றும் வளர்ந்து கொழுந்தோடிப் பொலிகின்றது. ஓம் சிவம்.

எனவே, இராமலிங்க அடிகள் இத் தமிழுலகத்தில் ஐம்பது ஆண்டுகளும் மேலோர் ஐந்து திங்களும் விளங்கியருளின ரென்று அறிதல் வேண்டும்.

திருவருட்பா ஆராய்ச்சி

இராமலிங்க அடிகள் திருவாய்மலர்ந்தருளிய 'திருவருட்பா'வென்னுஞ் சைவத்தமிழ் அருள்நூலை எல்லாரும் அறிவர். சிவபிரான் ஒருவனையே முழு முதற் கடவுளாகத் தேறி வழுத்தும் வணக்கப்பாட்டுகள் ஏறக்குறைய இதன்கண் பத்தாயிரம் உள்ளன. அவை ஆறு திருமுறைகளாகப் பகுக்கப்பட்டு முந்நூற்றறுபத்தைந்து தலைப்புகட்கு மேலும் உடையவாயிருக்கின்றன. ஒவ்வொரு தலைப்புகளும் ஒரு வரம்பின்றி நூற்றுக் கணக்கான பாட்டுக்களும் பெற்றுள்ளன. இச் செந்தமிழ்ப் பாடல்கள் வெண்பா ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பாவாகிய பாவினத்தின் பல துறைகளாலும் இசைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றும் சொல் பொருள் இசை முதலிய எல்லாச் சுவைகளிலும் ஒன்றை யொன்று ஒவ்வாவாய், எந் நலங்களும் ஒருமிக்கக் கெழுமிக் கற்பார் நெஞ்சை இழுத்துச் சென்று சிவத்தின் திருவடிக்கண் அழுத்தி உருக்குந் தன்மையவாய் மிளிர்கின்றன. இவ்வகையாய் அமையப்பெற்ற அருட்பாவின் அப் பத்தாயிரம் பாடல்களையுந் திருவருளை முன்கொண்டு ஒருவாறு நோக்குகையில்,

"அடியேற்கு
அருளியது அறியேன் பருகியும் ஆரேன்
விழுங்கியும் ஒல்லகில்லேன்;
செழுந்தண் பாற்கடல் திரைபுரை வித்து

உவாக்கடல் நள்ளுநீர் உள்ளகம் ததும்ப
வாக்குஇறந்து அமுதம் மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன் " *

என்று நம் மணிவாசகப் பெருமான் தமக்குக் கைவரப் பெற்ற சிவவுணர்வு நிலையைக் கூறமுடியாது கூறுவதாகிய திருவாசகச் செழுமறையடிகள் கல்லினும் வன்னெஞ்சினேமான ஏழையேமுக்கும் ஒருவாறு ஒக்கும் என்பது மிகையாகாது.

திருவருட்பாவை அருளிச்செய்த இராமலிங்க அடிகள் இனச்சமய இழிவுகளை முழுதுந் தொலைத்து,

" அருளே நம் குலம் ; அருளே நம் இனம் ; அருளே நாம் "
(சு, அருட்பெருஞ்சோதி யகவல்)

என ஒழுகினாராவர்.

" தேவரின்
பேரருளை யென்போலப் பெற்றவரு மெவ்வுலகில்
யாருளர்நீ சற்றே யறை "
(சு, சமரச நிலை, கக)

என்று அடிகளே அருளிச் செய்தலால், அவர் எல்லாம் வல்ல இறைவன் திருவருளை முழுதும் விழுங்கித் தம் உடலுயிரெங்கும் அவ்வருளமிழ்து நிறைந்து தளதளவென வழிய நிலையில் இலகும் அருட்பழ முதல் வருமாவரென்பது இனிது வெளிப்படுதல் காண்க. ஆதலால் அவர் கனிந்து உமிழ்ந்த அருந்தமிழ்ப் பாக்களின் ஒவ்வொரு மொழியும் இறையருட் பிழிவைப் பயில்வார் நெஞ்சில் அறிதொறறியாமையாய் இனிப்ப இனிப்ப ஊறி ஊறிச் சொட்டுகின்றது. மேலும் இப்

* திருவண்டப்பகுதி, கசுஎ-கஎங.

பெரியார் தாம் அரிதிற் பெற்ற பேரருட்பேறு கொண்டு சிவத்தை இடையறாது சுவைபடப் பாடிப் பாடி மகிழ்வதில் அளவு கடந்த ஆவல் உடையவ ரென்பதும், அங்ஙனம் பாடும்பொழுதுந் தமது மெல் லுள்ளம் எரிகண்ட இழுதுபோல் உருகிக் கண்கள் வழி நீரென ஆறுய்ப் பெருகப் பாடி வழுத்தும் விழுமி யார் என்பதும் முறையே,

"பதம்பெறத்தேம் பழம்பிழிந்து பாலுநறும் பாகும்
பசுநெய்யுங் கலந்தெனப் பாடிமகிழ் வேனே"

(சு, அத்துவிதாநந்தத்தநுபவ விடையீடு, ௪)

"இருத்திக்கருத்தில் உன்தயவை
எண்ணுந்தோறும் அந்தோஎன்
இதயம்உருகித் தளதளஎன்று
இளகிஇளகித் தண்ணீராய்
அருத்திப்பெருநீர் ஆற்றொடுசேர்ந்து
அன்புப்பெருக்கில் கலந்ததுதான்
அதுவென்றொன்றுந் தோற்றாதே
அச்சோஅச்சோ அச்சோவே"

(சு, அமயங்கூறல், ரு)

என்னுந் திருவருட்பாத் திருமொழிகளால் நன்கு தெளியப்படும். இங்ஙனமெல்லாம் இராமலிங்க அடி களின் அருளுயிர்க் கடலில் எழுந்து அவரது விருப் பெனுங் குளிர்ங்காற்றிற் படிந்து குவிந்து கறுத்து இறைவன் றிருவடிமலையைத் தாவிக் குமுறி மழை யாய் விழுந்து செந்தமிழ் மண்சுவை ஊறித் திரண்ட தாலன்றோ அத் தெளிநீ ரமிழ்தத் திருவருட்பா, சைவச் செந்தமிழ்த் தீஞ்சுவை நனிபெரிதும் நிரம்பிய தாய்ச் சிறந்து விளங்குகின்றது. உலகத்தில் எழுந்த

எல்லா மொழிகளையும்விட மென்மையும் இனிமையுந் தழுவியொழுகுந் தமிழ் மொழியே அம் மென்மையும் இனிமையுங் கெழுமி யியலும் அருளியலை விளக்கு தற்கு ஏற்றதாகுமென்று அடிகள் அதன்கட் பாட விழைந்தமை,

"எந்தையுனைப் பாடிமகிழ்ந் தின்புறவே வைத்தருளிச்
செந்தமிழின் வளர்க்கின் றாய்" (௬, திருவருட்கோடை, ௬)

என்னும் அவரது திருமொழியால் இனிது விளங்கும்.

இனி, இவ் வருள்நூல் புதிது தோன்றியதால் அஃது இக்காலத்து இயற்கைக்கு ஏற்ப மிகவுந் தெளிந்த எளிய செஞ் சொற்களால் அருளிச் செய்யப்பட்டிருக்கின்றது. எனினும் பெரிது கற்றார்க்கும் ஊக்கந் தருங் 'காதரவு' 'புதம்' 'பொத்து' 'ஏட்டை' 'தெட்டு' 'விது' 'சனிப்பு' 'சோறு' 'சிவம்' முதலான அருஞ் சொற்களும் இதன்கண் இல்லாமல் இல்லை. பழமுத விலக்கியம் பயின்றார்க்கும் இவைதம்மை ஆராய்ந்து உரிய பொருளை வழியுடன் தேறுதல் அரிது. இங்ஙனமே, அரிதுணர் பொருளனவாய்த்

"தாவக்குகு குகுகுகுகுத் தாமேயைந்து விளங்கவணி"
(௧, இங்கிதமாலை, ௧௫௬)

"நீர்க்கு இசைந்த நாமநிலை
மூன்று கொண்ட பெயர்
போர்க்கு இசைந்தது அறியாப்
புன்னெஞ்சே-நீர்க்கு இசைந்தே
ஒன்று ஒன்று ஒன்று ஒன்று ஒன்று ஒன்று
ஒன்று ஒன்று தில்லை மணி
மன்று ஒன்று வானை மகிழ்ந்து"
(௩, நெஞ்சோடு கூறல், ௨)

"—தம்மை மதன்
மாமாமா மாமாமா மாமாமா மாமாமா
மாமாமா மாமாமா மா"
—(கூ, வேறு விலக்கு)

முதலான சில தனிப்பாடல்களும் இதன்கண் ஆங்காங்குந் தோன்றுகின்றன. இதன் சந்தப் பாடல்களெல்லாம் விந்தை பயப்பன. விறு விடையாகப் பாடாண்டிணை கூறும் இதன் இங்கித மாலை அறிஞர்க்கு விருந்தாக ஆசிரியரின் புலத்துறை விளங்க அமைந்துள்ளது. 'மான்ற மலத்தாக்கு' 'இற்றவள்' 'பனிமை' 'கண்மை' 'குளங்கொளக் கண்ணன்' 'கனியுஞ் சிலை' முதலியவாகப் புதிது சமைக்குஞ் சில சொல்லமைப்புகள் அடிகளின் ஆற்றலைக் காட்டுகின்றன. 'அங்கவிட்ட களம்' முதலிய பிரித்தற்கரிய சில சொற்றொடர்ப் புணர்ச்சிகளும் அங்ஙனமே. விடாது உயிரைப் பற்றிய மலம் அலைத்தும் அடங்கியும் நிற்றலால், அதை விளக்குதற்கு அங்ஙனமே விடாது வானத்தைப் பொருந்தி அலைத்தும் அடங்கியும் நிற்குங் காற்றை உவமையாகக் கொண்டு,

" வானம்விடாது உறுகால்போல் என்றன்னை
வளைந்துகொண்ட மானம் விடாது"
(க, திருவருண் முறையீடு, சக)

என்று அருளிச் செய்வர். முழு அறியாமையுடையதாதலால் ஆணவத்தை முழு இருட்டாகவும், அதனை நீக்குவதாலும் மறைப்பும் உடைமைபற்றி மாயையை விடியற்கால இருளாகவும் உருவகமாகக் கொண்டு, "ஆணவ இருள் போய் அழிந்தது கழிந்தது மாயை

மால் இரவு" (சு, திருப்பள்ளி யெழுச்சி, ரு) என்றும் அருளிச் செய்வர். இவற்றைப்போற் பற்பல உவமை உருவகங்கள் சில நூல்களிற்போ லல்லாமல் இயற்கை நலங் கனிந்து இயல்கின்றன. விண்ணப்பக் கலிவெண் பாவில் எதுகைத் திறம் எதிர்ந்து நிற்கின்றது.

அருட்பாவில் அருள் நலமே கனிந்து கனிந்து ஒழுகுதலின், அதற்கு ஏற்பக் "கொழுது" "செழுது" முதலான மென்தமிழ்ச் சொற்களும், "கொழிதரு மருவி பொழிதருந் தணிகை," "பொழில்சா ரெழில் சேர் தணிகா சலனே" "வாழையடி வாழை," "இள வேனின் மாலையாய்," "அருளே பழுத்த சிவதருவில் அளிந்த பழந்தந் தடியேனை" என்பவைபோல் மொழு மொழுவென வழுக்கி இயலும் இன்னோசைத் தொடர் களுமே அதன்கண் மிகுந்து தோன்றுகின்றன. சொற்களுந் தொடர்களுமே யல்லாமற் சொற்சுவை பொருட்சுவைகள் செய்யுண் முழுதுங் கெழுமி மிளிர் கின்ற இடங்களும் அருட்பாவிற் பெரும்பாலன.

" மாவீழ்ந்திடு விடையார்திரு மகனார்பசு மயின்மே
னீவீழ்ந்திட நின்றோரது கண்டேனென்ற னெஞ்சே
பூவீழ்ந்தது வண்டேமதி போய்வீழ்ந்தது வண்டே
நாவீழ்ந்தது மலரேகழை நாண்வீழ்ந்தது மலரே"

(ரு, பவனிச்சேருக்கு, க)

" தாழைப் பழம்பிழி பாலொடு சர்க்கரைச் சாறளிந்த
வாழைப் பழம்பசு நெய்க்நறுந் தேனும் மருவச்செய்து
மாழைப் பலாச்சுளை மாம்பழ மாதி வடித்தளவி
யேழைக் களித்தனையே யருளாரமு தென்றொன்றையே"

(சு, மாயை நீக்கம், உ)

என்னும் இனிய செய்யுட்களிரண்டும் இங்கு நினைவு

கூர்ந்து ஆராய்ந்து மகிழற்பாலனவாகும். இவ்வாறு நூன்முழுதும் மெல்லோசை தழுவி விழுமியது பயக்கும் பேரழகு தழைவதால் அடிகளின் அருள் பழுத்த செழுந்தமிழ் நூலை,

"இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
பரந்த மொழியா னடிநிமிர்ந் தொழுகினும்
தோலென மொழிப தொன்மொழிப் புலவர்" *

என்னுந் தொல்காப்பிய நூற்பாவின்படி தோலழகின் மேலதாய்க் கூறி மகிழ மெய்ப்புலவர் இழுக்கார். வள்ளலார் அருண்மொழிகளை நோக்க நோக்க, இயல்பாய் இயலும் பைந்தமிழோசை யழகை அவர் துறைபோகப் பலகாலும் உணர்ந்து உணர்ந்து அருளொடு புணர்த்து நெகிழ்ந்து இன்பூறிய பெரியார் என்பது விளங்குகின்றது. ஓசை இடை யற்றுப் போகாது வழுக்கியியலும் வண்ணம் அடிகள் எழுதியருளிய உரைநடைப் பகுதிகளைச் சிறிது உற்றுணருந் தீந்தமிழோசைப் பழக்கமுடையார்க்கும் இது விளங்குவதேயாம்.

இனி ஆசிரியர் சொல் வேறு பொருள் வேறு இலக்கியம் இவை இரண்டினும் வேறு என்பதுபட, "சொல் நிறைந்த பொருளும் அதன் இலக்கியமுமாகி" (சு, அருட்பிரகாசமாலை, கூ) எனப் பலவிடங்களிலும் பாடுவதும், அங்ஙனமே சொற்பொருள் அழகுகட்கு மேலும் அருட்பாவில் இலக்கிய அழகு என்பது பளிங்கில் நிழலெனத் துளும்புவதும் அவ்விலக்கியப் பயிற்சி வல்லார்க்குப் பெயராத பேரின்பம் பில்கு

* தொல், செய்யுளியல், உரு அ.

மென்பது ஒருதலை. அடிகள் இறைவனியலை விளக்கு தற்கு,

" உரைவளர் கலையே கலைவளர் உரையே
உரைகலை வளர்தரு பொருளே"
(சு, பதிவிளக்கம், க)

" என்னுளே அரும்பி என்னுளே மலர்ந்து
என்னுளே விரிந்த என்னுடை அன்பே
என்னுளே விளங்கி என்னுளே பழுத்து
என்னுளே கனிந்த என்னுடை அன்பே!"
(சு, அருட்பெருஞ்சோதி அகவல்)

என்பவை போன்ற சொற்றொடர்களை மேற்கொள்வ தெல்லாம் விளக்கமும் வியப்புந் தருகின்றன. உயிர்கள் சிவத்தை அடைதற்கு உரிய நெறி முறைகளை ஆசிரி யர் சொன்முறையிலேயே காட்டுந் திறம் மிகப்பெரிது.

"பார்த்தேன் பணிந்தேன் பழிச்சினேன் மெய்ப்புளகம்
போர்த்தேன்என் உள்ளமெல்லாம் பூரித்தேன்—ஆர்த்தேநின்று
ஆடுகின்றேன் பாடுகின்றேன் அன்புருவா னேன்அருளை
நாடுகின்றேன் சிற்சபையை நான்"
(சு, சிவானந்த நிலை, உ)

என்னுந் திருமொழியை உற்று நோக்குக. ஆணவ மலத்துக்கே சிறப்புப் பெயராக ஆசிரியர் 'தடை' என்னுஞ் சொல்லை அடிக்கடி வழங்கியிருப்பது நினைவு கூரற்பாலது. மறைகளை யெல்லாம் அடிகள் பாயிரம் என்கின்றார். (சு, வாதனைக் கிரங்கல், க) உயிரனுப வம், அருளனுபவம், சிவவனுபவம் என்னும் உண்மைப் பொருளியலைத் தொகைவிரிமுறையில் வள்ளலார்தெளி வுறுத்திய அருட்டிறனையும் அருட்கருத்தையுஞ் சமயப் பெரியார் கண்டு சாலவும் மகிழ்கின்றனர். (ச, ஆரு

டைய பிள்ளையார் அருண்மாலை, உ, ௩, ச, ரு) நிலை வேறு தெளியக்கூடாத அத்துணை அணுக்கம் வாய்ந்த வேதாந்த சித்தாந்தத்தின் உண்மை இயல்பையும் நுணுக்கத்தையுந் "துணிவுறு சித்தாந்தப் பெரும் பொருளே தூயவே தாந்தத்தின் பயனே" (சு, சிவா நந்தநிலை, க) என்று தெளிவாகத் திருவாய்மலர்ந்தரு ளும் வல்லமையை என்னென்பேம்! ஆசிரியர் தெய் வத்திருமூலரும் "தான் ஆன வேதாந்தம் தான் என்னும் சித்தாந்தம்"* என்று நுட்பமாய் அருளிச் செய்தமை காண்க.

இங்ஙனமே,

"அன்பு என்பதே சிவம் உணர்ந்திடுக எனஎனக்கு
அறிவித்த சுத்தஅறிவே!"

(சு, ஞானசம்பந்தர் தோத்திரம்)

"உருவாகியும் அருவினராகியும் உருவருவினராயும்......
ஒருவரே உளார் கடவுள் கண்டு அறிமினோ
உலகுளோர் உணர்வு இன்றி
இருவராம் என்றும் மூவரோயாம் என்றும்
இயலும் ஐவர்கள் என்றும்
எருவாய் உரைத்து உழல்வது என் உடற்குஉயிர்
இரண்டு மூன்று எனலாமே"

(சு, பதிநிச்சயம், க)

"எவ்விடத்தும் எவ்வுயிர்க்கும் இலங்கு சிவம் ஒன்றே
என் ஆணை என்மகனே இரண்டுஇல்லை ஆங்கே
செவ்விடத்தே அருளோடு சேர்த்து இரண்டெனக் கண்டு அறிநீ
திகைப்பு அடையேல் என்று எனக்குச் செப்பியசற் [குருவே"

(சு, அருள்விளக்கமாலை, அசு)

* திருமந்திரம் அ, ஆறந்தம், ௩.

“ மணம்உறு பொருள் இன்ப அமுதம் எனக்கு அளித்து ”
(௬, அருள்விளக்கமாலை, ௧௧)

“ நான்முகர்கள் மிகப்பெரியர் ஆங்குஅவரின் பெரியர்
நாரணர்கள் மற்றுஅவரின் நாடின்மிகப் பெரியர்
வான்முகத்த உருத்திரர்கள் மற்றுஅவரின் பெரியர்
மயேச்சுரர்கள் சதாசிவர்கள் மற்றுஅவரின் பெரியர்
மீன்முகத்த விந்துஅதனில் பெரிதுஅதனில் நாதம்
மிகப்பெரிது பரைஅதனில் மிகப்பெரியள் அதனில்
ஆன்முகத்தில் பரம்பரந்தான் பெரிதுஅதனில் பெரிதாய்
ஆடுகின்ற சேவடியார் அறிவார்காண் தோழி”
(௬, தத்துவமாலை, ௨௧)

“ ஆறுகோடியாம் சமயங்கள் அகத்தினும் அவைமேல்
வீறுசேர்ந்த சித்தாந்த வேதாந்த நாதாந்தம்
தேறும் மற்றைய அந்தத்தும் சிவம்ஒன்றே அன்றி
வேறு கண்டிலேன் கண்டிரேல் பெரியர்காள் விளம்பீர்”
(௬, உய்வகைகூறல், ௧)

“ திருநெறி ஒன்றே அதுதான் சமரசசன் மார்க்கச் சிவநெறி ”
(௬, வாய்ப்பறையார்த்தல், ௧௨)

“ பன்மார்க்கம் எலாம் பசைஅற்று ஒழிந்தனவே
சன்மார்க்கம் ஒன்றே தழைத்ததுவே—சொன்மார்க்கத்து
எல்லா உலகும் இசைந்தனவே எம்பெருமான்
கொல்லா நெறிஅருளைக் கொண்டு ” (௬, சுத்தசிவநிலை, ௨௧)

“ சேய்போல் உலகத்து உயிரையெல்லாம்
எண்ணிச் சேர்ந்துபெற்ற
தாய்போல் உரைப்பர் சன்மார்க்க
சங்கத்தவர் சாற்றும்எட்டிக்
காய்போல் பிறர்தமைக் கண்டால்
கசந்துஉள் கடுகடுத்தே
நாய்போல் குரைப்பர் துன்மார்க்க
சங்கத்தவர் நானிலத்தே ” (௬ திருவருட்பேறு)

"கருணையொன்றே வடிவாகிஎவ் உயிரும்தம்
உயிர்போல் கண்டுஞானத்
தெருள் நெறியில் சுத்தசிவ சன்மார்க்கப்
பெருநீதி செலுத்தா நின்ற
பொருள்நெறிசற் குணசாந்தப் புண்ணியர்தம்
திருவாயால் புகன்ற வார்த்தை
அருள்நெறிவேத ஆகமத்தின் அடிமுடிசொல்
வார்த்தைகள் என்று அறைவ ராலோ"

(சு, தனிப்பாடல்கள்)

"திருநிலைத்து நல்அருளொடும் அன்பொடும்
சிறப்பொடும் செழித்து ஓங்க
உருநிலைத்து இவண் மகிழ்வொடும் வாழ்வு
உறவந்து நின்அருள் செய்வாய்"

(சு, பிரார்த்தனை விளக்கம்)

"தூக்கமும் துயரும் அச்சமும் இடரும்
தொலைந்தன தொலைந்தன எனைவிட்டு
ஏக்கமும் வினையும் மாயையும் இருளும்
இரிந்தன ஒழிந்தன முழுதும்
ஆக்கமும் அருளும் அறிவும் மெய்அன்பும்
அழிவுஉறா உடம்பும் மெய்இன்ப
ஊக்கமும் எனையே உற்றன உலகீர்
உண்மைஇவ் வாசகம் உணர்மின்"

—(சு, சத்திய வார்த்தை)

"வள்ளல் உன்றனையே மதித்துஉன்
சாயையாப் பிறரைப் பார்த்ததே அல்லால்
தலைவ! வேறு எண்ணியது உண்டோ?"

—(சு, பிரிவாற்றாமை, ௫)

"தாய்தடை என்றேன் பின்னர்த் தாரமே
தடை என்றேன் நான்
சேய் தடை என்றேன் இந்தச்
சிறுதடை எல்லாம் தீர்ந்தும்
தோய்தடைச் சிறியேன் இன்னும்
துறந்திலேன் "

—(சு, தனித்திரு விருத்தம், க)

" ஓங்கார அணைமீது நான் இருந்த தருணம்
உவந்து எனது மணவாளர் சிவந்த வடிவுஅகன்றே
ஈங்காரப் பளிக்கு வடிவு எடுத்து எதிரே நின்றார்
இருந்தருள்க என எழுந்தேன் எழுந்திருப்பது என்நீ
ஆங்காரம் ஒழி என்றார் ஒழிந்திருந்தேன் அப்போது
அவர் நானே நான் அவரோ அறிந்திலன் முன் குறிப்பை
ஊங்கார இரண்டு உருவும் ஒன்று ஆனோம் ஆங்கே
உறைந்த அநுபவம் தோழி நிறைந்த பெரு வெளியே "

—(சு, தனிப் பாடல்கள்)

"ஒன்றாகி இரண்டாகி ஒன்று இரண்டின் நடுவே
உற்ற அநுபவ மயமாய் ஒளிர் அடிகள் "

(சு, அருட்பிரகாச மாலை, சசு)

என்று அடிகள் திருவாய்மலர்ந் தருளிய பெற லரும் பாக்களின் தெளிந்த பொருள்கள் எத்துணை நுண் மையவாய் இருக்கின்றன. இவற்றுள் முறையே 'அன்பே சிவம் என்னுங் கடவுள்' என்றும், 'கடவுள் ஒருவர், அவர் உருவாயும் அருவாயும் அருவுருவாயும் விளங்குவர்' என்றும், 'எங்கும் எவர்க்கும் சிவமே இறைவன், அவருக்கு அருளே உமையாதலின் அம்மை அப்பர் என அவர் இரண்டுருவாகத் தோன்றுவர், ஆனால், அவ்விரண்டுருவும் ஓருருவே யாகும்' என்

றும், 'இறைவன் அளிக்கும் பேரின்பம் ஒருவகையிற் சிற்றின்பத்தை ஒப்பதாம்' என்றும், 'சிவபெருமானே எல்லா மதங்களுக்குங் கடவுள்' என்றும், 'ஆகையாற் சிவ பெருமானை வழிபடுஞ் சிவ நெறியே எம் மதங்களுக்கும் பொதுவான சமரச சன்மார்க்கமென்னும் பொது நெறியாகும்' என்றும், 'அச் சிவப் பொது நெறியுங் கொல்லா நெறி யென்னும் அருள் நெறியையே கருத்தாக உடையது' என்றும், 'அப் பொது நெறியில் நிற்பார் எவ்வுயிர்க்குந் தாய் போல்வார், நில்லாதவர் நாய்போற் குரைப்பர்' என்றும், 'அங்ஙனந் தாய் போல்வார் அருளே உடம்பாகவும் ஒழுக்கமே பொருளாகவுங் கொண்டு உயிர் வாழும் இயல்பினர்' என்றும், 'திருவும் உருவும் நிலைத்து அன்பும் அருளும் செழித்தோங்க உயிர் வாழும் அவ் வாழ்வே வாழ்வாகும்' என்றும், 'மும்மலங்களும் அவற்றின் செயல்களும் ஆகாதன, ஆக்கமும் அறிவும் அன்பும் அருளும் அழிவுறா உடம்பும் மெய்யின்ப ஊக்கமும் ஆகிய இவையே மக்கட்கு ஆவன' என்றும், 'இவ்வகையான பெருவாழ்வு உடையார்க்கு உலகத்துச் செயல் வேறாய்த் தோன்றாது, அவர் இறைவன் அருளையே அதுவாகக் கண்டிருப்பர்' என்றும், 'இப் பெற்றித் துறவே மெய்த்துறவாகுமன்றி வாளா மனைவி மக்களைத் துறந்துவிடுதல் ஒரு துறவாகாது' என்றும், இங்ஙனந் துறந்து எங்கும் அருட்பார்வை ஒன்றே ஆயினார்க்குச் சிவமே அருளுருவ அறிவாசிரியராய் எழுந்தருளி அவரது மலத்தைத் துடைப்பர், துடைத்தலும் அவருக்கு ஆணவ ஆங்காரம் ஒழியும்,

ஒழியவே அவர் சிவமுந் தாமும் வேருகாதபடி ஒரு வரே எனக் கலப்பர், அக் கலத்தல் என்னும் வீடு பேற்ருல் எய்தும் இன்பம் அவர் உணர்வுக்கே தோன் ருத நிலையில் நுகரப் பெறும்' என்றும், 'அங்ஙனஞ் சிவ முந் தாமும் ஒன்ருயினுங் கலப்பில் மட்டும் ஒன்ருயும் பொருளில் இரண்டாயும் விளங்கி அவ் விரண்டின் நடு வேநிலைத்த இன்பம் நிகழத் தாம் அவ்வின்பத்தில்தேக் குற்றபடியாய் நீடு வாழ்வார்' என்றும் அடிகள் காட் டியருளிய அரும்பொருட் பகுதிகள் தம்மை உணர் வார்க்கு உலப்பிலா உவப்பும், வியப்பும், அம் முகத்தால் அவரது திருவடிக்கண் நெஞ்சம் பொருந்தி நெகிழு நிலையுந் தருகின்றனவல்லவோ!

இனி அடிகள் அருளிச்செய்த திருவருட்பாவென் னும் மாபெருநூல் முன்னோர் இலக்கியங்களின் பொன்மொழிகளையுந் தன்கட்கொண்டு திகழ்கின்றது. ஆசிரியர் சேக்கிழார் பெருமான் "திருவாளன் திரு நீறு"* என்று அருளிச் செய்திருத்தல்போல், அடி களும் 'திருவாளன்' என்னுந் திருமொழியைப் பல விடங்களினும் ஆண்டிருக்கின்ருர். தேவாரம் முத லான திருமுறை நூல்களிலிருந்தும் திருக்குறள் முதலான சங்கத் தமிழ்களிலிருந்தும் பல சொற்களும் பொருள்களுஞ் சொற்ருெடர்களும் வழக்குகளுந் திரு வருட்பாவின்கண் ஆங்காங்கும் எடுத்து வழங்கப்பட் டிருக்கின்றன. "குற்றஞ் செயினுங் குணமாகக் கொண்டு"† (கூ, அபயகீர்த்தனே) "முடியேன் பிறவே

* திருத்தொண்டர் புராணம், திருநாவுக், கஎ.

† சுந்தரர் தேவாரம், அந்தணளை, ௬.

னென"* (கூ, முறையிடு, அ) "முன்னைப் பொருட்கு முதற் பொருளே"† (ரு, செல்வச் சீர்த்திமாலை, ச) "கன்றுருரித்துப் பணிகொண்ட" ‡ (கூ, திருமுது குன்றம், குருதரிசனம், அ) "வேண்டுதல் வேண்டாமை யறல்வேண்டும்"$ (கூ, வேண்டுகோள், எ) என்னுந் திருவருட்பாவின் திருமொழிகளெல்லாம் இங்கு நினைவு கூர்ந்து உற்று நோக்கற்பாலனவாகும். இவற்றுள் எல்லாவற்றையும் விடத் திருவாசகச் சொற்களுந் தொடர்களும் பொருள்களும் பொருண்முறைகளுமே மிக்குப் பெருவரவினவாய் அருட்பாவின்கட் காணப் படுகின்றன.

"ஓதவுலவா ஒருதோழன் தொண்டருளன்"§

"தம்பெருமை தானறியாத் தன்மையன்"||

"ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த"¶

முதலிய திருவாசகச் சொற்றொடர்களை அப்படியே எடுத்து அடிகள் தமது அருட்பாவில் முறையே,

"ஓதவுலவா ஒருதோழன் தொண்டருளன்
சாதலொழித் தென்னைத் தாளுக்கி"
(கூ, துறையிரத்தல், கக)

"தன்பெருமை தானறியாத் தன்மையனே"
(க, அருள்விளக்கமாலை, கஉ)

* சுந்தரர், தேவாரம் 'பித்தாபிறை' ச.
† திருவாசகம், திருவெம்பாவை, க.
‡ ,, திருப்பூவல்லி, கூ.
$ திருக்குறள், கடவுள் வாழ்த்து, ச.
§ திருவாசகம், திருவெம்பாவை, ம.
|| ,, திருச்சாழல், கூ.
¶ ,, கோயிற்றிருப்பதிகம், க.

" ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
பேறளித் தாண்ட பெருந்தகைத் தந்தையே"
(சு, அருட்பெருஞ்சோதி அகவல்)

முதலியவாகப் பொன்னேபோற் போற்றி வழங்குதலால் நன்கு தெளியப்படும். இவ்வாற்ருல் நினைத்தபொழுதெல்லாம் பாமாலைகள் அருளிச் செய்யுந் திருவருட் பெற்றியரான அடிகள் திருவாசகப் பயிற்சியை என்ஞான்றும் மேற்கொண்டு அதன் சுவையை நன்கு நுகர்ந்தவராவ ரென்று துணிந்து கூறலாம். ஆதலாலன்றே நான்காந் திருமுறை இறுதியில் அடிகள் திருவாய்மலர்ந்தருளிய நால்வர் மாலையில் மாணிக்கவாசகர் மாலையில் மட்டும் பாடல் பத்துக்கு ஏனையவற்றிற்போற் குறைவாயன்றி ஆறு திருப்பாடல்கள் அவரது திருவாசகத்தின் மேலவாய் அடிகள் அருளிச்செய்ததூஉ மென்பது. இங்ஙனமே நம்பிகள் அருண்மாலையிலும் பத்துக்கு ஐந்து திருப்பாடல்கள் அவரது தேவாரத்தின்மேற் பாடப்பட்டிருப்பதும் அதனுல் அவருடைய தேவாரச் சொற்ருெடர்களே ஏனைத் தேவாரங்களினும் பார்க்கத் திருவருட்பாவில் மிகுந்து காணப்படுவதும் இங்கு நினைவுகூரற்பாலன. திருஞானசம்பந்தர் அருண் மாலையிலும், அப்பர் அருண்மாலையிலும் ஒவ்வொரு செய்யுளே அவரவர் தேவாரங்களைக் குறிப்பனவா யிருக்கின்றன.

" வாய்க்குப் பழத்தொடு சர்க்கரை வாங்கி வழங்குவனே "
(க, திருவருண்முறையீடு, கஉஉ)

" விட்டகுறை தொட்டகுறை " (சு, சிவதரிசனம், க)

என்று பல பழமொழித் தொடர்களும்,

"கண்ணாடி கவரிமுதல் உள்ளாடி இருக்க"
(சு, அநுபோகமாலை, உம)

என்று கண்ணாடி கவரியிட்டுக் கணவனை எதிர்பார்க்கும் மங்கையர் வழக்கமும் இன்னும் இவைபோல்வன பலவும் வள்ளற்பெருமான் எடுத்துக் கூறுதலும் இங்கு அறிதல் வேண்டும். இங்ஙனமே,

"அமையும் அண்டப் பகுதிபலவும் அணுவின் பொடியிலே"
(சு, மெய்யருள் வியப்புமாலை, ௩௨)

"நெருப்பிலே உருக்கும் நெய்யிலே சிறிதும்
நீரிடாத் தயிரிலே"
(சு, அவாவறுப்பு, ௨)

"வான்மாறினும் மொழி மாறாத மாறன்"
(ச, திருவருண்முறையீடு, கூ௨)

என்று அடிகள் இயற்கைப் பொருள் * உடல் நலப் பொருள் † வரலாற்றுப் பொருள் ‡ முதலியவற்றின் மேலும் ஆங்காங்கும் பல ஆராய்ச்சி உரைகள் அருளிச் செய்வர்.

இனி இவ் வருட்பெரும் பாட்டு நூலைப் பொதுவாக நோக்குகையில் முதல் ஐந்து திருமுறைகளும் அடிகள் சிவத்திடம் அருள்பெறு முறையையும் ஆறாந் திருமுறை அருள்பெற்ற நிலையையும் நன்கு தேற்றுவதைச் சற்று நுனித்தாராயவல்லார் கண்டு கொள்வர். ஆறாந் திருமுறையில் அடிகள் கடவுளியலையே மிக்கெடுத்து விளக்குதலானும் இவ்வுண்மை நன்கு தெளியப்படும். ஆராக் காதலி ஒருத்தியை ஒப்ப இறைவன் திருவருளாட்சியை எவ்வெவ்வகையாகச்

* Science † Hygiene ‡ History

சலிப்பப்பாடலாமோ அவ்வளவும் நம் அருளொளி வள்ளலார் பாடிப் பாடி மகிழ்ந்தார். ஒரு வரம்புட்பட்டுத் திட்டமான எண்ணிக்கையில் நில்லாமல் நூற்றுக்கணக்கான செய்யுட்கள்கூடச் சில தலைப்புகளில் நிற்றலாலும், ஒத்தும் இசையும் ஒத்தொழுகப் பல செந்தமிழ்ப் பண்களும் கும்மி கண்ணி முதலிய பல இசையுளிகளும் அருட்பாவின்கட் காணப்படுகின்றமையாலும் இவ்வியல்பு இனிது விளங்கும். மேலும், உலகத்தில் உள்ள எல்லா மக்களின் எல்லா உணர்வுகளையும் அடிகள் தமவாகக்கொண்டு எல்லாம் வல்ல முழுமுதற் பெம்மானிடம் முறையிடுவதுபோல் திருவருட்பாவை அருளிச் செய்திருத்தலால், எந்நிலையிலுள்ள மக்களும் இவ்வரும்பெருந் திருவருட்பாவின் செழுந்தமிழ்ப் பாடல்களை நாவார நெஞ்சுருகப் பாடி இறைவன்பால் முறையிட்டு அருள் பெறுதற்கு ஏற்றதாயிருக்கின்றது. ஆதலால் நம் அருமைத் தமிழ் மக்கள் அனைவரும் இத் தென்னாட்டின் தவப்பயனாய் எழுந்து இத்துணைச் சிறப்பாய் நங் கையகத்தே விளங்கும் இத் தெய்வத் திருவருட்பாவை நாடோறும் நெஞ்சுருக ஓதும் பெரும்பேறு பெற்று எல்லாம் வல்ல நீலமேனி வாலிழை பாகத்து நம் முழுமுதற் செம்மேனியம்மான் றிருவருள் மாந்தி உய்வாராக!

முற்றும்

அருஞ்சொற் பொருள்

பக்கம்

௨. தூங்கும் - மிகும் ;
எத்தெடுத்து - புகழுரை கூறி ;
வேய்வகை-மூடியவகையாய் ; மறைவாய்.
௩. தோய்ந்து - அழுந்தி ;
௪. பொடித்து - சிலிர்த்து;
தேக்கினர் - திளைத்தார்;
௫. மதலை - குழந்தை ;
பரசி - வழுத்தி; ஏத்தி;
௬. கைம்மிகல் - அளவுக்கு மேல் மிகுதல் ;
௭. தண் அளி - குளிர்ந்த அருள் ;
பொதிந்த - நிறைந்த ;
௮. துறும - நெருங்க;
௰. உலப்பு - முடிவு
௧௧. ஆன்றடங்கிய - அறிவகன்று ஆணவம் அடங்கிய ;
வெருவி - அஞ்சி ;
தேட்டு-செல்வம், துன்பம், முயற்சி ;
௧௪. வெருட்டுவது - அச்சுறுத்துவது ;
௧௫. மீதூரப் பெற்ற - மிகப் பெற்ற ;
ஒருவும் - நீங்கும் ;
௧௭. திண்ணியராய் - உறுதியுடையராய் ;
காழ்ப்பு - திண்மை ;
௧௮. மீதூர்ந்து - மிகுந்து ;
சேவை - வழிபாடு ;
௧௯. எல் - பகல் ;
கடைப்பிடி - செயல் முடிக்குந் துணிவு ;
வல்லி - பெண் ;

௨௰. விதுவிதுப் பெய்தல் - விரைதல்; ஈண்டுக் காட்சிக்கு விரைதலென்க ; "காட்சி விதுப்புத் தலைமகனைக் காண்டற்கு விரைதல்" ('பரிமே, திருக்குறளுரை, ௧௧௮-ம் அதிகாரம்')
ஆரா - அமையாத ;
௨௬. ஒவுறுத-அழிதலில்லாத;
ஒன்றுவது - பொருந்துவது ;
தொடக்கு - துன்பம் ;
௨௮. இந்து - (வடசொல்) நிலா ;
பரித்திரள் - குதிரைக் கூட்டம் ;
பூழியர்கோன் - பாண்டியர் மன்னன் ;
வார - ஒழுக ;
௨௯. ஈர்த்து - இழுத்து ;
௩௰. தெள் - தெளிவு ;
உரு - உருவம் ;
நகை - புன்னகை ;
௩௧. பேரா - நீங்காத ;
௩௯. மாந்துதற்கு - பருகுதற்கு ;
௪௨. பிணங்கிடுவர் - மாறுபடுவர் ;
௪௩. தட்டமிட்டு-கைகொட்டி;
இடுக்கு - இடுக்கண் ;
௪௭. விழுமிய - சிறந்த ;
௪௮. நிரல்பட-வரிசைப்பட ;
தெருள் - தெளிவு ;
௫௰. உறுத்துவிக்கும் - காட்டுவிக்கும் ;
மலைவு-தெளிவின்மை ;

ருக. கிளத்தல் - சொல்லல்; பையுள் - துன்பம்; மிகுகழி - மிகவும் மிகுந்த; இதுபோல் வதை 'மீமிசைச் சொல்' என்பர். கழறல் - கடிந்துரைத்தல்; கடிற்றெதிர் மறுத்தல் - கடிந் துரைத்தலை எதிர் மறுத்தல்;

ருங. வாய்வது - பொருந்துவது;

ருரு. காவி - நீலமலர்; களத்தான் - கழுத்தையுடைவன்; சிவன்;

ருசு. நீரர் - நீர்மையுடையர்;

ருஎ. விறைக்க - முறைப்பாயிருக்க; விதிர்த்து - சிலிர்த்து; ஒறுப்பு - தண்டனை;

சுக. குடிப்பிறப்பு - குடிமை, ஆவது பெருந்தன்மை; விழுப்பம் - பெருமை; நாண் அணி—நாணமென்னும் அழகு;

சுஉ. ஆற்றுவார் - பொறுப்பார், ஈண்டுத் துன்பம் பொறுத்துத் தவஞ் செய்வாரை உணர்த்திற்று; ஆற்றல் - இங்கு வல்லமை;

சுச. நயப்பால்-மகிழ்ச்சியால்; பாய் - பரவிய;

சுஎ. தேசது - (வடசொல்) ஒளியுடையது; பெயரா - நீங்காத;

சுகூ. பொடி - திருநீற்றுப் பொடி;

எங. தனக்கேளர் - செல்வம் உடைய நண்பர்;

எஅ. பிழிவு - சாறு;

எகூ. அருத்தி - அன்பு;

அய. காதரவு - அச்சம்; புதம் - அறிவு; பொத்து - மூடு; எட்டை - துன்பம்; தெட்டு - களவு; விது - நிலா; சோறு - வீடுபேறு;

அக. புலத்துறை - அறிவின் எல்லை; மான்ற - மயக்கமான; இற்றவள் - இல்லாள்; பனிமை - தண்மை; கண்மை - கண்ணோட்டம்; குளங்கொளக் கண்ணன்-தேவர்கோன்; கனியுஞ் சிலை - பழனி மலை; அல்இட்ட - இருளான;

அஉ. மாழை - குளிர்ந்த அளவி - கூட்டி;

அச. ஆர்த்து - ஆரவாரித்து;

அரு. எருவாய் - எருவாதற்கே உரியாய்; ஆவது வீணனவராய்; எனலாமே? - எனலாமோ? இது வினா.